இந்தி நாடகப் பனுவல்

(ஆடி மாதத்தில் ஒரு நாள்)

முனைவர் காமாட்சி தரணிசங்கர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இந்தி நாடகப் பனுவல்

(ஆடி மாதத்தில் ஒரு நாள்)

முனைவர் காமாட்சி தரணிசங்கர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

கலாநிலையம் டி.என்.சேசாசலம் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : திரு. பரணீதரன்)
வரிசை எண் : 9

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Āṭi mātattil oru nāḷ
Author	:	Dr. Kamatchi Dharanisankar Hindi Translator Jipmer Hospital, Pondicherry
General Editor	:	Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	644
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	vi + 130
No. of Copies	:	1200
Price	:	Rs. 50/- (Rupees Fifty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Tamil Translation of a play by Mohan Rakesh

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

மோகன் ராகேஷ் 1958இல் இந்தியில் எழுதிய நாடகமான 'ஆஷாட் கா ஏக் தின்' (ஆடிமாதத்தில் ஒருநாள்) என்பதற்கு 1959இல் சங்கீத நாடக அகாதெமி விருதுஅளித்துப் பாராட்டியது. காளிதாசார் எனும் புகழ்மிக்க மகாகவி மீது மக்கள் பலநிலைகளில் கற்பனைக்கதைகள் புனைந்திருந்த அடிநிலையினைத் தொட்டுப் புனைந்துரைக்கப்பட்ட நாடகப் பிரதியாக அது அமைந்திருந்தது. காளிதாசர் மோகன் ராகேஷுக்குச் சாதாரண கவியாகத் தெரிய வில்லை. மாறாக, ஆக்க சக்திகளின் பிரதிநிதி என்கிறார். காளிதாசரின் மேகதூதம் எனும் காவியத்தின் முதல் வரியே 'ஆடி மாதத்தில் ஒரு நாள்' என்பதுவே இங்கே மொழிபெயர்க்கப் பெற்றுள்ள நாடகத்தலைப்பாக அமைந்துள்ளது.

அரையும், குறையும் எனும் இவரது நாடகப்பிரதி பூரண வாழ்க்கை என்பது மனிதரால் வாழ முடியாது எனும் கருத்தினை முன்வைத்துத் தன் மனைவி தன் நண்பருடன் நட்பு வாழ்க்கை கொள்வதனை முன் வைத்து எழுதப்பட்டுள்ளது. மனித அக உணர்வுகளை முன்வைத்துப் புனையப்பட்ட ஒரு நாடகப் பிரதியாக இது அமைகிறது. அரசன்னம் எனும் நாடகம் புத்தர் பெருமானைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ளது. மாற்றான் தாயின் சகோதரன் நந்தன் தனது அரச வாழ்க்கையைத் துறந்து துறவு வாழ்க்கைமேற் கொண்டு தீட்சை பெற விழையும் மனது கொள்ளும் 'அலை பாய்தல்' உணர்வினை மையமாக வைத்து எழுதப்பட்ட பிரதியாக அமைகிறது.

(புராதனம்) மரபு	x	நவீனம்
வரலாறு	x	நவீனம்
உளவியல்	x	நவீனம்

எனும் பார்வைகளில் இவரால் எழுதப்பட்ட மூன்று நாடகங்களையும் நாம் ஆய்வு செய்துகாண இடமுண்டு. தமிழ்ச் சூழலில் இந்தி நாடக ஆசிரியருள் பெயர்பெற்ற மோகன் ராகேஷ் அவர்களது நாடகப் பிரதிகளுள் ஒன்றான ஆடிமாதத்தில் ஒருநாள் என்னும் பனுவலைத் தமிழுக்கு மொழிபெயர்த்து நாடக ஆய்வினைப் பல நிலைகளில் ஒப்பீடு செய்து காண வழி வகை

செய்யும் வழியை எம் நிறுவனம் இந்நூலினை அமைத்துத் தந்துள்ளதில் மகிழ்ச்சி கொள்கிறது.

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச்செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

எனும் பாரதியின் வாக்கு இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இம்மொழிபெயர்ப்பு நூலாசிரியர் நாடகத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். வானொலி, தொலைக்காட்சி நாடகங்களில் அனுபவங்கள் கொண்டவர். இந்திய நாடகப் பிரதிகள் பலவற்றைப் படித்தறியும் இந்திமொழி அறிவு கொண்டவர். இவரது நவீன நாடகப் பிரதிகள் குறித்த ஆய்வு நூலாக அமைகிறது. இந்தி மொழி நாடகம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பணி பாராட்டுக்குரியது. மொழி பெயர்த்து ஆய்வுக்குட்படுத்தியுள்ள சிந்தனை இந்நூலில் பொதிந்துள்ளது. நூலாசிரியருக்கு எம் பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர்கள் திருமதி எ.ம. லட்சுமி மற்றும் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் குறிப்பு

முனைவர் காமாட்சி தரணிசங்கர் புதுச்சேரியைச் சார்ந்தவர். பி.காம். பட்டப் படிப்பைப் புதுச்சேரியில் முடித்துவிட்டு மைசூர்ப் பல்கலைக்கழகத்தில் இந்தி மொழியில் முதுகலைப் பட்டம் பெற்றவர்.

இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியலில் முதுகலைப் பட்டம் ஒன்றையும் மதுரைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழக நாடகத் துறையில் தமிழ் நாடகங்களை இந்தி நாடகங்களோடு ஒப்பிட்டு முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

புதுவை வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களிலும் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்திலும் பணிபுரிந்து தற்போது புதுவை ஜிப்மர் மருத்துவ மனையில் இந்திமொழிப் பிரிவில் முதுநிலை இந்தி மொழிபெயர்ப் பாளராகப் பணியாற்றி வருகிறார்.

முனைவர் காமாட்சி அவர்கள் கடந்த இருபது வருடங்களாக வானொலி நாடகங்கள் எழுதி வருகிறார். அவற்றில் பல புதுச்சேரி மற்றும் சென்னை வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகி உள்ளன. இந்தி மொழியிலிருந்து நாடகங்களையும் சிறுகதைகளையும் தமிழாக்கம் செய்யும் இவருடைய அரியபணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சிறுகதைகள், பழமொழிக்கதைகள் பல வானொலி ஒலிபரப்பு மூலம் வெளியாகி வருகின்றன.

பொருளடக்கம்

என்னுரை	1
"ஆஷாட் கா ஏக் தின்" மோகன் ராகேஷ்	7
நாடகம் பற்றி ஓர் அறிமுகம்	
தமிழ் நாடக வரலாறு	11
இந்திய நாடகங்கள்	21
நவீன இந்தி நாடகம்	24
நவீன இந்தி நாடக உலகில் மோகன் ராகேஷ்	29
நாடகங்கள் பெறும் இடம்	
நவீன இந்தி நாடக வரலாற்றில் மோகன் ராகேஷ்	37
பெறும் இடம்	
ஆடி மாதத்தில் ஒரு நாள்	39
அடிக்குறிப்புகள்	129

என்னுரை

இலக்கிய ஆராய்ச்சியில் சமகாலத்தில் வாழ்ந்த இருமொழி நாடக ஆசிரியர்களின் படைப்புகளை ஆராய்ச்சிக்கு உட்படுத்துவதன் வாயிலாக இருமொழி இலக்கியத்தின் தன்மைகள், அதில் பிரதிபலிக்கும் சமுதாய உண்மைகள், உளவியல் கூறுகள், மொழிநடை முதலியவற்றை ஆராயவும், அறியவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ஆராய்ச்சி களுக்கு எல்லை வகுக்க இயலாது. காலத்தின் தேவை நவீனத்துவத்தின் வளர்ச்சி என்ற இரு தண்டவாளங்களின் துணையுடன் இதன் பயணம் தொடர்ந்து முடிவில்லாமல் போய்க் கொண்டே இருக்கிறது. ஒரு படைப்பைத் திறனாய்வு செய்வதென்பது எளிதில் புலப்படாத கூறுகளை மதிநுட்பத்துடன் ஆராய்ந்து காண்பதாகும்.

ஒரே மொழியிலான இரண்டு நூல்களை, இரண்டு ஆசிரியர்களின் நூல்களை ஒப்பாய்வு செய்யப்படுவதைப் போல இரண்டு மொழிகளிலுள்ள நூல்களும் இரண்டு ஆசிரியர்களின் நூல்களும் கூட இவ்வகை ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. சமகாலத்தில் வெவ்வேறு மொழிகளில் படைப்புகளைத் தந்துள்ள ஆசிரியர்களின் படைப்புக்களை ஆய்விற்கு உட்படுத்தவதில் சில சிக்கல்கள் உள்ளன. இருவரிடமும் ஒப்பிடத்தகுந்த கூறுகள் இருந்தால் மட்டுமே ஒப்பிடுதல் ஆசிரியர் களிடமும் காணமுடியும். அதே போன்று பொதுவான மானிடக் கூறுகள் இரு ஆசிரியர்களின் படைப்புகளில் இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம்.

புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தில் நாடகத் துறையில் நான் முனைவர்பட்ட ஆய்வை மேற்கொண்ட பொழுது ஒப்பாய்விற்கான அதே சிக்கல் எனக்கும் ஏற்பட்டது. தமிழில் இந்திரா பார்த்தசாரதி நாடகங்களை ஒப்பாய்விற்கு எடுத்துக்கொள்வது என்று முடிவானபோது இந்தியில் இவருக்கு இணையாகப் படைப்பிலக்கியம் படைத்துள்ள எழுத்தாளரைக் கண்டறிவது மிகவும் கடினமாக இருந்தது. ஏனெனில் இந்தி நாடகப் பிரதிகள் இங்கு நமக்குக் கிடைப்பதில்லை. இதற்குச் சிரமப்பட வேண்டியிருந்தது. இந்தி நாடகப் படைப்பாளிகளின் பிரதிகள் கைக்கெட்டாத நிலையில் திரு. இந்திரா பார்த்தசாரதி நாடகங்களுக்கு இணையாக இந்தியில் நாடகப் படைப்பாளியைத் தேர்வு செய்வது

மிகமிகச் சிரமமாக இருந்தது. இந்திரா பார்த்தசாரதி முழு அளவிலான பன்னிரண்டு நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றை

(1) புராணத் தொன்மைகளை நவீனப்படுத்தி எழுதுதல்,

(2) வரலாற்றை நவீனப்படுத்தி எழுதுதல்

(3) பொதுவான சக நாடகங்கள்

என்ற வகைப்பாட்டில் பிரிக்கலாம் என்று ஒரு ஆய்வாளர் நிறுவிய கருத்தை நான் என் ஒப்பாய்விற்கு எடுத்துக்கொள்ள என் ஆய்வு நெறியாளர் கூறியபொழுது இதே கூறுகள் கொண்ட இந்தி நாடகப் படைப்பாளரைத் தெரிவு செய்வது மேலும் சிக்கலாக இருந்தது. எனினும் முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்ற தாரக மந்திரம் பொய்ப்பதில்லை. என் ஒருவருட முயற்சிக்குப் பிறகு புதுதில்லியிலிருந்து பல இந்தி நாடக ஆசிரியர்களின் நாடகப் பிரதிகளை நண்பர்கள் மூலமாகவும்... பதிப்பாளர்கள் மூலமாகவும் பெற்றேன். அந்நாடகப் படைப்பாளர்களின் அனைத்து நாடகப் பிரதிகளையும் வாசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதோடு என் ஆய்விற்கு உரிய நாடக ஆசிரியரையும் தேர்வு செய்யும் முயற்சி வெற்றிபெற்றது. மோகன் ராகேஷ் தன் வாழ்நாளில் மொத்தம் மூன்று முழுநீள நாடகங்களை மட்டுமே எழுதியுள்ளார். தெய்வாதீனமாக இந்த மூன்று நாடகங்களும் இந்திரா பார்த்தசாரதியின் மேற்கூறப்பட்ட வகைப்பாட்டில் அடங்குவனவாக இருந்தன.

திரு. மோகன் ராகேஷ் அவர்களின் மூன்று நாடகங்களில் இரண்டைச் சாகித்திய அக்காதெமி விருதுபெற்ற திருமதி சரஸ்வதி ராம்நாத் அவர்கள் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். ஆனால் மற்றொரு நாடகமான 'ஆஷாட் கா ஏக் தின்' என்ற நாடகம் தமிழில் இன்னும் மொழியாக்கம் செய்யப்படவில்லை என்று தெரியவந்தது. இதை என் ஆய்வு நெறியாளரிடம் தெரிவித்தபொழுது 'ஆஷாட் கா ஏக் தின்' என்ற நாடகத்தை முதலில் தமிழில் மொழியாக்கம் செய்து பின்புதான் உங்கள் ஆய்வை மேற்கொள்ள முடியும் என்று கூறிவிட்டார்.

இங்கே... இந்தச் சமயத்தில் மற்றொரு விசயத்தையும் நான் உங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். நான் முதன்முதலில் முனைவர்பட்ட ஆய்விற்காக "வானொலி நாடகம் மேடை நாடகம் – ஓர் ஒப்பாய்வு" என்ற தலைப்பில்தான் புதுவைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு பெற அனுமதி பெற்று ஆய்வை ஓராண்டுக்குத் தொடர்ந்து மேற்கொண்டேன். ஆனால் ஒரு வருடம் கழித்த பின்பு எனது முனைவர் பட்ட செயற்குழு உறுப்பினர்கள் நான் இருமொழியிலும் முதுகலைப் பட்டம் பெற்றிருப்பதை அறிந்து..... 'நீங்கள் இந்தத் தலைப்பில் ஆய்வு

மேற்கொள்வதைவிட இந்தி நாடகம் – தமிழ் நாடகம் குறித்து இதுவரை நமது தமிழ்மொழியில் எவரும் ஆய்வு மேற்கொள்ளவில்லை. அந்த ஆய்வை இரு மொழியும் அறிந்த நீங்கள் நிச்சயமாக மேற்கொள்ள முடியும் என்று கூறி ஒரு வருடத்திற்குப் பிறகு மறுபடியும் எனது முனைவர்பட்ட ஆய்விற்கான தலைப்பைத் 'தமிழ் நாடகம், இந்தி நாடகம் – ஓர் ஒப்பாய்வு' என்று மாற்றி அமைத்தனர். முனைவர்பட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஒரு வருடம் கழித்துத் தலைப்பு மாற்றப்பட்டு... இந்தி நாடகப் பிரதிகளைத் திரட்டும் முயற்சியில் மேலும் ஒரு வருடம் சென்றோட எனது நெறியாளர் மோகன் ராகேஷின் நாடகத்தை முதலில் தமிழில் மொழியாக்கம் செய்யக் கேட்டுக் கொண்டபொழுது... எனது முனைவர் பட்ட ஆய்வைத் தொடராமல் விட்டுவிட வேண்டியதுதான் என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டேன். இருந்தும்.... மனிதன் ஓர் ஓரத்தில் இரண்டு வருடம் எடுத்த முயற்சிகள் வீணாகக் கூடாது என்ற வைராக்கியத்துடன் உடனே "ஆஷாட் கா ஏக் தின்" என்ற மோகன் ராகேஷின் நாடகத்தை "ஆடி மாதத்தில் ஓர் நாள்" என்ற பெயரில் தமிழில் மொழியாக்கம் செய்து.... இரண்டே வருடத்திற்குள் என்னுடைய முனைவர் பட்ட ஆய்வேட்டைப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்து விட்டேன்.

ஆய்வுகளும், ஆய்வேடுகளும், அறிவு மட்டுமன்று அதற்கு ஆதாரமான மொழியும் முன்னேற வழிவகுக்கின்றன என்பது கண்கூடான உண்மை. என்னுடைய "தமிழ் நாடகம், இந்தி நாடகம் – ஓர் ஒப்பாய்வு" என்ற முனைவர் பட்ட ஆய்வேடே இருமொழி எழுத்தாளர்களின் நாடகப் பிரதிகளை ஒப்பீடு செய்த தமிழ் மொழியின் முதல் ஆய்வாகும். குறிப்பாக இந்திமொழி நாடக ஆசிரியர்களின் நாடகப் பிரதிகள் இதுவரை தமிழ்மொழியில் ஒப்பீடு செய்யப்படவில்லை. இந்த முனைவர்பட்ட ஆய்வின் முயற்சியில் ஒரு நல்ல நாடகப் பிரதியை நம் தமிழ் மக்கள் வாசிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றேன் என்று நினைக்கும்பொழுது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. பலரும் ஆய்வேட்டைப் பாராட்டியபொழுது மனதிற்கு நிறைவாக இருந்தது.

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழியாக்கம் செய்வதென்பதும் ஒரு கலையோ மொழியாக்கத்திற்கென்று சில அபரிமிதமான இரசனையும்... திறமையும் வேண்டும். ஒரு மூலப் பிரதியைப் படைப்பதைவிட அந்தப் படைப்பை மொழியாக்கம் செய்வதென்பது கடினமாக அமைந்து விடுகிறது. மூலத்தின் தன்மையைச் சிதைக்காமல் ஒரு படைப்பை அதன் படைப்பாக்கம், நடை அதே தன்மையுடைய மூலத்தின் பிரவாகம் மொழியாக்கத்திலும் வெளிப்படுமாறு... உள்ளதை

உள்ளபடியே... அப்படியே அர்த்தம் பிறழாமல்... படிப்பவர்கள் மனங்கொள்ளத்தக்க வகையில் மொழியாக்கம் செய்வது என்பது மிகப் பெரிய விசயமே. மூலப்படைப்பின் வெளிப்பாடே மொழியாக்கம் செய்த படைப்பிலும் வெளிப்பட வேண்டும். இங்கே மொழியாக்க மொழியின்.... செழுமையும் முக்கியம்.

> மொழியாக்கம் என்று சொல்லிவிட்டுக் கதைக்கருவைச் சிதைப்பது மூல மொழி ஆசிரியருக்கு மொழிபெயர்ப்பாளர் செய்யும் துரோகமாகும்.

என்று எப்பொழுதோ படித்த ஞாபகம். எனவே நான் இந்த நாடகத்தை மொழியாக்கம் செய்தபொழுது... மூலமொழி ஆசிரியரின் உணர்வுகளை நம் தமிழ்மொழியில் எவ்வளவு சிறப்பாக... அர்த்தம் பிசகாமல் அப்படியே மொழிபெயர்க்க முடியுமோ அப்படியே தந்துள்ளேன். தன் மொழிபெயர்ப்பில் வெற்றி பெறக்கூடிய மொழிபெயர்ப்பாளரும் ஒரு ஆற்றல்மிக்க படைப்பாளி என்பதில் ஐயம் இல்லை.

> ஒரு மொழியிலிருந்து தன் தாய்மொழிக்குப் படைப்பு இலக்கியங்களை மொழிபெயர்த்துக் கொடுப்பவர்கள் தங்கள் தாய்மொழியின் மீது கொண்ட காதலாலும், பக்தியாலுமே அம் மாபெரும் பணியைச் செய்திருக் கிறார்கள். தங்களது தாய்மொழிக்குத் தொண்டாற்றி இருக்கிறோம் என்று திருப்தி அடைந்தவர்களே அவர்கள். யாரிடமும் நன்றி விசுவாசத்தை எதிர்பார்த்து அவர்கள் இந்த வேலையைச் செய்யவில்லை. ஒரு சிறந்த படைப்பைத் தன் தாய்மொழிக்குக் கொண்டு வந்துவிட்டோம் என்ற ஆத்மதிருப்தி இருக்கிறதே, அதைவிடவா பெரியது எழுத்தாளர்களுக்குக் கிடைக்கும் பணமும் புகழும்.

என்று மொழிபெயர்ப்பாளர்களைப் பற்றிச் சரஸ்வதி சம்மான் மற்றும் சாகித்திய அக்காதெமி பரிசு பெற்ற பேராசிரியர் திரு. மனோஜ்தாஸ் ஆகியோரின் கூற்று இங்கு மனங்கொள்ளத்தக்கது. மேலும் இவர் **மொழிபெயர்ப்பு என்பது தவம் செய்வதைப் போன்றது** என்று குறிப்பிடுகிறார். ஒரு மொழிபெயர்ப்பாளரின் முதல் கடமை தன் தாய் மொழிக்குத்தான் அறிந்த பிறமொழியின் இலக்கியப் படைப்பை மொழியாக்கம் செய்வதே...!

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்பதற்கிணங்க

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில்
பெயர்த்திடல் வேண்டும்

என்ற மகாகவி பாரதியின் பொன்மொழி... கனவு... நனவாக்கப்பட வேண்டும். அதற்குப் பல பிறமொழிப் படைப்புக்கள் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட வேண்டும்.

இந்தச் சமயத்தில் இன்னொரு விசயத்தையும் மிக வருத்தத்துடன் பதிவு செய்ய விரும்புகிறேன். நான் முனைவர் பட்ட ஆய்விற்காக இந்தி நாடகப் பிரதிகளையும், இந்தியிலிருந்து தமிழுக்கு மொழியாக்கம் செய்யப்பட்ட நாடகப் பிரதிகளையும் பல நூலகங்களிலும் மற்றும் கடைகளிலும் தேடி அலைந்தேன். தமிழ்நாட்டின் இந்தி நாடகப் பிரதிகள் ஒன்று கூடக் கிடைக்கவில்லை இந்தியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட விரல்விட்டு எண்ணக்கூடிய ஒன்றிரண்டு படைப்புக்களே நூலகங்களில் கிடைத்தன. இந்திமொழியில் நல்ல பல படைப்பிலக்கியங்கள் இருந்தும் அதை வாசிக்க நம் தமிழ் மக்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறதே என்று மனம் வருத்தப்பட்டேன். அப்பொழுதே முடிவு செய்துவிட்டேன். என்னால் இயன்றவரை இந்தியிலிருந்து தமிழுக்குப் படைப்பிலக்கியங்களை மொழியாக்கம் செய்துதர வேண்டும் என்று. அதன் முதல் முயற்சியாக நான் மொழிபெயர்த்த "ஆடி மாதத்தில் ஒரு நாள்" என்ற இந்த நாடகத்தை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஒரு திறனாய்வு நூலாக வெளியிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்த இதன் இயக்குநர் டாக்டர் கே.ஏ. குணசேகரன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கமான மேடை நாடகங்களிலிருந்து விடுபட்டுச் சிந்தனைச் செறிவும், அறிவுத் தேடலை ஆர்ப்பரிக்கும் பல உத்திகள் கொண்ட புதிய நாவல் போக்குகளை உள்ளடக்கிய நவீன நாடகப் படைப்பு முயற்சிகளும் மேடை ஏற்ற முயற்சிகளும் நாளுக்கு நாள் பெருகிவரும் சூழலில் இளைய சமுதாயத்தினருக்குப் பிறமொழிப் படைப்பின் வளம் பற்றிய அறிவை அறியச் செய்வதில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் மொழிபெயர்ப்பாளர்களே. இந்த நவீன யுகத்திற்கு ஏற்றவாறு பல்மொழி நாடகப் படைப்பாளர்களின் நாடகப் பிரதிகளைப் பகுப்பாய்வு செய்வது,

ஒற்றுமை, வேற்றுமைகளை வெளிக்கொணர்வது நவீன நாடகத்துறைக்கு மிகவும் இன்றியமையாத தேவையாகும். அக்கருத்தில் மோகன் ராகேஷின் "ஆஷாட் கா ஏக் தின்" என்ற நாடகம் "ஆடி மாதத்தில் ஒரு நாள்" என்ற தலைப்பில் மொழியாக்கம் செய்யப்பட்டு இந்த நூலில் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மோகன் ராகேஷின் இந்த நாடகம் இந்தியாவில் மட்டுமின்றிப் பல மேலை நாடுகளிலும் மேடை ஏற்றப்பட்டுள்ளது. வாஷிங்டன் மாகாணத்தில் இதை மேடையேற்றம் செய்த பொழுது பலரது பாராட்டையும் பெற்றதோடு இந்நாடகத்தைப் பார்த்தவர்கள் பலரும் "ஒரு வித்தியாசமான நாடகத்தைப் பார்க்க நேரிட்டது எங்களது பாக்கியமே" என்றனர். இந்தி நாடகத்தை நேஷனல் ஸ்கூல் ஆப் டிராமாவின் இயக்குநராக இருந்த திரு. அல்காசி அவர்கள் தனது இயக்கத்தில் பலமுறை மேடையேற்றியுள்ளார். அது மட்டுமின்றித் திரு. ஓம் சிவபுரி, திரு. கிரீஸ் சர்ணட் போன்றவர்களும் இந்த நாடகத்தைத் தங்களது இயக்கத்தில் மேடையேற்றியுள்ளனர். அப்படிப்பட்ட இந்த நாடகம் பிரதி நாடகத்துறை மாணவர்களுக்கு ஒரு படிப்பினையாக என்னால் ஆன ஒரு சிறு முயற்சி.

இதை நூலாக வெளியிட உதவிபுரிந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு என் வணக்கமும் நன்றியும்.

காமாட்சி தரணிசங்கர்

"ஆஷாட் கா ஏக் தின்"
மோகன் ராகேஷ் நாடகம் பற்றி ஓர் அறிமுகம்

மோகன் ராகேஷ் இந்தி இலக்கிய உலகிற்கு முதன்முதலில் ஒரு சிறுகதை எழுத்தாளராக அறிமுகமாகிப் பின்னர் நாவலாசிரியராகவும் அதன் பின் நாடகாசிரியராகவும் நிலைபெற்றார். ராகேஷ் தன்னுடைய காலத்தையும் தனது சுற்றுச்சூழலையும் இணைத்தே அனைத்தையும் எழுதியுள்ளார். ஒரு மனிதன் தனது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் எழுதுவதே உண்மையான எழுத்தாகுமென அவர் கருதினார்.

மோகன் ராகேஷின் இயற்பெயர் மதன்மோகன் குக்வானி என்பதாகும். 1944ஆம் ஆண்டு ராகேஷ் எழுதிய "நன்ஹி" (சிறியது) அவரது முதல் கதையாக இருக்கக்கூடும். அப்பொழுது அவருக்கு வயது பத்தொன்பது. ராகேஷின் தொகுப்புகளிலிருந்து அவரது நண்பர் திரு. கமலேஷ்வர் இதை எடுத்து 1973இல் மோகன் ராகேஷின் நினைவிதழாக வெளிவந்த "ஸாரிகா" என்ற பத்திரிகையில் வெளியிட்டார். நன்ஹி கதையில் ராகேஷ் என்ற பெயர் பலதடவை இடம்பெற்றுள்ளது. இந்தப் பெயர் அப்பொழுதே அவர் மனதில் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தமையால் காலப்போக்கில் அவரது இயற்பெயருடன் இணைந்துவிட்டது.

ராகேஷின் முதல் நாடகமான "ஆஷாட் கா ஏக் தின்" – 1958இல் எழுதப்பட்டது. இந்த நாடகத்தின் மூலம் ராகேஷ் ஈட்டிய புகழ் வேறெந்த எழுத்தாளருக்குக் கிடைக்கவில்லை. 1959இல் அவரது முதல் நாடகத்திற்கே சங்கீத நாடக அகாடமியின் முதல் விருது கிடைத்தது.

"ஆஷாட் கா ஏக் தின்"னின் கதை மகாகவி காளிதாசரின் வாழ்க்கையுடன் தொடர்புடையது போல் தோற்றமளிக்கிறது. உண்மையில் இது மகாகவி காளிதாசரின் உண்மை வாழ்க்கையின் நாடகமாகத் தெரியவில்லை. இது ஒரு வரலாற்று நாடகமன்று. எனவே வரலாற்றுக் குறிப்புக்களை இதில் தேடுவது வீண்வேலை என்று ராகேஷ் குறிப்பிடுகிறார். மேலும் காளிதாசரைப் பற்றிய எந்தக் கருத்துக்கும் சான்று கிடையாது. அவர் வாழ்ந்த காலம், ஆரம்ப வாழ்க்கை, கல்வி, பயிற்சி, பிற்கால வாழ்க்கை முதலியவற்றைப் பற்றிப் பல வதந்திகள் நிலவுகின்றன. தன்னுடைய கற்பனையையும் சொந்தக் கருத்துகளையும்

கொண்டு ராகேஷ் காளிதாசரின் வாழ்க்கை, இலக்கியம், எண்ணங்கள் முதலியவற்றைத் தம்முடைய காலத்து இலக்கியம், எழுத்தாளர்கள் மற்றும் அரசாங்கம் ஆகியோருடன் இணைத்து மிகவும் பரிவுடனும், அனுதாபத்துடனும் சித்திரித்துள்ளார். இக்கதைக்கான கற்பனையின் மூலக்கரு காளிதாசர், என்ற போதிலும், நிகழ்ச்சிகள் முக்கியமாக அவரது காதலி மல்லிகாவைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளன.

"ஆடி மாதத்தில் ஒரு நாள்", அடை மழையில் இயற்கை இனிமையாகக் குளித்துக் கொண்டிருக்கும்போது நாடகம் ஆரம்பிக்கிறது. வெளியே மழையானாலும், உள்ளே காளிதாசனைப் பற்றிய மென்மையான அன்புள்ளத்தோடு மல்லிகா வருகிறாள். அவளது தாய் அம்பிகா, காளிதாசனுக்கும் மல்லிகாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிணைப்பைப் பற்றிக் கவலைப்படுகிறாள். தன்னைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் காளிதாசன் மல்லிகாவை ஏற்றுக்கொள்ள மாட்டான் என்பது அம்பிகாவின் கணிப்பு. அப்போது உஜ்ஜைனியிலிருந்து இராசதூதர்கள் காளிதாசனை அழைக்க வருகிறார்கள். காளிதாசன் முதலில் போவதைப் பற்றி யோசிக்கிறான். மல்லிகா அவனைப் போகச் சொல்கிறாள். இதற்கிடையே விலோம் அங்கே வந்து காளிதாசனைக் கண்டபடி ஏசிப் பேசுகிறான். அவன் ஒரு வம்புக்காரன். விலோம் மல்லிகாவிடத்தில் அன்பும், அம்பிகாவிடம் நல்லெண்ணமும் உடையவன்.

எல்லோரும் எடுத்துச் சொல்லியதின் பேரில் காளிதாசன் உஜ்ஜைனிக்குப் புறப்பட்டுச் செல்கிறான். அம்பிகாவின் மனம், வீடு, உடல்நலம் எல்லாமே நலிந்து போகின்றன. மல்லிகாவும் உள்ளம் உடைந்து காண்கிறாள். பல ஆண்டுகளுக்குப் பிறகு காளிதாசன் காஷ்மீரத்திலிருந்து திரும்பும்போது அந்த வழியே செல்கிறான். அதற்குள் அவன் இராசபுருசனாய் இருக்கிறான். இராசகுமாரி பிரியங்குமஞ்சரியைத் திருமணம் செய்துகொண்டு மாத்ருகுப்தன் என்ற பெயரால் அழைக்கப்படுகிறான். அவன் தானாக மல்லிகாவைச் சந்திக்கச் செல்லவில்லை. ஆனால் பிரியங்குமஞ்சரி அவளைத் தேடிச் சென்று தன்னுடன் தலைநகருக்கு அழைத்துச் சென்று அரசாங்க அதிகாரி யாருடனாவது திருமணம் செய்து வைக்க விழைகிறாள். அம்பிகாவும், மல்லிகாவும் இதைக் கேட்டு உள்ளூர மனம் உடைந்து போகின்றனர்.

நாட்கள் நகர்கின்றன. அம்பிகா காலமாகிறாள். ஆதரவற்ற மல்லிகா வாழ்தல் வேண்டி விலைமாதாகிறாள். விலோமிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறாள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. ஆனால் அவள் மனதால் காளிதாசனை வரித்த

நிலையிலிருந்து மாறவில்லை. அங்கே அவன் நிலைபெற்று வாழ்கிறான். திடீரென ஒருநாள் காளிதாசன் வருகிறான். ஆடி மாதத்தில் ஒரு நாள் அடைமழை பெய்து கொண்டிருக்கும்போது, அவன் தன் மன ஆழத்தில் அவள் குடியிருப்பதைப் பற்றிக் கூறுகிறான். அவன் மீண்டும் மல்லிகாவை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறான். ஆனால் உள்ளிருந்த அவளது பெண்ணின் அழுகுரல் அவனைத் தடுக்கிறது. எதிர்காலத்தில் இன்ப வாழ்க்கை வாழ விரும்பும் காளிதாசனை மல்லிகாவின் நிகழ்காலம் நடுங்கச் செய்கிறது.

"ஆனால், காலம் மிகவும் வலிமையுடையது. எப்போதும் அது யாரையும் எதிர்பார்ப்பதில்லை. சென்று கொண்டேயிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே காளிதாசன் சென்றுவிடுகிறான். ஆரவாரிக்கும் மேக முழக்கங்களிடையே மல்லிகா தனது நிகழ்காலத்தைக் குறித்து எண்ணமிட்டபடி, துயரத்தோடு நின்று கொண்டிருக்கிறாள். இத்துடன் நாடகக் கதை முடிவு பெறுகிறது.

"ஆஷாட் கா ஏக் தின்"னில் காளிதாசன் போதிய விவாதத்திற்குரிய விசயமாக விளங்குகிறான். "காளிதாசன் என்னைப் பொறுத்தமட்டில் ஒரு சாதாரண மனிதனல்ல, ஆக்க சக்திகளின் பிரதிநிதி" என்கிறார் ராகேஷ். ஆனால் நம்மால் அதை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. அவர் வரலாற்றுப் புகழ் பெற்ற காளிதாசர் ஆவார். நாடகத்தில், வரும் சில சம்பவங்கள், அவருக்குச் சூட்டப்பட்ட மாத்ருகுப்தர் என்ற புதுப்பெயர் முதலியன மிக முக்கியமானவை. மகாகவி காளிதாசர் எழுதிய நூல்களும் காளிதாசரின் வாழ்க்கை நிகழ்ச்சியும், மல்லிகா, அம்பிகா, விலோம் முதலிய பாத்திரங்களும், ராகேஷ் தனது கற்பனையில் படைத்தவையாக இருக்கலாம். ஆனால், இவர் தன்னையே மகாகவி காளிதாசராகப் படைத்துள்ளார் என்று கருத இடமுள்ளது. காளிதாசுடைய சந்தேக சுபாவம், தன்னைப் பற்றிய சிந்தனைகள், பலவீனமான மனோபாவம் ஆகியன இவரது பண்புகளோடு பெரிதும் ஒத்துள்ளன. காளிதாசரைப் பற்றி உறுதியான செய்திகள் மிகச் சிலவே என்பது சரியன்று. அப்படியானால் பரந்து விரிந்த இலக்கியங்கள் படைக்க வல்லமை படைத்தவனை இத்தனை வலிமையற்றவனாகவும், கோழையாகவும் காட்டவேண்டிய தேவையென்ன? முதல் இரண்டு அங்கங்களில் வர்ணிக்கப்படும் காளிதாசனைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

ஆனால் மூன்றாவது அங்கத்தில் நிகழ்கால உண்மைகளைப் பார்க்காமல் கண்மூடித்தனமாய் எதிர்கால இன்ப வாழ்க்கையைக் கற்பனை செய்பவனையும், அவனுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யத்

துடிக்கும் மல்லிகாவைப் பற்றி அறிந்த பின்னும் அவளைத் தயவு தாட்சண்யமின்றித் துறந்து செல்லும் இதயமற்றவனாக உள்ள காளிதாசனைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. காதல் – தியாகம் முதலியவற்றின் உயர்ந்த நிலைகளைச் சித்திரிக்கும் மகா காவியங்களைப் படைத்தளித்த மகாகவி காளிதாசன் இத்தனை குறுகிய மனமுடையவனாக இருக்க முடியாது. காளிதாசனின் பாத்திரத்தின் இந்தப் பலவீனம் மல்லிகாவின் முன்னே அவனை மிகவும் தாழ்த்தி விடுகிறது. நாடகம் முடிந்தபிறகு காளிதாசன் எங்கோ மறைந்து போகிறான். கண்முன்னே அழியாமல் நிற்பவள், அழுது அரற்றும் மல்லிகாதான் – தோற்றுப்போய் உடைந்து நிற்கும் மல்லிகாதான் நிலைத்து நிற்கிறாள்.

"ஆஷாட் கா ஏக் தின்" என்ற வரி மகாகவி காளிதாசரின் "மேகதூதம்" காவியத்தின் தொடக்க வரி ஆகும். அந்த வரியையே மோகன் ராகேஷ் இந்த நாடகத்திற்குத் தலைப்பாக அமைத்துள்ளார்.

தமிழ் நாடக வரலாறு

உலகத் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றாகக் கருதப்படும் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற முக்கூறுகளைக் கொண்ட முத்தமிழாக அறிஞர்களால் போற்றப்பட்டு வருகிறது. தமிழ் இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் கலந்து காணப்படும் ஒரு மொழியாக இருப்பதால்தான் இது முத்தமிழ் என்று அழைக்கப்படுகிறது. தொன்மை வாய்ந்த இத்தமிழ் மொழியில் நாடகம் இருந்ததற்கான சான்றுகள் பெருமளவில் காணக்கிடக்கின்றன.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்[1]

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். நாடக வழக்கு என்பதற்குத் தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'புனைந்துரை வகை'[2] எனப் பொருள் கூறுகிறார். தொல்காப்பியர் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியலில்,

நகையே, அழுகை, இளிவரல், மருட்கை
அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை[3]

என்று எண்வகை மெய்ப்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மெய்ப்பாடு என்பதற்குப் பொருள் விளக்கம் தருவதாக அமையும்.

உய்த்துணர் வின்றித் தலைவரும் பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்[4]

எனச் செய்யுளியலில் இலக்கியத்திற்குரிய ஒரு கூறாகத் தொல்காப்பியரால் குறிக்கப்படும் மெய்ப்பாடு. மெய்ப்பாட்டியலில் மெய்யின் காணப்படுகின்ற உணர்ச்சிக் குறிப்புகள் பற்றிப் பேசுவதால் நாடகத்திற்குரிய மெய்ப்பாடாகவே பெரிதும் கருதப்பட்டுள்ளது என அறிய முடிகிறது.

உய்ப்போன் செய்தது காண்போர்க்கெய்துதல்
மெய்ப்பாடென்ப மெய்யுணர்ந்தோரே[5]

எனும் செயிற்றியனாரால் எழுதப்பட்ட செயிற்றியத்தை மேற்கோள் காட்டு கின்றார் அடியார்க்கு நல்லார். இதனாலும் மெய்ப்பாடு என்பது நாடகத்திற்கே பெரிதும் பயன்பட்டு வந்துள்ள ஒன்று எனக் கருத இடமுள்ளது.

தொல்காப்பியரின் ஆசிரியராகக் கருதப்பெறும் அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் வகுத்த முன்னோர்களில் பழமையானவராகக் கருதப்

படுகிறார். அவர் இயற்றிய நூல் அகத்தியம் என அழைக்கப்படுகிறது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் அகத்தியர் தமிழை மூன்று கூறுகளாய்ப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் இலக்கணம் வகுத்துள்ளார். அகத்தியரைப் பற்றிக் குறிப்பிடும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்,

> இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழிலக்கணத்தையும்
> தெரிவிப்பதாகிய ஒரு பெரிய இலக்கண நூல்

என்று குறிப்பிடுகிறார்.

> சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்று
> ஆய்ந்துறை வகுத்தனன் அகத்தியன் தானே[7]

என்று கூறுகிறார் அடியார்க்கு நல்லார்.

> அகத்தியமானது நாடகத் தமிழைப் பற்றி வரைந்துள்ள ஒரு மிகவும் பண்டைய நூல் என்பதற்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை[8]

என்று நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் உறுதிப்படுத்துகிறார். ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறவந்த தொல்காப்பியரும்,

> கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி[9]

என்று குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்திற்குப் பிறகு நாடகம் பற்றிய அருஞ் செய்திகள் பெரும்பாணாற்றுப்படை போன்ற சங்க நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் காணப்படுகின்றன. பெரும் பாணாற்றுப்படையில்,

> நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த[10]

என்று வரும் செய்தியில் நாடக மகளிர் பற்றியும் ஆடுகளம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

> 'கண்ணுளர்', 'ஆரியர்', 'கோடியர்', 'வயரியர்', 'விறலியர்' போன்ற கூத்தர் பிரிவினர் சங்ககாலப் பகுதியில் வாழ்ந்தமைக்கான இலக்கியச் சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.[11]

> தொகையும் பாட்டுமான சங்ககால இலக்கியங்களில் துணங்கை, குரவை, வெறியாட்டுப் போன்ற கூத்துக்கள் மிக விரிவாகப் பேசப்படுகின்றன. ஆட்ட மரபிற்கு ஒத்து வரக் கூடிய கலித்தொகை மற்றும் ஆற்றொழுக்குச் சத்தம் கொண்ட பரிபாடல் ஆகிய செய்யுள் நூல்களும்

> நாடகத்தன்மை கொண்ட படைப்புகளாகத் தமிழில் விளங்குகின்றன.[12]

> சங்க அகப்பாடல் மரபிற்கு மாறாகக் கலித்தொகைப் பாடல்கள் நாடகப் பாங்கில் இரண்டிற்கு மேற்பட்ட கதாபாத்திரங்களைக் கொண்டும், தன்மை நிலையில் நேரிடையாக உரையாடும் பாங்கிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கமை.[13]

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தில் அதன் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்

> பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல், பஞ்ச மரபு, பரத சேனாபதியம், மதிவாணர் நாடகத்தமிழ் போன்ற நாடகத் தமிழ் நூல்கள் இருந்தன – அழிந்தன.[14]

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்சுட்டப்படும் நூல்கள் அனைத்தும் நாடகம் தொடர்பான இலக்கண நூல்களாகவே காணப்படுகின்றன. இலக்கியங்கள் தோன்றி நெடுங்காலத்திற்குப் பின்னரே அதற்குரிய இலக்கணம் எழுதப்படுவது மரபு. எண்ணிறந்த நாடக இலக்கண நூல்கள் தமிழில் இருந்தன என்றால் அவ்விலக்கண நூல்கள் எழுதப்படுவதற்கு ஆதாரங்களான பலவகை நாடக இலக்கியங்களை உட்கொண்டு தமிழில் நாடகம் செழுமையாக இருந்திருக்க வேண்டும் என நம்புவதற்கு இடமுள்ளது.

> இந்திய நாடக வளர்ச்சியினை ஆராய்ந்து நோக்கினால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாடகம் தோன்றியமைக்கான சான்றுகள் கிட்டியுள்ளன. கலைகள் அனைத்தையும் ஆராய்ந்து நோக்கினால் பல்வேறு படிநிலைகளைக் கடந்த பின்னரே அக்கலைக்கு இலக்கணம் வகுத்திருப்பதை உலகக் கலை இலக்கிய வளர்ச்சியின்வழி அறியலாம். கலை இலக்கியங்களின் தொன்மையாதென ஆய்ந்தோமெனில் கிரேக்கமும் இந்தியாவுமே முதன்மையில் திகழ்வதையும் அம்மொழிகளுக்கு வகுக்கப்பட்ட இலக்கணங்கள் மேற்கூறிய கூற்றை நிறுவுவதையும் காணலாம்.[15]

என்னும் ஆய்வறிஞரின் கருத்தும் இங்குக் கருதுதற்குரியது. அடியார்க்கு நல்லார் தமது உரையில்,

> அகக்கூத்து, புறக்கூத்து, புகழ்க்கூத்து, சாந்திக் கூத்து, வினோதக்கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, இயல்பு கூத்து, தேசிக் கூத்து[16]

எனப் பலவகையான கூத்துக்களைக் குறிப்பிடுகிறார். ஆயினும் இக்கூத்துக்கள் இன்று வழக்கிழந்தனவாக உள்ளன.

> பண்டைய தமிழ் நாடக இலக்கண நூல்களில் கூத்தநூல் என்ற ஒரு நூலும் காணப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் சாத்தனார் என்பதால் இது சாத்தனார் கூத்து என்றழைக்கப்படுகிறது.[17]

இதுவும் நாடக இலக்கண நூலாகவே அமைந்துள்ளது. இந்நூல் இன்று நமக்குக் கிடைத்துள்ளது.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் அரங்கேற்று காதை தமிழரின் இசை மரபு குறித்தும் நாடக மரபு குறித்தும் அறிவிக்கும் செய்திக் களஞ்சியமாக விளங்குகிறது. மாதவி நாட்டிய நன்னூலை நன்கு கடைப்பிடித்தாடியதாக இதில் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரத்தில் பேசப்படும் செய்திகளை அரும்பத உரைகாரர், அடியார்க்குநல்லார் என்பவர்களின் துணைகொண்டே நம்மால் ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறாகத் தமிழில் நாடகம் மிக உன்னத நிலையில் இருந்துள்ளதற்கான சான்றுகள் ஏராளமாகக் கிடைக்கப் பெறினும் முழுமையான நாடக இலக்கியங்கள் எதுவும் கிடைக்கப் பெறாமையால் தமிழில் நாடகம் இருந்திருக்கிறதா என்ற ஐயத்தைச் சிலர் எழுப்புவதற்காக இடம் அளித்துள்ளது.

தமிழ் நாடகம் பற்றிய தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

> தொல்காப்பிய காலத்தில் பொருநரும் நிருத்தரும் இருந்துள்ளனர். ஆனால் நாடகம் இல்லை. நாட்டுப்புறக் கூத்துக்களைக் கவிதை மூலம் அமைத்ததற்கேற்றவாறு சங்ககாலக் கவிதை இலக்கணமும் இடம் தரவில்லை. மேலும் கூத்தும் நாட்டியமும் நாடகம் ஆகாது.[18]

என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கருதுகிறார்.

> நாடகம் என்ற நிகழ்வே சங்ககாலத்தில் இல்லை யென்றும் நடிகர்களும் பொருநர்களுமே வாழ்ந்தனர் என்றும் சங்கப்பாடல்கள் அனைத்தையும் ஆராயும்போது சுவரில் செதுக்கிய புராணச் சிற்பங்கள் போல் இருப்பினும் கூத்துக்கள் அனைத்தும் நாட்டுப்புற நாடகமாக இருந்தமையால் அவை இலக்கியத் தரத்தைப் பெறவில்லை.[19]

என்று சிவத்தம்பி குறிப்பிடுவதும் இங்குக் கருதுதற்குரியது.

பரிதிமாற் கலைஞர் தாம் இயற்றிய நாடகவியல் எனும் நூலின் முன்னுரையில்,

> நற்றமிழ் மொழியிலோ நாடகத்தமிழ் இலக்கணங்கள் எல்லாம் இறந்தவாகலின் ஒன்றுஞ் சொல்ல இயலாது[20]

என்கிறார். நாடக இலக்கணங்கள் மட்டுமல்ல அவற்றிற்கு முன்னே இருந்ததாக அனுமானிக்கத்தகும் நாடகங்களும் நம்மிடமில்லை என்று கூறுகின்றார்.

நாடகங்கள் நமக்குக் கிடைக்கவில்லை என்பதனாலேயே தமிழில் நாடகங்கள் இல்லை என்ற முடிவிற்கு வந்துவிட முடியாதவாறு நம்மைத் தடுப்பது நாடக இலக்கண நூல்களின் பட்டியல்கள். அவ்விலக்கண நூல்களிலிருந்து உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டும் நூற்பாக்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் காணப்படும் நாடகம் பற்றிய செய்திகள், சொற்கள், தொடர்கள், கல்வெட்டுச் சான்றுகள் என்ற ஏராளமான தகவல்கள்தான்.

> தமிழ்நாட்டின் புகழ்மிக்க கோவில்களில் ஆண்டுதோறும் விழாக்காலங்களில் தமிழ்க் கூத்து, ஆரியக் கூத்து, சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து ஆகியவை நடந்தமைக்கு எண்ணிறந்த கல்வெட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன.[21]
>
> கல்வெட்டுகளில் காணப்படும் இவ்வகைக் கூத்துக்கள் சிலம்பில் அடியார்க்கு நல்லார் உரையில் அவரால் குறிக்கப்படுகின்ற கூத்துக்களாகவே விளங்குகின்றன.[22]
>
> மகேந்திர வர்மபல்லவன் என்கிற மன்னன் எழுதிய மத்த விலாசப் பிரகசனம், பகவத்தஜ்ஜீகியம் போன்ற நாடகங்கள் நமக்குக் கிடைத்திருப்பன போல், இராச ராசேச்சுர நாடகம் மற்றும் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறும் **பூம்புலியூர் நாடகம், திருமூலநாயனார் நாடகம்**[23]

போன்ற நாடகம் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.

> தமிழ் நாடக வரலாற்றைப் பொறுத்தவரை **16, 17, 18**ஆம் நூற்றாண்டுகள் குறிப்பிடத்தக்க காலக் கட்டங்களாகும். **16, 17**ஆம் நூற்றாண்டுகளில்தான் நாடக இலக்கியங்கள் எழுத்து வடிவில் கிடைத்துள்ளன. சோழர் காலத்தில் அரண்மனைகளிலும், கோவில்களிலும் அடைந்து கிடந்த நாடகக் கலை மக்களைத் தேடி வரத் தொடங்கியது. தெலுங்கு மற்றும் மராட்டி அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்தக் காலக்கட்டத்தில்தான் நாட்டுப்புற நிகழ்த்து கலைகளான பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், குளுவம், மகுட நாடகம், கீர்த்தனை, தெருக்கூத்து போன்ற நாடக இனங்கள் இக்காலக்கட்டத்தில் தோன்றியவைகளாகும். இவை அடித்தள மக்களின் வாழ்வியலைப் படம்பிடிப்பனவாகவும் விளங்கின.[24]

பள்ளு நாடகம் பள்ளர்களின் வாழ்க்கையைக் கலை நயத்தோடு காட்டுவதாகவும் குறவன் குறத்தியரின் வாழ்வியலைக் குறவஞ்சி நாடகம் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. கீர்த்தனை நாடக வகைகளில் அருணாசலக் கவிராயரின் **இராமநாடகக் கீர்த்தனையும்,** கோபால கிருஷ்ண பாரதியாரின் **நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும்** கற்பனை வளமும் இசை வளமும் கொண்டவையாக விளங்குகின்றன. நாட்டுப்புறக் கதைகள், புராணக்கதைகள், காப்பியக் கதைகள் போன்றவை தெருக் கூத்திற்கு ஆதாரமாக அமைந்தன.

> தெருக்கூத்து என்னும் கலைவடிவமானது உணர்ச்சிகளின் குறியீடுகளாக மட்டுமே அமைந்துள்ள அசைவுகளைக் கொண்டு திறந்த வெளியை ஆடுகளமாக்கி வசனம், பாடல், இசை, ஆட்டம், மெய்ப்பாடு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை நிகழ்த்துநனின் வெளிப்பாடாக்கி, கோயில் சடங்கின் நாட்டுப்புற இசைக்குழு நாட்டிய நாடகமாக விளங்குகிறது.[25]

> தமிழகத்தின் வட மாவட்டங்களில் நடத்தப்பெறும் பாரதக் கூத்தும், தஞ்சை மாவட்டத்தில் நடத்தப்பட்டு வரும் பிரகலாதன் மற்றும் சிறுதொண்ட நாடகம், மனுநீதிச் சோழ மகராசா நாடகம், மன்மதன் நாடகம் போன்றவையும், காரைக்குடிப் பகுதியில் நடத்தப்பட்டு வரும் இராமாயணக் கூத்தும், தெருக்கூத்து வகையைச் சார்ந்தனவே ஆகும்.[26]

> தமிழ் நாடகம் இசை தழுவிய கூத்தே ஆகும். தமிழ் மரபு வழி நாடகக்கலை என்று கூறிக்கொள்ளத் தெருக்கூத்து ஒன்றுதான் எஞ்சி நிற்கிறது.[27]

> 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே தமிழ் இலக்கியம் துளிர்விட ஆரம்பித்தது என்றாலும் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில்தான் இந்தப்பயணம் உலகம் முழுவதையும் பாதித்த ஜனநாயகம், சோஷலிசம் போன்ற கருத்தாக்கங் களின் தாக்கத்திற்கு ஆளாகிப் பரவலான மக்களைச் சென்றடைய ஆரம்பித்தது.[28]

என்று கூறுவர். இலக்கியத்தின் வளர்ச்சி குறித்த இக்கருத்து தமிழ் நாடகங்களின் வளர்ச்சிக்கும் பொருந்துவதாக உள்ளது.

19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் ஆங்கிலேய வழித் தாக்கத்தினால் இந்தியாவில் உருவான நாடகமேடை மரபு பார்சி தியேட்டர் என்று அழைக்கப்பட்டது. இதன் பாதிப்பு தமிழ் அரங்குளிலும் குறிப்பிட்டுச் சொல்லும்படி அமைந்துள்ளது. பார்சி இனத்தைச் சேர்ந்த செல்வச்செழிப்பு மிக்க வியாபாரிகள் 19ஆம் நூற்றாண்டு பிரிட்டிஷ் நாடக அரங்கிலிருந்து பெற்ற மேடைத் தொழில் நுணுக்கங்களின் அடிப்படையில் இங்குள்ள

ஆங்கிலேயர்களை மகிழ்விக்கவும் அவர்களின் கலாச்சார இரசனையை இந்த மண்ணில் பரப்பவும் எழுந்த கலப்பின நாடக வடிவமாகவே பார்சி தியேட்டர் அமைந்திருந்தது. இதே காலக்கட்டத்தில் தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் எனப் போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகள் **1885** முதல் **1922**ஆம் ஆண்டு வரை தமிழ் நாடகத்திற்குப் பெரும்பணி ஆற்றியுள்ளார்.

> முறைப்படுத்தப்பட்ட தமிழ் நாடக வரலாறு தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளுடன்தான் துவங்குகிறது[29]

என்று அறந்தை நாராயணன் குறிப்பிடுவது இங்குக் கருதுதற்குரியது.

> சங்கரதாஸ் ஸ்வாமிகள் தானே நாடகங்கள் எழுதி, நடித்து இசை அமைத்து, தமிழ் நாடகத்துறைக்கு, பெரும் பங்கு ஆற்றியுள்ளார்.[30]

> சங்கரதாஸ் சுவாமிகள் மாறுபட்ட ஒரு நாடக மரபை வளர்த்தெடுத்து இருந்தாலும் அந்த இசை நாடக மரபிற்குப் பின்புலமாகத் தெருக்கூத்து இருந்தது.[31]

என்பது ஆய்வாளரின் கருத்து.

> சங்கரதாஸ் ஸ்வாமிகள் நாடக உலகில் நுழைந்ததும் தமிழ் நாடகத்தின் திருப்புமுனை தொடக்கமாயிற்று.[32]

சுவாமிகளின் பாய்ஸ் கம்பெனி மூலம் வெளிவந்தவர்களே தமிழ் நாடக உயர்வுக்காகப் பாடுபட்ட டி.கே.எஸ். சகோதரர்கள், எஸ். கிட்டப்பா, எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ் போன்றவர்கள் ஆவர். சங்கரதாசு சுவாமிகளின் **கோவலன், அல்லி அர்ஜுனா, பவளக்கொடி, வள்ளித் திருமணம்** போன்ற நாடகங்கள் இன்றளவும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் நாடகத் தந்தை எனப் போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியார் **1891**–ஆம் ஆண்டில் சுகுணா விலாச சபா என்ற பயில்முறை நாடகக் குழுவைத் தோற்றுவித்து, சுமார் **90** நாடகங்கள் எழுதியும் தயாரித்தும், தாமே நடித்தும் தமிழ் நாடகக் கலைக்குப் பெரும் தொண்டு புரிந்துள்ளார். சேக்ஸ்பியர், காளிதாசன் போன்றவர்களது நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் தழுவியும் தமிழில் பல நாடகங்களை இவர் படைத்துள்ளார். இவரது **மனோகரா** நாடகம் பலமுறை அரங்கேற்றப்பட்ட சிறப்புடைய நாடகமாகும்.

நாடக இயல் என்ற நாடக இலக்கண நூல் எழுதிய பெருமைக் குரியவர் திரு. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி என்னும் பரிதிமாற் கலைஞராவார். இவர் **ரூபாவதி, கலாவதி** என்ற இரு நாடக நூல்களை உரைநடையிலும், **மான விஜயம்** என்ற நாடக நூலை அகவற்பாவிலும் எழுதித் தமிழ் நாடகக் கலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

பம்மல் சம்பந்த முதலியாரைத் தொடர்ந்து திரு கன்னையா கம்பெனி சென்னை, ஸ்ரீ கிருட்டின வினோத சபா என்ற பெயரில்

தசாவதாரம், இராமாயணம், மகாபாரதம் போன்ற நாடகங்கள் அரங்கேற்றியுள்ளது. பல தந்திரக் காட்சிகளைக் காட்டி மக்களை மகிழச் செய்தவர் கன்னையா. இவரைப் பின்பற்றி நவாபு டி.எஸ். ராஜமாணிக்கம், மதுரை தேவி பால வினோத நாடக சபா என்னும் புகழ்மிக்க நாடகக் குழுவை அமைத்தார். தமிழகத்தின் மிகச் சிறந்த நகைச்சுவை நடிகரான கலைவாணர் என்.எஸ். கிருட்டினன், என்.எஸ்.கே. என்ற பெயரில் நாடகக் குழு ஒன்றை அமைத்தார். இவரது நாடகக் குழுவில் கே.ஆர். ராமசாமி, சிவாஜி கணேசன் போன்றோர் நடித்தனர்.

எஸ்.வி. சகஸ்ரநாமம் '**சேவைக் குழு**' என்ற நாடகக் குழுவைத் தொடங்கி நாடகப் பணியாற்றி யுள்ளார். விடுதலைக்குப்பின் உள்ள தொழில் முறை நாடகக் குழுக்களில் டி.கே. சண்முகம் குழுவினர், சகஸ்ரநாமத்தின் சேவைக்குழு மேஜர் சுந்தரராசனின் 'என்.எஸ்.என்.' நாடகக்குழு, மனோகரின் 'நேஷனல் தியேட்டர்ஸ்' ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். 'விவேகானந்தா பைன் ஆர்ட்ஸ்' மூலம் சோ. இராமசாமி அரசியல் அங்கத நாடகங்களை மேடையேற்றினார்.

திரைப்பட நடிகர்களான எம்.ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன், மனோரமா போன்றோர் நாடகங்களிலும் நடித்து வந்தனர். கே. பாலச்சந்தர், கோமல் சுவாமிநாதன், பூர்ணம் விஸ்வநாதன் போன்றோர் அமெச்சூர் நாடக சபாக்களில் சில நாடக முயற்சிகளை மேற்கொண்டனர்.

நவின நாடகம் பற்றிய முதல் பயிற்சி முகாம் 1977இல் காந்தி கிராமப் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் சே. ராமானுஜம், திரு. எஸ்.பி. ஸ்ரீநிவாசன் ஆகியோரால் இணைந்து நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து தேசியநாடகப் பள்ளியின் இரண்டரை மாதக்கால நாடகப் பயிற்சி முகாம், பாதல் சர்க்காரின் நாடகப் பயிற்சி முகாம், மதுரைப் பல்கலைக் கழகத்தில் நாடகச் சான்றிதழ்ப் படிப்பு, நிஜநாடக இயக்கத்தின் தெருக்கூத்துப் பயிற்சி முகாம், ஆசிரியர்களுக்கான நாடகப் பட்டறை முதலியன நடைபெற்றன. மரபுக் கலையோடு இணைந்த புதிய நாடக முயற்சிகளில் சே. ராமானுஜத்தின் **புறஞ்சேரி** 1977–78, எர்ணாகுளம் தேசிய நாடக விழாவிலும் பன்சிகவுல் இயக்கிய **பிணந்தின்னும் சாத்திரங்கள்** 1978இல் டில்லி ஸ்ரீராம் கலை மையத்திலும் 1984இல் நிஜ நாடக இயக்கத்தின் சார்பில் கே.எஸ். ராஜேந்திரன் இயக்கிய ஞா. முத்து சாமியின் **கட்டியங்காரன்** எர்ணாகுளம் நாடக அகாடமி விழாவிலும் பங்கு பெற்றன. 1986இல் இராஜு இயக்கிய இந்திரா பார்த்தசாரதியின் **நந்தன் கதை** என்ற நாடகம், மைசூர் தென் மண்டல நாடகக் கலை விழாவிலும் பின்னர், தில்லி நாடகக் கலை விழாவிலும் கலந்து கொண்டு பாராட்டைப் பெற்றது.

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, அரு. ராமநாதன், எஸ்.டி. சுந்தரம், பி.எஸ். ராமையா, தி. ஜானகிராமன், என்.வி. ராசாமணி,

கே. பாலச்சந்தர், சோ.மு.சா. கிருட்டிணமூர்த்தி போன்ற நாடக ஆசிரியர்களால் பல நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. இந்திரா பார்த்த சாரதியின் **மழை, போர்வை போர்த்திய உடல்கள், ஔரங்கசீப்,** நா. முத்துசாமியின் **நாற்காலிக்காரர், சுவரொட்டிகள்** புதிய நாடகத்தில் குறிப்பிடத்தக்க சிலவாகும். இவை பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சென்னையில் கூத்துப் பட்டறை, பரீக்ஷா, மதுரை நிஜ நாடக இயக்கம் போன்றவை புதிய தமிழ் நவீன நாடக முயற்சிகளில் ஈடுபட்ட குறிப்பிடத்தக்க குழுக்களாகும். பரம்பைச் செல்வன், அஸ்வகோஷ், ஞானி, மு. ராமசுவாமி, இரா. இராசு, கே.எஸ். ராஜேந்திரன், ஆறுமுகம், கே.ஏ. குணசேகரன் போன்ற புதிய இளம் நாடக இயக்குநர்கள் நவீன நாடகப் போக்குகளில் தலைமை வகிக்கின்றனர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் துவங்கப்பட்ட நாடகத் துறையும், புதுவைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ள சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப் பள்ளியும் நாடகத் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவும் அதன்வழி நாடகம் பற்றிய ஆய்வு நூல்கள் வெளிவரவும் காரணமாக அமைந்துள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத் துறையில் நாடக ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டங்களைப் பெறுவதற்கு நாடகம் தொடர்பான ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. புதுவைப் பல்கலைக் கழகத்தில் நாடகத்தில் எம்.ஏ. முதுகலை பட்ட வகுப்புகளும், ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலமாகத் தமிழ் நாடகச் சூழலில் உலகளாவிய நாடகக் கோட்பாடுகள் பற்றிய அறிவுத் தேடல் ஏற்பட்டுள்ளது.

> கலாச்சாரத் தேவைகளுக்கு ஏற்பக் கோட்பாட்டளவிலும் செயல்பாட்டளவிலும் நாடகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய உத்திகள் பற்றிய அறிமுகமும் விவாதமும் நடைபெறும் சூழல் இங்கே உருவாகியுள்ளது. ஸ்டானிஸ்லாவ்ஸ்கி, குரோடோவ்ஸ்கி, மேயர் ஹோல்ட் போன்ற நடிப்புக் கலை மேதைகளின் பயிற்சி முறைகள், பிரெக்டின் உணர்ச்சி வசப்படாமை தத்துவம், மனிதருள் மண்டிக் கிடக்கும் அபாயகரமான அழுக்குகளைச் சுட்டிக் காட்டும் ஆர்த்தோவின் கொடூர அரங்கு, சமூகப் பிரச்சினைகளை நேருக்கு நேர் விவாதிக்கும் அகஸ்தோபோவாலின் 'இன்விஸிபில் தியேட்டர்', வங்காளத்தில் பாதல் சர்க்காரின் மூன்றாம் அரங்கக் கோட்பாடு போன்ற அரங்கச் செயல்பாடுகள் தமிழ் நாடகச் சூழலில் குறிப்பிட்ட சில தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.[33]

இவ்வாறு வழக்கமான மேடை நாடகங்களிலிருந்து விடுபட்டுச் சிந்தனையும் செறிவும் கொண்ட புதிய நாடகப் போக்குகளை உள்ளடக்கிய நவீன நாடகப் படைப்பு முயற்சிகளும் மேடை ஏற்ற முயற்சிகளும் நாளுக்கு நாள் பெருகிவரும் சூழ்நிலை காணப்படுகிறது.

இந்திய நாடகங்கள்

இந்திய நாடக மரபின் தொன்மையும் பழமையும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் நாட்டிய சாஸ்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் என்றழைக்கப்படும் நான்கு வேதங்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்டவைகளாக இருந்தன. ஐந்தாவது வேதமாகக் கருதப்படும் நாடகம் எல்லா இனத்து மக்களுக்கும் உரியதாக ஆக்கப்பட்டது. நாடகம் ஒரு கலவைக் கலையாகும். அழித்தல் தொழிலின் கடவுளாகக் கருதப்படும் சிவன் நடனக் கலைக்குக் காரணமாக இருந்தார். காத்தல் கடவுளாகிய விஷ்ணு நான்கு வகையான நாடக மேடையேற்றத்திற்கான விருத்திகளையும் கண்டுபிடித்தார். இதனால் இந்துக்கள் அனைவரும் நாடகப் படைப்பில் பங்கேற்க வழி ஏற்பட்டது. இந்திய இருபெருங் காப்பியங்களாகக் கருதப்படும் இராமாயணமும் மகாபாரதமும் இந்திய நாடகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெருமளவில் பங்காற்றியுள்ளன.

இந்திய நாடகத்தின் ஐந்து முக்கியக் கூறுகளாகத் தோற்றம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு என்பன இடம்பெற்றுள்ளன. வாய்பாட்டும் கருவி இசையும் நாடகத்தில் பெரும்பங்கு வகித்துள்ளன. நாட்டிய சாஸ்திரம் நாடகத்திற்கான அரங்க வகைகளைப் பற்றிப் பேசுகிறது. சதுரம், செவ்வகம், முக்கோணம் என்ற மூன்று அளவுகளில் அவ்வரங்குகள் காணப்பட்டதாக நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடுகிறது. நாடக அரங்கத்தில் இடம்பெறும் பல்வேறு கூறுகளுக்கான அளவைகளையும் நாட்டிய சாஸ்திரம் குறிப்பிட்டுள்ளது. நாடக அரங்கில் இடம்பெற்றிருந்த வாயில்கள் பற்றியும் பயன்படுத்தப்பட்ட திரைச் சீலைகள் பற்றியும் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இலக்கியத் தரத்தில் சமஸ்கிருத நாடகங்கள் உயர்ந்த நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டன. நாடகம் ஒரு பார்வைக் காப்பியமாக (Drishya Kavya) கருதப்பட்டது. நாட்டிய சாஸ்திரம் நாடகத்தை ரூபகம் என்று குறிப்பிட்டுப் பத்து வகையான ரூபங்கள் பற்றிப் பேசுகிறது.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் காளிதாசர் மிகச் சிறந்த நாடக ஆசிரியராகக் கருதப்பட்டார். இவரால் எழுதப்பட்ட **சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசியம்** போன்ற நாடகங்கள் உலகப் புகழ்பெற்ற நாடகங்களாகக் கருதப்படுகின்றன.

> காளிதாசருக்கு முன்பு வாழ்ந்ததாகக் கருதப்படும் பாஷன் என்பவரால் மஹாபாரதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஆறு சிறு நாடகங்கள் தனிச்சிறப்பு வாய்ந்த படைப்புகளாகும். இவற்றில் **உருபங்கம்** என்ற நாடகம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இந்தச் சமஸ்கிருத நாடகம் மட்டும்தான் துன்பியல் முடிவைக் கொண்டுள்ளது.[34]

அவரது மிகச் சிறந்த நாடகமாக **ஸ்வப்னவாசவதத்தா** என்ற நாடகம் கருதப்படுகிறது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் ஹர்சன் என்பவர் எழுதிய **நாகாநந்தா, பிரியதர்சிகா, ரத்னாவளி** என்ற மூன்று நாடகங்களும் சிறப்பான நாடகங்களாகக் கருதப்பட்டன.

எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பவபூதி சமஸ்கிருத நாடகப் பரம்பரையில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க கடைசி நாடக ஆசிரியராகக் கருதப்படுகிறார். இவருடைய நாடகங்களான **மஹாவீர சரிதம், உத்தரராம சரிதம், மாலதி—மாதவா** முதலியவை குறிப்பிடத் தக்கவை. ஐந்தாறுக்கும் மேற்பட்ட சமஸ்கிருத நாடகங்கள் எழுதப்பட்டதாகக் கூறப்பட்டாலும் காலத்தை வென்று படிக்கக்கூடிய தாகவும் மேடையில் நடிக்கக் கூடியதாகவும் பன்னிரண்டு சமஸ்கிருத நாடகங்களே எஞ்சியுள்ளன. சமஸ்கிருத நாடகப் பாரம்பரியம் இன்று கேரளாவில் நிகழ்த்தப்பட்டுவரும் கூடியாட்டத்தில் வாழ்ந்து கொண்டி ருக்கிறது. கூடியாட்டப் பாரம்பரியம் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையில் இருந்து வருகிறது. சிறந்த சமஸ்கிருத நாடகங்கள் சாக்கியர்களால் நிகழத்தப்பட்டு வருகின்றன. நாடக நிகழ்ச்சிகள் கோயில் நாடக மேடைகளில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்நாடகங்களில் நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடும் ஆங்கிகம், வாசிகம், ஆகார்யம், சாத்விகம் என்ற நான்கு அபியை முறைகளும் பின்பற்றப்படுகின்றன.[35]

இதில் பயன்படுத்தப்படும் ஒப்பனையும் உடைகளும் உயர்ந்த வடிவமைப்பையும் குறியீட்டுத் தன்மையையும் கொண்டதாக உள்ளன. இந்தக் கூடியாட்டப் பாரம்பரியம் பின்னர் 16ஆம் நூற்றாண்டில் கதகளி தோன்றக் காரணமாயிற்று. இப்பொழுது காணப்படும் தொன்மையும் பாரம்பரியமும் மிக்க நாடக வடிவங்களும் நாட்டுப்புற நாடகங்களும் பழமையான நாடகக் கூறுகளையும் செவ்வியல் சமஸ்கிருத நாடகம் மற்றும் இடைக்கால நாடகங்களின் கூறுகளையும் மேடையேற்ற உத்திமுறைகளையும் உள்ளடக்கியவைகளாக விளங்குகின்றன. இந்த நாடகங்களில் இசையும் நடனமும் பெரும்பங்கு வகிக்கின்றன. இசை, நடனம், கதை கூறும் முறை, மனோதர்ம நடிப்பு முறை என்ற பொதுமைக் கூறுகளையும் உள்ளடக்கியனவாக விளங்குகின்ற இந்நாடகங்கள் இந்தியாவின் பலபகுதிகளின் நாடகங்களிலும் இடம்பெற்றுள்ளன. பக்தி இயக்கம் தோன்றியதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டில் பாகவத

மேளாவும் கேரளாவில் கதகளியும், கிருஷ்ணாட்டமும், ஆந்திராவில் குச்சிப்புடி நடனமும் இந்தியப் பாரம்பரிய நாடக வகைகளின் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்திலும் நடனமும் இசையும் ஒருங்கிணைத்தே நடத்தப்படுகின்றன. இவை இந்திய நாடகப் பரம்பரையின் தொடர்ச்சியாக இன்றும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இடைக்காலத்தின் முற்பகுதியில் இருந்த நாடகங்கள் மதம் சார்ந்தவைகளாகவும், கோவில் சார்ந்தவைகளாகவும் அமைந்திருக்க ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் மதச்சார்புள்ள சமூக நாடகங்கள் தோற்றம் பெறலாயின. வங்காளத்தைச் சார்ந்த **ஜாத்ரா** என்ற நாடக வடிவமும் உத்தரப்பிரதேசத்தின் **நௌதங்கீ** நாடக வடிவமும் பஞ்சாபில் விளங்கிய **ஸ்வாங்** என்ற வடிவமும் காஷ்மீரில் விளங்கிய **பந்தா பாதர்** என்ற நாடக வடிவமும் இராஜஸ்தானின் **கியால்** நாடக வடிவமும் மத்தியப் பிரதேசத்தின் **மாச்** என்ற நாடக வடிவமும் குஜராத்தின் **பாவாய்** என்ற நாடக வடிவமும் மஹாராஷ்டிரத்தின் **தமாஷா** என்ற நாடக வடிவமும் ஆந்திரப் பிரதேசத்தின் **வீதி நாடகம்** என்ற நாடக வடிவமும் தமிழ் நாட்டின் **தெருக்கூத்து** என்ற நாடக வடிவமும் கர்நாடகத்தின் **யட்சகானம்** என்ற நாடக வடிவமும் இவ்வகையில் அடங்குவனவாகும்.

இந்த நாடகப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து இந்தியாவின் பல பாகங்களிலும் நவீன நாடக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிலிருந்து இந்தியாவில் பல்வேறு மொழிகளிலும் நவீன நாடக முயற்சிகள் தோற்றம் பெறலாயின. இந்த நாடக முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்துள்ள நாடக வல்லுநர்கள் பற்றியும் அவர்களின் நாடகப் படைப்புகள் பற்றியும் அறிவது இன்றியமையாததாகும். இவர்தம் படைப்புகள் பல்வேறு இந்திய மொழிகளிலும் இடம்பெற்று இந்திய நாடகக் கலையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. வங்காளத்திலிருந்து உத்பல்தத், சோம்புமித்ரா போன்றவர்களும் முதலில் ஆங்கிலத்திலும் பின்பு இந்தியிலும் நாடகப் பங்களிப்பைச் செய்துள்ள இ. அல்காசி போன்றவர்களும் இந்தி நாடகப் படைப்பாளரான அபீத்தன்வீர் போன்றவர்களும் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவராவர். இவர்களுடைய நாடக உழைப்பிற்காக இவர்கள் அனைவரும் நாடகத்திற்கான தேசீய விருதுகளைப் பெற்றுள்ளனர். இ.அல்காசி அவர்கள் தர்ம்வீர் பாரதியின் 'அந்தாயுக்' என்ற நாடகத்தையும் கிரிஷ் கர்னாட்டின் 'துக்ளக்' என்ற நாடகத்தையும் இயக்கிப் புகழ்பெற்றவர்.

1960களில் இந்தியாவில் முற்றிலும் இந்தியத் தன்மை வாய்ந்த புதிய நாடக வடிவைத் தேடும் முயற்சி தொடங்கியது. இந்தப் புதிய நாடக முறையில் பயன்படுத்தப் பழமையான நாடகக் கூறுகளும் அதன் உத்தி முறைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. மாறிவரும் சமூக

உலகாயுத மதிப்பீடுகளுக்கு ஏற்ப இந்நாடகங்களில் சமூக அழுத்தங்கள் பிரதிபலித்தன. அதனால் இவ்வகை நவீன நாடகங்களில் பழமையான வரலாறுகளும், தொன்மங்களும் நவீன வாழ்க்கைக்கேற்ப உள்வாங்கப்படும் புதுவகை அர்த்தங்களுடன் விளக்கப்பட்டன. நாடகம் அதன் பழமையான இறுக்க நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டது. மனோதர்ம முறையில் நிகழ்த்தப்படுவதற்கு இலகுவானதாக ஆக்கப் பட்டது. இத்தன்மைகள் அடங்கிய நாடகங்களை இந்தியா முழுவதும் நாடக ஆசிரியர்கள் எழுதத் தலைப்பட்டனர். இந்த முயற்சி பெரும்பாலான இந்திய மொழிகளில் மேற்கொள்ளப்பட்டது.

மராத்தியில் விஜய் டெண்டுல்கரும் வங்காளியில் பாதல் சர்க்காரும் இந்தியில் மோகன் ராகேஷும் கன்னடத்தில் கிரிஷ் கர்னாட்டும் இந்தப் புதுவகை நாடக இயக்கத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நாடக ஆசிரியர்களாவர். இவர்கள் அனைவரும் இந்தியத் தேசிய அளவில் அவர்களுடைய நாடகங்களுக்காகப் பரிசுகளைப் பெற்றவர்களாவர்.

நவீன இந்தி நாடகம்

இந்திய இலக்கியத்தில் நாடகத்திற்கு வளமான பரம்பரை இருக்கிறது. காளிதாசன் பவபூதி, திங்கநாதன், பாசன், விசாகதத்தன் முதலியவர்களின் நாடகங்கள் பல நூற்றாண்டுகளாய் உலகத்தின் மிகச் சிறந்த பண்டைய நாடகங்களோடு ஒருங்கிணைத்துப் போற்றப்படுகின்றன. இனியும் போற்றப்படும்.[36]

பாரதத்தின் நாடகங்களின் ஆரோக்கியமான வளமான மரபு இருந்தும் பதினெட்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை கலையிலும் இலக்கியத்திலும் உயர்ந்ததான இச்சாதனம் பாரதத்தின் பெரும்பாலான மொழிகளிலும் பிரதேசங்களிலும் அசட்டை செய்யப்பட்டது. அரசியல் ஒடுக்கு முறைகளாலும் சமூக உயர்வு தாழ்வுக் கருத்துகளாலும் பாரதத்து மக்களின் வாழ்க்கையும் சிந்தனையும் சுருங்கிப் போயிருந்தன. குறிப்பாக வட இந்தியாவில் நாடகம் பாணர்கள், விகடர்கள் முதலியவர்களோடு நின்றுவிட, சங்கீதமும் நடனமும் தேவதாசிகளிடம் சிறைபட்டன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு புது விழிப்புணர்வு அலை பாரதத்தில் வீசியபோது இலக்கியத்திலும் புத்துயிர் பாய்ந்தது. இந்திய மொழிகளில் உயர்ந்தவகைப் புது இலக்கியம் எழுதப்படலாயிற்று.[37]

பாரசீகத்திலிருந்து (இன்றைய ஈரான்) கி.பி. எட்டாம் நூற்றாண்டு வாக்கில் இந்தியா வந்து குடியேறியவர்கள் பார்சிகள் எனப்பட்டனர். இவர்கள் பம்பாய் நகரைச் சுற்றி அடர்த்தியாக வாழ்ந்தார்கள். பம்பாயில் வசித்த இந்தப் பார்சி இனத்தவர் நாடகத்தில் ஆர்வம் காட்டினார்கள். நாடகத்தை வர்த்தக ரீதியில் ஒரு தொழிலாக நடத்த அவர்கள் கருதினார்கள். 1870களில் இவர்களால் தொடங்கப்பட்ட நாடகக் கம்பெனிகள் பின்னர் வடக்கில் இந்தி மொழி பேசும் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியது.[38]

> ஜோத்பூர் மன்னர் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்து அளித்த **பிரபோத சந்திரோதயா** என்னும் நாடகமே முதல் இந்தி நாடகமாகக் கருதப்படுகிறது. இதற்குப் பிறகு இந்தி நாடகக் கலைக்குப் புதிய சக்தியும் வரமும் தந்ததில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த நாடக ஆசிரியரான பாரதேந்து ஹரிச்சந்திரா (1850–1885) என்பவர் மிக முக்கியமானவராகக் கருதப்படுகிறார்.[39]

சமஸ்கிருத நாடகங்களில் தேர்ச்சியும், வல்லமையும் பெற்றிருந்த இவர் இந்தியில் இதுவரை நிலவி வந்த கவிதைகள், பாடல்கள், நாட்டியம் உரையாடல்கள் எதுவுமே நாடகத்தைத் தோற்றுவிக்கும் வகையில் சக்தியற்றதாகவே இருந்தன என்பதைப் பட்டவர்த்தனமாக அறிவித்ததோடு, நிகழ்த்தப்படும் எந்த நாடகத்திலும் அதன் கதை, கட்டமைப்பு, பாத்திரப் படைப்பு, மேடையில் அதன் இயக்கம் சம்பந்தப்பட்ட உத்திகள் யாவும், சமஸ்கிருத நாடகத்தால் இந்திக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வுத்திகளைக் கையாண்டே இந்தியில் நாடகங்கள் எழுதப்பட வேண்டும் என்றதோடு, எழுதப்படும் எந்த ஒரு நாடகத்துக்கும் திட்ட வட்டமான ஒரு குறிக்கோளும் இருக்க வேண்டுமென்றும் இவர் வலியுறுத்தினார்.[40]

இந்தி நவீன நாடகத்தின் தந்தை என்று போற்றப்படும் இவர் இந்தி நாடக உலகில் அதுவரை இருந்துவந்த நடையை மாற்றிப் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி நாடகத்திற்கு ஒரு புதிய வடிவம் கொடுத்தார். இவர் வங்க மொழி நவீன நாடகத்தின் தாக்கத்தை இந்தியில் ஏற்படுத்தினார். இந்தி மொழியில் இவர் பல நாடகங்களை எழுதியுள்ளார். மேலும் ஆங்கிலம், சமஸ்கிருதம், மற்றும் வங்க மொழிகளிலிருந்து நாடகங்களை இந்தியில் மொழிபெயர்த்துள்ளார்.

இவர் ஏறக்குறைய பன்னிரண்டு நாடகங்களை எழுதியுள்ளார். இவற்றில் பெரும்பாலானவை ஓரங்க நாடகங்கள். இந்நாடகங்களில் பல சமஸ்கிருத, வங்காள மொழி நாடகங்களை அடியொற்றியும், தழுவியும் எழுதப் பட்டவை. இதில் **சந்தா கௌஷிகா (ராஜா ஹரிச்சந்திரா)** சத்திய வாழ்வின் மேன்மையையும், **பிரபோத சந்திரோதயா** போலித்தனங்களை அம்பலப்படுத்துவ தாகவும், **முத்ரா ராட்சஸம்** நிகழ்கால அரசியலோடு நெருக்கமான தொடர்புடையதாகவும் விளங்கின. இவர் எழுதிய நாடகங்களில் **அரிச்சந்திரா** (Harish Chandra) என்ற சரித்திர நாடகமும் **அந்தேர் நகரி** என்ற நாடகமும் (Andher Nagari - Blind Justice) இன்றும் மேடையேற்றப் பட்டு வருகின்றன.[41]

இவரது நாடகங்களில் இவர் மேலிருந்து பிரிந்து இறங்கும் சுருள் திரைகளைப் பயன்படுத்தியதோடு, மேடையில் காட்சி மாற்றத்தைப் புலப்படுத்தும் வகையில் வெவ்வோறு காட்சித் திரைகளையும் முதன்முதலாக அறிமுகம் செய்திருந்தார்.[42]

இவருக்குப் பின் இந்திக் கவிஞரும் நாடகக் கலைஞருமான ஜெயசங்கர் பிரசாத் **(1889–1937)** என்பவர் சரித்திர வகைப்பட்ட நாடகங்களை உருவாக்கினார். இந்திய சரித்திரத்தின் குப்தர்களின்

காலத்தையொட்டிய 12 நாடகங்களையும் எழுதியுள்ளனர். இவரது முக்கியமான நாடகங்கள் **ஸ்கந்த குப்தா** (Skanda Gupta) மற்றும் **சந்திரகுப்தர்** (Chandragupta) முதலியவையாகும். அதுவரை நிலவி வந்த சரித்திர நாடகங்கள் போல் சரித்திர நிகழ்வுகளை மட்டுமே இவர் மேடையேற்றாமல் அந்நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட பாத்திரங்களின் உள்மனச் செயல்பாட்டை இவர் மேடைக்குக் கொண்டுவந்தார். இந்தி நாடக உலகில் கதாபாத்திரங்களை அதன் தனித்தன்மையோடு மேடையில் உயிர்பெறச் செய்ததில் இவரே முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.

> இவரது நாடகங்களில் கதாபாத்திரங்களின் ஆழமான அடிமன ஆய்வும், அம்மனதின் இருவேறு முரண்பட்ட நிலைகளின் மோதலும் மேடையில் ஓர் உன்னதமான நாடக நிகழ்வை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன. இவரது நாடகத்தில் இப்படிப்பட்ட முரண்நிலைகள் கலாச்சாரங் களின் மோதல், நிகழ்கால இந்தியச் சூழலில் கடமைக்கும் தேசபக்திக்குமான மோதல் என்னும் பலவகைப்பட்ட கலாச்சார தத்துவ அவஸ்தைகளை வெளிப்படுத்துவதை மையமாகக் கொண்டிருந்தன.[43]

அகா ஹசர் காஷ்மீர் (1879–1935) என்பவர் கிங்லியரைத் தழுவி **சபேத் கூன்** (Safed Khoon - white Blood) மற்றும் **ருஷ்தம் ஓ சௌரப்** (Rustom O Sohrab), **அங்க் கா நாஷா** (Ankha Ka Nasha) என்ற நாடகங்களையும் ராதேஷ்யாம் கதாவாசக் (1890–1963) என்பவர் **சத்ய ஹரிச்சந்திரா** (Satya Harisha Chandra) மற்றும் **மஹாபாரதம்** (Mahabharata) என்ற நாடகங்களையும் எழுதினார்.

தீவிரமான அரசியல் பின்னணியும், காந்தியும், உப்பு சத்தியாக் கிரகமும், இந்து–அரிசன், தீண்டாமைப் பிரச்சினை தொடர்பாக அவர் கைக்கொண்ட நீண்டகால உண்ணாவிரதமும் பல்வேறு வகையிலும் மக்களது சமூக, கலாச்சார வாழ்வை உலுக்குவதாக இருந்தன. இவ்வகை பிரச்சினைகள் நாடக உலகைத் தீவிரமாகப் பாதித்ததோடு நீண்ட நெடும் நாடகங்களை நிகழ்த்தும் போக்கிலிருந்து மாறுபட்டுச் சுருக்கமாகவும், அழகாகவும் மக்களை இப்பிரச்சினைகள் தைக்கும் வகையிலும் நாடக வளர்ச்சிப் போக்கு ஓரங்க நாடகத்திற்குத் தாவியது. இந்தி நாடக உலகிலும் சமூகப் பிரச்சினைகளை முன்வைத்து ஓரங்க நாடக்ங்கள் எழுதப்படுவது முக்கியமான போக்காக வலுப்பெற்றது.

இந்தியில் சேட் கோவிந்தலால் தான் முதன்முறையாக ஒற்றைப் பாத்திர நாடகங்களை அறிமுகப்படுத்தினார். சேட் கோவிந்தலாலின் **பஞ்சபூத், அஷ்டதல், ஸ்பர்த்தா, ப்ரளய், சிருஷ்டி, ஸப்தஜீவன்** போன்ற ஓரங்க நாடகங்களும் உதயசங்கர் பட் என்பவரின் **தாஹர், அம்மா, கமலா, விசுவாமித்திரன், இத்தியாதி, ஆதியுகம்** போன்ற

ஓரங்க நாடகங்களும் புவனேச்வர் என்பவரின் **காரவான்** என்ற ஓரங்கங்களின் தொகுப்பையும் **ஸ்டிரைக்** என்ற ஓரங்க நாடகமும், டாக்டர் ராம்குமார் வர்மாவின் **முகிலின் சாவு, சாருமித்ரா, சப்தகிரண், ரூபரங்க, ரிம் ஜிம்** போன்ற ஓரங்க நாடகங்களும், **அஷ்க்** என அழைக்கப்பெறும் உபேந்திரநாத்தின் **சிறையும் விடுதலையும், ஆறாவது பிள்ளை, மேய்ப்பவர்கள், தேவதைகளின் நிழலில், வெற்றியும் தோல்வியும்** முதலியனவும் விஷ்ணு பிரபாகரின் **இடியும் கோட்டைச் சுவர், அம்மாவின் பிள்ளை, மனிதன்** போன்ற ஓரங்க நாடகங்களும், ஜகதீஷ் சந்திர மாதூர் அவர்களின் **விடிவெள்ளி, ஓ என் கனவுகளே, கைதி** போன்ற ஓரங்க நாடகங்களும், டாக்டர் லட்சுமி லால் அவர்களின் **தாஜ்மகலின் கண்ணீர், மலைக்குப் பின்னால்** போன்ற ஓரங்க நாடகங்களும், தர்ம்வீர் பாரதியின் **ஆறு தாகமாயிருந்தது, சிருஷ்டியின் இறுதி மனிதன்** போன்ற ஓரங்க நாடகங்களும் சந்திரகுப்த வித்தியாலங்காரின் **ரேவா, ஹிந்துஸ்தானம் என்று சொல்லுங்கள், அசோகன்** போன்ற ஓரங்க நாடகங்களும் இந்தியில் குறிப்பிடத்தக்க ஓரங்க நாடகங்களாகும்.

> இந்தியில் ஓரங்கங்கள் **கர்டன் ரெய்ஸர்** (மூலநாடகம் தொடங்கப் படுமுன் நடத்தப்படும் சிறு நாடகம்) நாடகப் பாணியில் முற்றிலும் எழுதப்படவே இல்லை. நாடகத்தின் ஒரு புதிய இயல்பான, நடைமுறை உருவத்திலேயே அவற்றை இந்தியில் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவற்றின் உருவம் பாரதத்திற்கு உரித்தானது. ஆனால் அவற்றுள் பலவற்றின் ஆத்மா அனைத்துலகத் தன்மை வாய்ந்தது.[44]

பெர்னாட்ஷா, இப்ஸன் ஆகியோரின் நாடகங்களால் பாதிக்கப்பட்ட லக்ஷ்மி நாராயணன் மிஸ்ரா அறிவார்த்தப் பிரச்சினைகள் அடங்கிய நாடகங்கள் எழுதத் தொடங்கி வைத்தார். பிரசாத்துக்கும் மிஸ்ராவுக்கும் இடையில் தோன்றிய ஹரிகிருஷ்ண பிரேமி, கோவிந்த வல்லப பந்த், பிருந்தாவன்லால் வர்மா, உதயசங்கர்பட் முதலியவர்களின் நாடகங்கள் இக்காலத்தைச் சேர்ந்தவை.

தற்காலத்திய நிலையில் நாடகங்களைக் கருத்தாழம் பொருட்செறிவு உயிர்த்துடிப்பு பெருமை ஆகியவற்றுடன் படைப்புக் கலைச் சாதனங்களாக நிறுவிய பெருமை மோகன் ராகேஷ், ஜகதீஷ்சந்திர மாதூர், பாரதி, லக்ஷ்மி நாராயண்லால் ஆகியோரையே சாரும்.

இந்தி நாடகப் பரம்பரையை அறிவுத்திறத்தாலும் கலையுணர்வாலும் தொடர்ந்து வளர்த்து வரும் கிரிராஜ் கிஷோர். பிரஜாமோக்ஷா, மணி மதுகர், முத்ரா ராக்ஷஸ், சங்கர் கோஷ், பி. பண்டிட் ஆகிய இளம் நாடக ஆசிரியர்களில் மோகன் ராகேஷின் பெயர் முன்னணியில் நிற்கிறது.

சுதந்திரத்திற்குப் பின் இந்தி நாடகமும் இந்தி நாடக மேடைகளும் பார்வையாளர்கள் குறைந்ததாலும் இந்தி சினிமாவின் தாக்கத்தாலும் வீழ்ச்சியுறும் நிலையில் இருந்தன. இருந்த போதிலும் சில நாடக ஆசிரியர்கள் தங்களின் நாடகங்களின் மூலம் மக்களிடையே மீண்டும் நாடகத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர். அவர்களில் மோகன் ராகேஷ், டாக்டர் லட்சுமி நாராயண் லால், சுரேந்திர வர்மா, மணி மதுகர், ரமேஷ்—பக்ஷி, சங்கர் சேஷ், முத்ரா ராக்ஷஸ் குறிப்பிடத்தக்கவர்கள்.[45]

நாடு சுதந்திரமடைந்தபின் மலர்ந்த புதிய இலக்கிய உலகில் ராகேஷ் மிக முக்கியப் பங்கு வகிக்கிறார்.[46]

பிரேம்சந்த் காலத்திற்குப் பின்னால் எழுந்த சமுதாயப் புத்துணர்ச்சி நாட்களில் சமூகப் போக்கைக் காட்டிலும் தனிமனிதனே முக்கியத்துவம் பெறலானான். ராகேஷ் இந்த யுகத்தில்தான் எழுதத் தொடங்கினார். ஏறக்குறைய இருபது—இருபத்தைந்து ஆண்டுகள் 1950 முதல் 1975 வரை, தான் வாழ்ந்த காலத்தையே அவர் பிரதிபலித்து வந்தார்.[47]

ஜயசங்கர் பிரசாத்தின் நாடகங்கள் எவ்வாறு இலக்கிய நாடகங்கள், மேடை நாடகங்கள் என்று பிரிக்கப்பட்டு நாடகப் பண்புகளை இலக்கியத் தன்மையென்றும் மேடை நாடகவியல் என்றும் வேறுபடுத்திப் பேசப்பட்டதோ, அவையெல்லாம் ராகேஷின் நாடகங்களில் மறைந்து போயின. அவரது நாடகங்கள் இலக்கியமுமாயின. மேடை நாடகங்களும் ஆயின. கதை, வசனம், காட்சி அமைப்பு, உரையாடல், மொழி, அரங்க அமைப்பு முதலிய எல்லா அம்சங்களிலும் ராகேஷின் படைப்புகள் உயர்ந்த இடம்வகிக்கின்றன.[48]

நவீன இந்தி நாடக உலகில் மோகன் ராகேஷ் நாடகங்கள் பெறும் இடம்

மோகன் ராகேஷின் இயற்பெயர் மதன் மோகன் குக்வானி என்பதாகும். மதன் மோகன் குக்வானி முதலில் எழுதிய கவிதைப் படைப்பில் ராகேஷ் என்ற பாத்திரம் இடம்பெற்றிருந்தது. இந்தப் பாத்திரப் பெயரை, அவர் பெயரில் இணைத்து மோகன் ராகேஷ் என்று அழைக்கப்பட்டார். மோகன் ராகேஷ் முதன்முதலில் ஒரு சிறுகதை ஆசிரியராகவும் பிறகு நாவலாசிரியராகவும் அதன்பின் நாடகாசிரியராகவும் இந்தி இலக்கிய உலகில் இடம்பெற்றார். அது மட்டுமின்றி அவர் சிறந்த கட்டுரையாசிரியராகவும் மொழிபெயர்ப்பாள ராகவும் திகழ்ந்தார். இந்தி இலக்கிய உலகில் மோகன் ராகேஷ் மிக முக்கிய இடம் வகித்தார். இவர் எழுதிய மூன்று நாடகங்கள் மூலமாக இவருக்குத் தேசிய அளவில் பெயர் கிடைத்தது.

ராகேஷின் பல படைப்புகளும் சொந்த அனுபவங்களையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தன. அவரது பெரும்பாலான கதைகள் தனிமையைப் பற்றியவை, உடைந்து முறிந்து போகும் உறவுகளைப் பற்றியவை. கதையோ, நாவலோ, நாடகமோ எதுவானாலும் அதில் வெற்றி பெறாத காதல், சுகமான தாம்பத்யம், ஆனந்தமயமான உறவுகள் இவற்றையெல்லாம் ஆங்காங்கேதான் காணமுடியும். ராகேஷ் திரும்பத் திரும்பத் தன் வாழ்க்கையையே தன் படைப்புகளில் சித்திரித்திருக்கிறார் என்பது மோகன் ராகேஷ் வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்டுள்ள சான்றாதாரங்களில் இருந்து ஆய்வாளரால் ஊகிக்கமுடிகிறது. தன் உள்ள உணர்ச்சியைத் தன் பாத்திரங்ங்ள் வாயிலாக அவர் வெளிப்படுத்தி யிருக்கிறார். ராகேஷின் பல படைப்புகள் இந்தியாவின் பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பிறநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

1958இல் அவர் எழுதிய **ஆஷாட் கா ஏக் தின்** என்ற நாடகம்தான் அவரது முதல் நாடகம். இதனால் ராகேஷ் ஈட்டிய புகழ் வேறெந்த எழுத்தாளருக்கும் கிடைக்கவில்லை. **1958**இல் அவர் எழுதிய முதல் நாடகத்திற்குச் சங்கீத நாடக அக்காதெமியின் முதல் விருது கிடைத்தது. ராகேஷ் தமது வாழ்நாளில் மூன்று முழுநீள நாடகங்கள் எழுதினர். அவை: **ஆஷாட் கா ஏக் தின் (1958), லஹரோன் கே ராஜஹம்ஸ் (1963), ஆதே அதூரே (1969).** சில ஓரங்க நாடக்ங்கள், ஒலி நாடகங்கள் முதலியனவும் எழுதியுள்ளார்.

> **பைர் தலே கி ஜமீன்** என்ற நாடகத்தை அவர் எழுதத் தொடங்கி முடிக்காமல் விட்டுச் சென்றிருந்தார். அவரது நண்பர் கமலேஷ்வர் அதைப் பூர்த்தி செய்தார்.[49]

ராகேஷ் 1925ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி அம்ருத்சரஸில் பிறந்தார். வீட்டிற்குப் பின்னால் நாடோடிக் கும்பலின் குடியிருப்பொன்று இருந்தது. அவர்களது பாட்டும் ஆட்டமும் எப்பொழுதும் ராகேஷுக்குப் பிடித்தமானதாக இருந்தது. ஒருபுறம் மூடநம்பிக்கை மலிந்ததன் வீட்டுச் சூழ்நிலையில் சிறுவன் மதன் மோகன் குக்வானி மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாலும், மறுபுறம் வழக்கறிஞரான தந்தையின் ஆளுமை மோகன் ராகேஷை ஆட்கொண்டது. அவரது அறையில் சட்ட நூல்களைத் தவிரப் பலதரப்பட்ட இலக்கிய நூல்களும் நிறைந்திருந்தன. சிறுவயதிலேயே ராகேஷுக்கு வயலின் சித்தார் வாசிக்கத் தெரியும். புத்தகங்கள் சிறுவயதிலேயே ராகேஷைக் கவர்ந்தன. வீதியில் பிற பையன்களோடு விளையாடத் தடையிருந்ததால் வீட்டிலிருந்த பொருட்களே ராகேஷிற்குப் பிடித்தமான பொழுதுபோக்காயின. அப்பொழுதிருந்த தன் மனநிலையை ராகேஷ் தன் கட்டுரையில் பின்வருமாறு விளக்குகிறார்.

> நான் நூல்களோடு விளையாடுகிறேன். அப்பாவின் அறையில் எண்ணற்ற நூல்கள், அலமாரிகளில் நிறைந்து கிடக்கின்றன. நான் அவற்றுடன் கண்ணாமூச்சு விளையாடுகிறேன். அவைகளை மதில்களாக்கிக் கோட்டைகள் எழுப்புகிறேன். ஏதாவது கதைப் புத்தகம் காலில் விழுந்து காயம் பட்டுவிட்டால், அதை அலமாரிக்குள்ளே கோபத்துடன் தள்ளி வைத்து விடுகிறேன். எந்த நூலாவது பிடிக்காமற் போனால், அதைப் பழைய சாமான்கள் வைக்கும் பெட்டிக்குள் வைத்துப் பூட்டி விடுகிறேன். சமயம் கிடைக்கும்போது பெட்டியைத் திறந்து அவற்றைப் பார்த்து நையாண்டி செய்கிறேன். அதிகக் கோபம் வந்தால் தடியெடுத்தும் அடிப்பதுண்டு. பக்கங்களைக் கிழித்தெறிவதுமுண்டு. பிறகு மீண்டும் கேலி செய்து கொக்கரிப்பேன்.[50]

என்று மோகன் ராகேஷ் தன் சிறுவயது செயல்களை நினைவுகூர்கிறார்.

சிறுவயதிலேயே ராகேஷ் கனவு காண ஆரம்பித்துவிட்டார். சிறுவயதில் தனக்கிருந்த மன நிலையைத் தன்னுடைய கட்டுரையில் பின்வருமாறு விளக்குகிறார்.

> எனக்கு இருட்டைக் கண்டால் பயம். பகலிலே நான் கனவு காண்கிறேன். வீட்டிலோ, பள்ளிக்கூடத்திலோ எந்த நேரமாயினும் சரி – எந்த இடமாயினும் சரி, தலை ஒரு புறம் சாய்ந்து விடுகிறது. கண்கள் கனத்துப் போகின்றன.

> நெற்றியில் ஏதோ குறுகுறுப்புக் கையிலிருக்கும் ஸ்லேட்டிலோ, கரும்பலகையிலோ கோடு கோடாகத் தெரிகின்றன. முன்னாலிருக்கும் நபர் இரட்டை உருவமாகத் தெரிகிறார். கேட்கும் ஒலிகளெல்லாம் எங்கோ மறைந்து போகின்றன. ஆசிரியர் பாடம் எடுத்துக்கொண்டிருக்கும்போதே, நான் கனவுலகிற்குள் நுழைந்துவிடுகிறேன்.[51]

என்பது ராகேஷின் மொழிகள்.

கடந்த காலம் வருங்காலம் ஆகியவற்றிடையேயுள்ள தொடர்பு – இதனால் ஊசலாடும் உண்மை – நிலையற்ற தன்மை, இவற்றுள் கடிகாரப் பெண்டுலம் போல ஆடிக் கொண்டிருக்கும் தனது வாழ்க்கை. இதனைப் பற்றி ராகேஷ் நன்கு உணர்ந்திருந்தார். அவர் சிந்திக்கவும் பலவித அனுபவங்களைப் பெறவும் ஆரம்பித்திருந்தார். அவற்றைப் பற்றி அவர் தனது கட்டுரையில்,

> கடந்து போன நேற்றைய உண்மை இன்றைக்கோ கனவாகி விடுகிறது. நாளை வரப்போகும் கனவுகள் இன்றைய உண்மையாகின்றன. வாழ்க்கையில் ஒரு கணம் கூடத் தனித்து நில்லாமல் முன்னாலும் பின்னாலும் இணைந்தே இருக்கும் நிலை. எது நிகழ்ந்து முடிந்துவிடுகிறதோ, அதே வேர்களாகின்றன. எல்லையற்ற அது கிளைகளாகிக் காற்றில் அசைந்து செல்கிறது. வாழ்வின் ஒவ்வொரு நாளும் முந்தைய நாளில் தோன்றியதேயாகும். வரப்போகும் நாளை பிறப்பிப்பதிலேயே அதனுடைய முழுக்கவலை தெரிகிறது.[52]

என்று ராகேஷ் குறிப்பிடுகிறார்.

இந்தக் கவலையும் இந்த நிலையற்ற தன்மையும் நமது பண்பாக அமைகின்றன. 'வரப்போகும் காலத்தை எண்ணி எந்த ஒரு பனித் துளியும் அவசரப்படுவதில்லை. எங்கிருக்கிறாயோ, அங்கிருந்து எழுந்து அடுத்துச் செல்ல வேண்டிய இடத்தை நோக்கி முன்னேறு' என்று மோகன் ராகேஷ் குறிப்பிடுகிறார்.

மோகன் ராகேஷ் இந்தியிலும் ஆங்கிலத்திலும் எம்.ஏ. படித்தவர். பல ஆண்டுகள் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார். 1947இல் நடந்த இரண்டு நிகழ்ச்சிகள் ராகேஷை மிகவும் பாதித்தன. பாரதத்தின் பிரிவினையொன்று; சகோதரியின் மரணம் மற்றொன்று. இதைப்பற்றி அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> முதலாவது என்னை வேரோடு பிடுங்கியெறிந்தது போலிருந்தது. இரண்டாவது முன்னதால் ஏற்பட்ட பிரிவினை மேலும் ஆழப்படுவதாயிற்று.[63]

ராகேஷின் நெருங்கிய நண்பர் ராகேஷைப் பற்றி,

> பல கோர்ட்டுகளில் எனது இனிய நண்பன் இவற்றில் நின்றிருக்கிறான். பல குற்றச்சாட்டுகள் இவருடையவை. இவை சாதாரணமானவையல்ல. மிகவும் முக்கியமானவை. இவரிடமுள்ள முதல் குற்றம் இவர் எங்கும் நிலைத்து நிற்க மாட்டார். மற்றொரு குற்றம் எங்காவது நிலைபெற்றால் எழுந்திருக்க மாட்டார். உலகத்தில் எல்லோரும் அவருக்காகவே சிந்திக்க வேண்டும் அவருக்காகவே கவலைப்பட வேண்டும் என்பது அவரது விருப்பம். எல்லோருடைய துன்பங்களையும் அவரே சுமக்கவும் தயார். அதைப்பற்றி யாரும் எதுவும் பேசக் கூடாது. எல்லோரையும் அவர் துரத்துவார். அவரது சிரிப்பில் விஷமம் இருக்கும். அவருக்குத் தன்னைப்பற்றியே விசாரம். எனவே எங்கும் நிலையாது சுழலும் இவர் விரோதியையும் நண்பனாக்கிக் கொள்வார். நன்றாக எழுதக் கூடிய இலக்கியவாதி. ஆனால் மனிதர் நல்லவர் என்று சொல்ல முடியாது.[54]

என்று குறிப்பிடுகிறார்.

ராகேஷ் தனது நாட்குறிப்பில் தனது வாழ்க்கை, சிந்தனைகள், எழுத்து, காதல், தன் பெண் சிநேகிதிகள் முதலியன குறித்து எழுதியுள்ளவை அவருடைய பண்பு நலன்களைப் பற்றியும் உள்ளத்தின் உணர்ச்சிப்பூர்வமான சிந்தனைகள் பற்றியும் அறிந்துகொள்ள உதவுகின்றன. அவர் தனது நாட்குறிப்பில்,

> சில கணங்களில் மனிதனால் எதையும் சொல்ல முடிவதில்லை. எதையும் சிந்திக்க முடிவதில்லை. எதையும் விரும்ப முடிவதில்லை. எங்கோ தடைபட்டு நின்றுவிட்டது போன்ற உணர்வு. ஓடும் நீரோட்டத்தில் இருந்தும் கூட ஏதோ சகதிக்குள் சிக்கிக் கொண்டது போன்ற பிரமை. தன்னுடைய சக்திகள் தன் வசத்தில் இல்லாத நிலை; தேக்கமான உணர்வு; முன்னேற்றம் இல்லை; ஒரு இனம் புரியாத நடுக்கம்.[55]

என்று தனது உணர்வோட்டத்தைக் குறிப்பிடுகிறார்.

ராகேஷைப் பற்றி அவர் மனைவி திருமதி அனிதா ராகேஷ் மேலும் குறிப்பிடுகையில்,

> வெளித்தோற்றத்திற்கு மிகவும் சாதாரணமாகத் தென்பட்ட அவர் உள்ளூர அதற்கு நேரிடையானவராக இருந்தார். வாழ்க்கையை அவர் வெவ்வேறு வகையில் கண்டும் அனுபவித்துமிருந்தார். இந்த விசயத்தைத் தமது நண்பர்களுடன் கலந்து பகிர்ந்து கொள்ளவுமில்லை.

> அவருக்குத் தன்னிரக்கப்படுவது பிடிக்காதது. எனவே எங்குச் சென்றாலும் பதிலுக்குப் பதில் கூறிவிடுவார். கடந்த காலத்தில் அவருக்கு நம்பிக்கையில்லை. எதிர் காலத்தில் அவருக்கு ஏராளமான எதிர்பார்ப்புகள் இருந்தன. கடந்துவிட்டது முடிந்தவிட்ட கதை. இனி வருவதை எதிர்பார்ப்பதே சரியானது[56]

என்று அவர் கூறுவார்.

> அவரது இரட்டை வேடத்தை மிகக் கூர்மையாக அலசிப் பார்த்தால் இரண்டு பாகங்களைப் பார்க்கலாம். ஒரு புறம் மிக உயர்ந்த புத்திசாலியின் நிலை. மறுபுறம் மிக உயர்ந்த உணர்ச்சி மயமான நிலை. இரண்டு நிலைகளிலும் அவர் சிறந்தே விளங்கினார். இரண்டு எல்லைகளிலும் வாழ்ந்தவர். அவரை ஒரு தனிப்பட்ட ரக மனிதர் என்றே சொல்ல வேண்டும்.[57]

என்பது மோகன் ராகேஷின் மனைவியின் கருத்தாகும்.

மேற்குறிப்பிட்ட வரிகளில் ராகேஷின் கூடவே வாழ்ந்து அவரைப் புரிந்துகொண்ட அவரது மனைவி அனிதாவின் கருத்துப்படி அவரது தனித்தன்மை விளங்குகின்றது. எழுத்தைப் பொறுத்த வரையில் போதிய விழிப்புணர்ச்சியுடனும் முயற்சியுடனும் உண்மையாகவும் அவர் இருந்தார். அவரது முதல் பொறுப்பு எழுத்தேயாகும். எந்த எழுத்தாயினும் முதலில் எழுதுவது, பிறகு திரும்பப் பார்த்துத் திருத்துவது. பூரண திருப்தி ஏற்படும் வரை அச்சிற்கு அனுப்பாமலிருப்பது போன்றவை அவருடைய பழக்கங்களாகும். நாடகங்களில் கையாளும் மொழியைப் பற்றி அவர் மிகவும் முயன்று பாடுபட்டதுண்டு. தெளிவு, பொருட்செறிவு மற்றும் வளர்ச்சி முதலியவற்றிற்காக அவர் பெரிதும் உழைத்து எழுதுவார். இந்தக் காரணத்தினால்தான் அவரது நாடகங்கள் நிலைத்து நின்றன. 1958முதல் 1972க்குமிடையேயான 15 ஆண்டுகளில் மூன்று முழு மேடை நாடகங்களும் ஒரு சில வானொலி நாடகங்களும் மட்டுமே எழுதினார்.

1972 டிசம்பர் 3ஆம் தேதி ராகேஷ் திடீரென்று மரணமடைந்தார். அவர் மரணம் பற்றி அவரது மனைவி குறிப்பிடும்பொழுது,

> வாழ்க்கையின் தொடக்கத்திலிருந்தே அவர் போராட்டங்களையும், சோதனைகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. இவற்றிற்கு அஞ்சி வாழ்க்கையின் முடிவே பிரச்சினைகளின் முடிவென்று எப்போதும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. வாழ்க்கையின் முடிவு நெருங்குவதை அவர் அறிந்திருந்தால், அதை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியாது. அவருக்குத் தெரியாமலேயே அவர் மறைந்து விட்டார் என்பது எனக்கு மிகவும் நிம்மதியளிக்கிறது.[58]

ராகேஷ் இறந்தபோது அவருக்கு 48 வயது. ஆனால் இந்தக் குறைந்த ஆயுட்காலத்திலேயே அவர் கதை, நாடகம், ஓரங்க நாடகம், கட்டுரை, வாழ்க்கை வரலாறு, பயண நினைவுகள், மொழிபெயர்ப்புகள் என இலக்கியத்தின் பல துறைகளையும் அலங்கரித்தார். இந்தி மாத இதழான 'ஸரிகாவின்' ஆசிரியராக இருந்தார்.

> மோகன் ராகேஷ் தன்னுடைய நிபந்தனைகளோடு தன் விருப்பம் போலவும், தன் வசதிப் படியும் எதையும் செய்தார். வாழ்வில் துடிப்புடன், அதன் மீது நம்பிக்கையுடன், அளவற்ற உறுதியுடன், தனக்கென்று கொள்கையுடன், எல்லையற்ற தாராள குணத்துடன் சமயத்தில் சுயநலமும் சேர்ந்தவராக, ராயல்டி போன்ற விஷயங்களில் யாருக்கும் வளைந்து கொடுக்காதவராகச் சிறந்த ஆட்சித்திறன் படைத்தவராக மிகவும் சுதந்திர வேட்கை கொண்டவராக – பல முரண்பாடுகளின் ஒன்று திரண்ட வடிவமாக மோகன் ராகேஷ் வாழ்ந்து மறைந்தார்.[59]

மோகன் ராகேஷின் படைப்புக்கள்

மோகன் ராகேஷ் –

இன்ஸான் கே கண்டஹர் (பிரகதி பிரகாசன், டில்லி, 1950),

ஜான்வர் ஔர் ஜான்வர் (ராஜ்கமல் அண்டு சன்ஸ், கஷ்மீரி கேட், டில்லி),

ஏக் ஔர் ஜிந்தகி (ராஜ்பால், 1961),

நயே பாதல் (பாரதீய ஞானபீடம், வாரணாசி, 1957),

பௌலாத் கா ஆகாஷ் (ஆக்ஷர பிரகாசன், 1966),

ஆக் கே சாயே (ராதாகிருஷ்ண பிரகாசன் பி.லிட்., தரியாகஞ். புதுதில்லி),

ரோன்யே ரேசே (ராதாகிருஷ்ண, 1968),

ஏக் ஏக் துனியா (ராதாகிருஷ்ண, 1968),

மிலே ஜுலே சேஹ்ரே (ராதாகிருஷ்ண, 1969),

க்வார்டர் (ராஜ்பால் அண்டு சன்ஸ், டில்லி, 1972),

வாரிசு (ராஜ்பால் அண்டு சன்ஸ், டில்லி, 1972).

மேரி ப்ரிய கஹானியான் (ராஜ்பால் அண்டு சன்ஸ், டில்லி, 1971),

பஹ்சான் (ராஜ்பால் அண்டு சன்ஸ், டில்லி, 1972),

சுஹாகினே (ஹிந்தி பாக்கெட் புக்ஸ், 1966),

சம்பூர்ண கஹானி சங்க்ரஹ் (ராஜ்பால் அண்டு சன்ஸ், டில்லி, 1984),

பாஞ்ச் லம்பி சுஹானியான் (ராஜ்கமல்பிரகாசன் பி.லி., புதுடில்லி, 1960).

போன்ற கதைத்திரட்டுக்களை எழுதியுள்ளார்.

'அந்தேரே பந்த் கம்ரே' (ராஜ்கமல், புதுடில்லி, 1961),

'அந்தரால்' (ராஜ்கமல், புது டில்லி, 1961),

'ஆனேவாலா கல்' (ராஜ்பால், புது டில்லி, 1968).

என்ற மூன்ற நாவல்களை எழுதியுள்ளார்.

'ஆஷாட் கா ஏக் தின்' (ராஜ்கமல், 1959),

'லஹரோன்கே ராஜஹம்ஸ்' (ராஜ்கமல், 1963),

'ஆதே அதூரே' (ராதாகிருஷ்ண, புதுடில்லி, 1969),

'பைர் தலே கி ஜமீன்' (ராஜ்பால், 1975)

என்ற முழு நீள நாடகங்களை எழுதியுள்ளார்.

'அண்டே கா சில்கா', அன்ய ஏகாங்கி' (ராதாகிருஷ்ண, 1973),

'ததா பீஜ் நாடக்', 'ராத் பீத்னே தக் ததா அன்ய',

'நிலனி நாடகக்' (ராதாகிருஷ்ணன், 1974).

என்ற மூன்று ஓரங்க நாடகத் தொகுப்புகளையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

'ஆகிரி சட்டான் தக்' (பிரகதி பிரகாசன், 1953) என்ற பயண நினைவுகள் பற்றிய நூலையும், 'பகல் மகுத்' (ராஜ்பால், 1974), 'பரிவேஷ்' (பாரதீய ஞானபீடம், 1967) 'ஸாஹித்யிக் ஔர் ஸான்ஸ்க்ருதிக் திருஷ்டி' (ராதாகிருஷ்ண, 1975), 'சமய சாரதி' (ஜீவனி) (ராதாகிருஷ்ண, 1972) போன்ற நான்கு கட்டுரைத் தொகுப்பையும், மோஹன் ராகேஷ் கி. டயரி' (ராஜ்பால், 1985) என்ற நாட்குறிப்பையும் எழுதியுள்ளார்.

'பினா ஹாண்ட் – மால் கா ஆத்மி' (ராதாகிருஷ்ண, 1974), 'என் என்தாலாஞ்சி', 'ஆயினே கே சாம்னே', 'தேரேஹ் கஹானியான்' மற்றும் 'ஏக் சாக்க்ஷாத்கார் கா ஆங்க்ரேசி அனுவாத்' (ராதாகிருஷ்ண, 1974) 'ரங்கமஞ்ச் ஔர் சப்த்' (கட்டுரை), 'சப்த் ஔர் த்வனி' (கட்டுரை) (எனாக்ட் அங்க் 21) என்ற மற்ற தொகுப்புகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

மேலும் வடமொழியில் சூத்ரகர் எழுதிய 'மிருச்சகடிகை' என்ற நாடகத்தை 'மிருச்சகடிகம்' என்ற பெயரிலும், காளிதாசன் எழுதிய 'அபிஞான சாகுந்தலம்' என்ற நாடகத்தை 'சாகுந்தலம்' என்ற பெயரிலும் இந்தியில் மொழி பெயர்த்துள்ளார்.

ஹென்றி ஜேம்ஸ் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'தி போர்ட்ரெய்ட் ஆப் எ லேடி' என்ற நாவலை 'ஏக் ஔரத் கா சேஹ்ரா' என்ற பெயரிலும், கிரஹாம் கினி ஆங்கிலத்தில் எழுதிய 'தி எண்ட் ஆப் தி அபேர்' என்ற நாவ்லை 'உஸ்ராத் கே பாத்' என்ற பெயரிலும் எடிடர் மாரிஸின் ஆங்கில நாவலான 'ப்ளவர்ஸ் ஆப் ஹிரோஷிமா' என்பதை 'ஹிரோஷிமா கே பூல்' என்ற பெயரிலும் இந்தியில் மொழிபெயர்த்துள்ளார்.

மோகன் ராகேஷைப் பற்றிப் படைப்பாளர்கள் சிலர் எழுதிய குறிப்பிடத்தக்க நூல்களும் கட்டுரைகளும்

'சந்த் சதரேன் ஔர்' – அனிதா ராகேஷ் (ராதாகிருஷ்ண, 1975), 'மேரா ஹம்தம் மேரா தோஸ்த் கமலேஷ்வர் (நாஷனல், 1975), 'ஆதுனிகதா ஔர் மோஹன் ராகேஷ்' – ஊர்மிளா மிச்ர (விச்வவித்யாலய காசன், வாரணாசி), 'கஹானிகர் மோஹன் ராகேஷ் –சுஷ்மா அகர்வால் (பஞ்சசீல் ப்ரகாசன், ஜய்பூர், 1979), 'உபன்யாஸ்கார் மோஹன் ராகேஷ்' –விமலாகுமரி பண்டிட் (பஞ்சசீல் ப்ரகாசன், ஜய்பூர், 1978), 'ஸ்வதந்த்ர யோத்தர் ஹிந்தி நாடக்: மொஹன் ராகேஷ் கே –கேரீடா குமார், விசேஷ் சந்தர்ப் மேன் – கேரீடா குமார் (விபு ப்ரகாசன், ஸாஸிபாபாத்), 'ஆதுனிக் நாடக் கா மஸீஹா – கோவிந்த் சாதக்' (இந்தர ப்ரஸ்த ப்ரகாசன், டில்லி, 1975), 'மோஹன் ராகேஷ் கி ரங்க ச்ருஷ்டி' – ஜகதீஷ் சர்மா (ராதாகிருஷ்ண, 1975), 'லஹரோன் கே ராஜஹம்ஸ்' – ஜயதேவ் தனேஜா விவித ஆயாம் (தக்ஷண ப்ரகாசன், நயி டில்லி, 1977), 'நாடக்கார் மோஹன் ராகேஷ்' – ஞானபிரகாஷ் ஜோஷி. 'நாடக்கார் மோஹன் ராகேஷ்' – சுந்தர்லால் கதூரியா, 'அப்னே நாடகோங்கே தயாரே மேன்' –திலக்ராம் சர்மா, 'நாடக்கார் மோஹன் ராகேஷ்' (ஆர்ய புக் டிப்போ, நயி தில்லி, 1976), 'லஹரோங்கே ராஜஹம்ஸ்' : ஸமீஷா ராஜேஷ் சர்மா, 'ஆதே அதூரே': ஸமீஷா ராஜேஷ் சர்மா, 'ஆதுனிக் ஹிந்தி நாடக் ஔர் நாட்யகார்' – ராஜ்குமார் குப்த், 'மோஹன் ராகேஷ் வ்யக்தித்வ ஔர் க்ருதித்வ'– சுஷ்மா அகர்வால் – போன்ற நூல்களும், மோஹன் ராகேஷ் நினைவுமலராக வெளிவந்த 'நட்ரங்க், அங்க் 21' இல் வெளியானவை– நேமி சந்த்ர ஜெயின், மோஹன் ராகேஷ் நினைவு மலராக வெளிவந்த 'எனாக்ட்டின்' 73–74 இதழ்களில் ரஜீந்தர் பால் சுரேஷ் அவஸ்தி எழுதிய 'ஆஜ் கே ரங்க் நாடக்' நூலின் முன்னுரையில்–இப்ராஹிம் அல்காசி தேஷ்பாண்டே சுரேஷ் அவஸ்தி, மோகன் ராகேஷ் நினைவுமலராக வெளிவந்த 'ஸாரிகா' இதழ் (மார்ச்1973) 79ஆம் பக்கம் – ராகேஷ் யாருக்கோ எழுதிய கடிதம் போன்ற கட்டுரைகளும் மோகன் ராகேஷ் பற்றி வெளியிடப்பட்ட முக்கியப் படைப்புகளாகும்.

நவீன இந்தி நாடக வரலாற்றில் மோகன் ராகேஷ் பெறும் இடம்

மோகன் ராகேஷின் நாடகங்கள் கதைப் பொருள், பாத்திரப் படைப்பு, நாடக மொழி முதலிய எல்லா நிலைகளிலும் வாழ்க்கையோடு தொடர்புடையதாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. நடுத்தர மக்களின் வாழ்க்கையில் இடம்பெறும் நண்பர்களின் போராட்டம், தனிமை, திருமணவாழ்வில் காணப்படும் சிக்கல்கள் போன்றவற்றை மற்ற இந்தி நாடக எழுத்தாளர்களைவிட மோகன் ராகேஷ் தமது நாடகப் படைப்புக்களில் சிறப்பாகச் சித்திரித்துள்ளார். இதனால் இந்தி நாடக உலகில் ராகேஷ் தனிச் சிறப்புடன் விளங்கினார்.

> ஒரு எழுத்தாளனின் முக்கியப் பொறுப்பானது அவரது சிறந்த எண்ண ஓட்டங்களை மட்டுமின்றி அவருக்குச் சொந்தமான அவருடைய காலத்தை ஒட்டிய அக்கால வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகும்[60]

என்பது மோகன் ராகேஷின் கருத்தாகும். இக்கருத்து அவரது அனைத்து நாடகப் படைப்புக்களிலும் வெளிப்பட்டுத் தோன்றுகிறது. அவர் தான் வாழ்ந்த காலத்துடனும் சூழ்நிலையுடனும், பிரச்சினைகளுடனும் ஒன்றி இருந்தமையால் தன் உண்மை அனுபவங்களைத் தமது படைப்புக்களில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆஷாட் கா ஏக் தின் என்ற நாடகத்தில் அரசாங்க மரியாதைக்கும் எழுத்துத் திறனின் சிறப்புக்கும் இடையே நடக்கும் போராட்டத்தைப் பற்றி விரிவாகப் பேசுகிறார். இந்நாடகத்தில் இடம்பெறும் அரசாங்க அலுவலர்கள், உல்லாச மனிதர்கள், இராணி பிரியங்கு மஞ்சரியின் மனநிலை போன்றவை இந்நாளைய அரசாங்க ஊழியர்கள், கலைஞர்கள், ஆளுநர்கள் முதலானோரது மனப் போக்குகளைப் பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளன.

மனிதனின் தன்மை, உள்மனக் குழப்பங்கள், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ இயலாமை, ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போவதற்குப் பதிலாகத் தமது சொந்த விருப்பம், அகங்காரம் போன்றவை மேலோங்கி நிற்றல் என்னும் பண்புகள் 20ஆம் நூற்றாண்டிற்குரிய நாகரீகமும் பிடிவாதமுமாகும்.

லஹரோன் கே ராஜஹம்ஸ் என்ற நாடகத்தின் பாத்திரங்கள் மேற்கண்ட பண்புகளைப் பிரதிபலிப்பனவாகவே படைக்கப்பட்டுள்ளனர்.

இவரின் **ஆதே அதூரே** என்ற நாடகமும் ஆண் பெண் இருவரின் தானெனும் உணர்வையும் இருவரது ஆளுமைக்கிடையே நடைபெறும் போராட்டத்தையும் உள்ளீடாகக் கொண்டது. இன்றைய நாகரீக உலகின் வாழ்க்கையும் பிரச்சினையும் உள்ளது உள்ளபடியே இந்நாடகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆதே–ஆதூரே ராகேஷின் மிகச் சிறந்த நாடகப் படைப்பாகும்.

மோகன் ராகேஷின் முதல் இரண்டு நாடகங்களும் சரித்திரத்தோடு தொடர்புடையதால் வடமொழிக் கலப்பு மிகுந்துள்ளன. வடமொழி கலந்திருக்கும் நாடகக் கதை புரிந்து கொள்ளும் வகையில் எளிதாகவே உள்ளது. ஒருசில இடங்களைத் தவிரச் சாதாரண மக்களுக்குக்கூட இந்த மொழி புரியக் கூடியதாக உள்ளது. ஒவ்வொரு வார்த்தையும் தேர்ந்தெடுக்கப்பட்டு ராகேஷால் பயன்படுத்தப்பட்டுள்ளது. ராகேஷின் நாடகங்களில் பொருளற்ற சொற்கள் இடம்பெறுவதில்லை. எந்தக் கருத்தை எப்படி சொல்ல வேண்டுமோ அந்த அளவிலேயே செல்லாட்சி அமைந்துள்ளது. மோகன் ராகேஷ் நாடகங்களில் பயன்படுத்தப்படும் மொழி நடை குறித்து மோகன் ராகேஷ் நாடகங்கள் பற்றித் திறனாய்வு செய்த பிரதிபா அகர்வால் குறிப்பிடும் கருத்து இங்கே குறிப்பிடத் தகுந்தது :

> எனக்குத் தெரிந்தவரை சிந்தனைச் சுலபமாக செல்லும் நாடகக் கோப்பும், உரையாடல்களும் வேறெந்த படைப்பிலும் காணப்படவில்லை[61]

பொதுவாக நவீன நாடகங்களில் தனிமொழிகளைத் தவிர்ப்பது வழக்கமாக உள்ளது. எனினும் மோகன் ராகேஷ் நாடகங்களில் பாத்திரங்களுக்கு இடையேயான நீண்ட உரையாடல்களும், தனிமொழி களும் அவரது நாடகங்களின் சிறப்புத் தன்மைகளாக விளங்குகின்றன. ஆஷாட் கா ஏக் தின்–இல் மல்லிகாவின் நீண்ட தனிமொழியும் லஹரோன்கே ராஜஹம்ஸ்–இல் நந்தனுடைய தனி உரையும் அந்தந்த நாடகங்களில் சிறப்பிடம் பெறுகின்றன. நந்தன் மனதிலுள்ள சிக்கல்கள் மற்றும் வாதப் பிரதிவாதங்கள் மிகவும் தெளிவாகப் புலப்படுவதற்கு நந்தனின் தனிமொழி பயன்படுகிறது. ஆஷாட் கா ஏக் தின்–இல் காளிதாசன் தனக்குத் தானே பேசிக்கொள்வது தன் ஆத்மாவுடன் அவன் பேசுவது போல் உள்ளது. இந்நாடகத்தில் மல்லிகாவின் நீண்ட தனிமொழி அவளின் உள்மனதை வெளிக் கொணர்வதாக அமைந்துள்ளது. இரு பாத்திரங்களுக்கிடையே நடைபெறும் நீண்ட உரையாடல்களில் நாடகத் தன்மை மிகுந்து காணப்படுகிறது. இப்படி பேசுபவர்கள் தம்மைப் பற்றிப் பேசாமல் எதிரில் உள்ளவரைப் பற்றியோ வேறு யாரையாவது பேசுவதால் இவை நாடகத்தனிமொழிகள் என்ற அளவில் அமையாமல் விறுவிறுப்பான போக்கைக் குறைக்காமல் நாடக முடிவை நோக்கிக் கொண்டு செல்லத் துணை செய்கின்றன.

ஆடி மாதத்தில் ஒரு நாள்

பாத்திரங்கள்:

அம்பிகா	: கிராமத்து வயது முதிர்ந்த பெண்மணி
மல்லிகா	: அம்பிகாவின் பெண்/காளிதாசனின் காதலி
காளிதாசன்	: கவி
தந்துல்	: அர்சபுருசர்
மாதுல்	: கவி மாதுல் (காளிதாசனின் உறவினன்)
நிக்ஷேப்	: கிராமப் புருசன்
விலோம்	: கிராமப் புருசன்
ரங்கிணி	: நகரப் பெண்மணி
ஸங்கிணி	: நகரப் பெண்மணி
அனுஸ்வர்	: அரசாங்க அதிகாரி
அனுநாஸிக்	: அரசாங்க அதிகாரி
பிரியங்குமஞ்சரி	: அரசகுமாரி – கவிபத்தினி

அங்கம் ஒன்று

ஆடி மாதத்தில் ஒரு நாள்

திரை இழுப்பதற்கு முன்னால் மெல்லிய மேகங்களின் மழை ஒலி, திரை இழுத்த பிறகும் சில மணித்துளிகள் கேட்கப்படுகின்றன. பிறகு மெல்ல மெல்ல ஒலி அடங்குகிறது.

திரை இழுக்கப்படுகிறது.

ஒரு சாதாரண அறை, மரத்தில் ஆன சுவர், தரை களிமண்ணினால் மெழுகப்பட்டுள்ளது. நடுவில் ஸ்வஸ்திக்குறி செம்மண்ணினால் வரையப் பட்டுள்ளது. எதிர்ப்புற வாசல் இருட்டு நிலைப்படி பக்கம் திறக்கிறது. அதன் இரு பக்கமும் சின்ன மாடம், அதில் அணைந்த மண் விளக்குகள். இடதுபுறக் கதவு மற்ற ஒரு அறைக்குச் செல்ல உள்ளது. வாசல் திறந்து உள்ளதால் உள் அறையில் விரித்த கட்டிலின் இரு பாகம்தான் காணப்படுகின்றன. வாசற்கதவுகளின் வெளிப்புறம் மண்ணில் மெழுகப்பட்டுள்ளது. அவற்றில் செம்மண், மஞ்சள், தாமரை, சங்கு காணப்படுகின்றன. இடது பக்கம் ஒரு பெரிய ஜன்னல். அதில் மின்னும் மின்னல் காணப்படுகிறது.

அறையின் ஒரு பக்கத்தில் அடுப்பு. அதன் பக்கத்தில் மண், வெங்கலப் பாத்திரங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டுள்ளன. மற்ற பக்கத்தில் ஜன்னலை ஒட்டி மூன்று நான்கு குதிர்கள் கருமை படர்ந்து காணப்படுகின்றன. அவை வைக்கோல் பிரியினால் மூடப்பட்டுக் கற்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஜன்னலை ஒட்டி ஒரு மரப்பலகை. அதில் புலித்தோல் விரிக்கப் பட்டுள்ளது. அடுப்பை ஒட்டி இரு இருக்கைகள், ஒன்றில் அம்பிகா அமர்ந்து முறத்தில் அரிசி சுத்தம் செய்கிறாள். ஒரு தடவை ஜன்னலைப் பார்த்துப் பெருமூச்சு விட்டு மறுபடியும் அரசி சுத்தம் செய்ய ஈடுபடுகிறாள்.

எதிர்புறப் வாசல் திறக்கிறது. மல்லிகா ஈர ஆடைகளில் நனைந்து நடுங்கி உள்ளே வருகிறாள். அம்பிகா குனிந்தபடி தன் வேலையில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறாள். மல்லிகா ஒரு வினாடி திடுக்கிட்டு, அம்பிகா அருகில் அமர்கிறாள்.

மல்லிகா : ஆடி மாத முதல் நாள்.... இப்படி கொட்டும் மழையில் நீண்ட தூரம் வரை மலைப்பிரதேசங்கள் நனைந்துவிட்டன. நானும் தான்.... எப்படி நனைந்துவிட்டேன்..... பார்த்தாயா? அம்மா?

(அம்பிகா அவளைத் தலைமுதல் பாதம் வரை பார்த்துவிட்டுத் தன் வேலையில் ஈடுபடுகிறாள். மல்லிகா மண்டியிட்டு அமர்ந்து அவள் தோளில் தன் தலையைச் சார்த்தி....)

தெற்கிலிருந்து பறந்து வரும் நாரைக் கூட்டத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன். பார்... முழுவதுமாக நனைந்து வந்துள்ளேன்.

(அவளின் கேசத்தை முத்தம் இட்டபடியே எழுந்து குளிரினால் நடுங்கியபடியே)

அம்மா.... உலர்ந்த ஆடைகள் எங்கே? இப்படியே நின்றால் ஒடுங்கி விடுவேன்..... நீ ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?

(அம்பிகா கோபமாகப் பார்த்தபடியே)

அம்பிகா: உலர்ந்த ஆடைகள் கட்டிலின் மேல் உள்ளன.

மல்லிகா: நீ முன்னமே எடுத்து வைத்துவிட்டாயா?

(உள்ளே செல்கிறாள்)

நான் நனைந்து விடுவேன் என்று உனக்குத் தெரியும். நீ கவலைப்படுவாய் என்று எனக்குத் தெரியும். ஆனால்....

(வாசல் பக்கம் சென்று அம்பிகாவைப் பார்த்து)

எனக்கு நனைவதில் கொஞ்சம்கூட கவலை இல்லை. நனையாவிட்டால் அருமையான காட்சிகளைக் காண முடியாது. இயற்கையை இரசித்திருக்க முடியாது.

(வாயிலைப் பார்த்தபடியே...)

நாலாபக்கமும் மேகங்கள் சூழ்ந்து வந்தன. மழை வரும் என எனக்குத் தெரியும். ஆனாலும் பள்ளத்தாக்கின் ஒற்றையடிப் பாதையில் கீழே இறங்கியபடியே சென்றேன். காற்றினால் எனது மேல் ஆடையும் பறந்து விட்டது. துளிகள் விழ ஆரம்பித்தன.

(அம்பிகாவைப் பார்த்தபடியே....)

ஆடையை மாற்றியபின் உனக்கு மீதியைச் சொல்கிறேன்..... மிகவும் அற்புதமான அனுபவம்..... அற்புதமான.....

(உள்ளே செல்கிறாள் – அம்பிகா எழுந்து புடைத்த அரிசியை ஒரு குதிரில் இட்டு மற்ற குதிரிலிருந்து அரிசியை எடுக்கிறாள். உள் அறையில் மல்லிகாவின் ஒலி கேட்கிறது. நடுநடுவில் அவளும் காணப்படுகிறாள்)

நீலத்தாமரை போன்ற மென்மையான, ஈரமான காற்றைப் போன்ற மெல்லிய கனவு போன்ற வண்ணமயமான..... அவற்றை என்னுள் அடக்கி, கண்களை மூடி...... என்னுடைய உடலும் சொட்டுகிறது..... பார்...... இந்த ஆடைகள் எவ்வளவு தண்ணீர் பருகிஇருக்கும்....

குளுமையில் உணர்விற்குப் பிறகு வெப்பத்தின் தொடுதல்......

(மெல்லிய குரலில் பாடியபடியே)

ஈரத்துணியை எங்கே வைப்பது? இங்கே வைக்கட்டுமா?

(வெளியே வருகிறாள்)

அம்மா இன்றைய அந்த நொடிகளை நான் ஒரு பொழுதும் மறக்க மாட்டேன். அழகின் அந்த எதிர்காணலை நான் பார்த்ததே இல்லை. அந்த அழகு தொடமுடியாத உடலழகு. நான் அதைத் தொட, பார்க்க, அருந்த முடிந்தது. அப்பொழுது எது உணர்வு களுக்குக் கவிதை உருவம் கொடுக்கிறது என்று அனுபவிக்க முடிந்தது. ஏன் மனிதன் மலை முகடுகளைத் தடவும் மேகத்தில் ஆழ்ந்துவிடுகிறான்! ஏன் மனிதன் தன்னை மறந்து வானத்தில் வரையப்படும் விதவிதமான மேக ஓவியத்தில் மூழ்கி விடுகிறான் என்று இன்றுதான் வாழ்வில் முதன்முறையாக அனுபவித்து உணர்ந்தேன்.... அம்மா என்ன ஆயிற்று உனக்கு? ஏன் பேசாமல் இருக்கிறாய்?

அம்பிகா : நான் வேலை செய்வதைப் பார்க்கவில்லையா?

மல்லிகா : நீ எப்பொழுதும்தான் வேலை செய்கிறாய்! ஆனால் எப்பொழுதும் இந்த மாதிரி வாய்மூடி இருப்பதில்லையே!

(அம்பிகா அருகில் அமர்கிறாள். அம்பிகா அமைதியாக அரிசி சுத்தம் செய்கிறாள். மல்லிகா அவளிடம் இருந்து முறத்தை வாங்கி)

நான் உன்னை வேலை செய்ய விடமாட்டேன். என்னிடம் பேசு.

அம்பிகா: என்ன பேசுவது?

மல்லிகா: ஏதாவது! நான் ஏன் நனைந்தேன் என்று அதட்டு, நான் சோர்ந்துவிட்டேன். நீ மீதியைச் சுத்தம் செய் என்று சொல்.

இல்லாவிட்டால் நான் வீட்டில் தனியாக இருக்கிறேன். எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்.

அம்பிகா : எனக்கு எல்லாம் பிடித்திருக்கிறது? ஏதோ..... வாழ்கிறேன்...

(முறத்தை வாங்கி)

நான் வீட்டில் ஏன் தனியாக உள்ளேன்? நீ இங்கு இருக்கும் பொழுது எனக்குத் தனிமை ஏன்?

மல்லிகா : நான் உன்னை வேலை செய்யவிட மாட்டேன்.

(முறத்தை அவளிடம் இருந்து வாங்கிக் குதிர்கள் பக்கம் வைத்துவிட்டு)

நான் வீட்டில் இருக்கும்பொழுது நீ தனியாகவா?

நான் வீட்டில் இருந்து உனக்குத் தொந்தரவு கொடுக்கிறேன் என்று நீதானே திட்டுகிறாய்?

(பின் பக்கமாக அவள் கழுத்தில் தன் கைகளைக் கோர்த்து)

நீ ஏன் இன்று இவ்வளவு முறைத்துக் கொண்டு இருக்கிறாய்? கோபமா.........

அம்பிகா : அடுப்படியில் பால் காய்ச்சி வைத்திருக்கிறேன். சீனி சேர்த்துக் குடி.

மல்லிகா : இல்லை. நீ முதலில் குடி.

அம்பிகா : போய் கட்டிலில் படுத்துக்கொள். எனக்கு இன்னும் அதிகமாக வேலை இருக்கிறது. முடிக்க வேண்டும்.

மல்லிகா : இல்லை. நான் படுக்க மாட்டேன். நான் எங்குக் களைத்து உள்ளேன்? எனக்கு இன்னும் மழைத்துளிகளின் குளிர்ச்சியின் உணர்வு உள்ளே இருக்கிறது. மயிர்க்கால்கள், இன்னும் சில்லிட்டுக் கொண்டே இருக்கின்றன. நீ பேசாமல் இருக்கிறாய். நீ பேசாவிட்டால் நானும் உன்னிடம் பேசாமல் இருந்துவிடுவேன்.

(அம்பிகா பேசாமல் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு பக்கத்து இருக்கையில் உட்காருகிறாள். மல்லிகா ஒரு வினாடி வரை அவளையே நோக்குகிறாள்)

அம்மா! என்ன ஆகிவிட்டது உனக்கு? ஏன் அழுகிறாய்?

அம்பிகா : ஒன்றும் இல்லை மல்லிகா! எதையோ நினைத்து மனம் சோர்ந்து விடுகிறது.

மல்லிகா : எதையோ நினைத்து மனம் சோர்ந்து விடுகிறது. ஆனால் அமர்ந்து அழ முடியவில்லை. என் மேல் ஆணை. அப்படித்தானே! கூறு அப்படித்தானே!

(சற்றுத் தொலைவில் ஆரவாரம். குதிரைக் குளம்புகளின் அடிச்சத்தம். அம்பிகா எழுந்து ஜன்னல் அருகில் போகிறாள். மல்லிகா ஒரு வினாடி வரை அமர்ந்து இவளும் ஜன்னல் வழியாகப் பார்க்கிறாள். குதிரைக் காலடிச் சப்தம் அருகில் வந்து தூரம் சென்று விடுகிறது)

அம்மா! இவர்கள் யார்?

அம்பிகா : ஒரு வேளை அரசாங்க அதிகாரிகள் போலும்.

மல்லிகா : இவர்கள் இங்கு என்ன செய்கிறார்கள்?

அம்பிகா : என்ன செய்கிறார்களோ!... எப்பொழுதாவது வருடங்களில் ஒரு முறை இந்த உருவங்கள் இங்குக் காணப்படுகின்றன. அவர்கள் இங்குக் காணப்பட்டால் ஏதாவது ஒரு வேண்டாத சம்பவம் நடைபெறுகிறது. ஒரு பொழுது போர்! அல்லது ஒரு பொழுது அம்மை, மஹா மாரி!

(பெருமூச்சு எடுத்து)

கடந்த அம்மை கண்ட சமயத்தில் உன் அப்பா இறந்த சமயம் இந்த உருவங்கள் இங்குக் காணப்பட்டன.

(மல்லிகாவிற்குத் தலை முதல் கால் வரை ஒரு நடுக்கம் ஏற்படுகிறது)

மல்லிகா : ஆனால் இன்று ஏன் இவர்கள் இங்கு வந்துள்ளார்கள்?

அம்பிகா : ஏன் வந்தார்கள்... தெரியவில்லை.

(அம்பிகா முறத்தைக் கையில் எடுக்க மல்லிகா கைகளினால் தடுக்கிறாள்)

மல்லிகா : அம்மா! நீ உண்மையைச் சொல்லவில்லை.

(அம்பிகா அசையாக் கண்களினால் அவளைப் பார்த்துவிட்டு கண்களைத் தாழ்த்திக் கொள்கிறாள்)

அம்பிகா : அக்னிமித்ரன் இன்று திருப்பி வந்துள்ளான்.

(அம்பிகா.... முறத்தை எடுத்துக்கொண்டு தன்னிடம் நோக்கிச் செல்லுகிறாள். மல்லிகா அங்கேயே நிற்கிறாள்)

மல்லிகா : திரும்பி வந்துவிட்டானா? எங்கிருந்து...?

அம்பிகா : நான் அனுப்பிய இடத்திலிருந்து....

மல்லிகா : நீதான் அனுப்பினாயா?

(உதடுகள் துடிக்க முன் சென்று அம்பிகா அருகில் வருகிறாள்)

அக்னிமித்திரனை எங்கும் அனுப்பவேண்டிய அவசியமில்லை என்று நீதானே சொன்னாய். பிறகு...?

(படிப்படியாகச் சொல்லில் வேகம் அதிகரிக்க)

எனக்குத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று உனக்குத்தான் தெரியுமே! ஆனாலும் அதற்கு நீ ஏன் முயற்சி செய்கிறாய்! நான் ஏதோ உளறுகிறேன் என்ற எண்ணம் உனக்கு. அப்படித்தானே...!

(அம்பிகா அரிசி மணிகளைக் கைகளில் எடுத்துத் தேய்த்துத் தேய்த்து முறத்தில் போட்டுக் கொண்டே)

அம்பிகா : "உன் எண்ணமே உண்மையாகப் போகிறது" அவர்களுக்கு இந்தப் பந்தத்தில் விருப்பம் இல்லை என்று அக்னிமித்ரன் மூலம் செய்தி சொல்லிவிட்டார்கள். அவர்கள் சொல்வது........

மல்லிகா : அவர்கள் என்ன சொல்வது? அவர்களுக்கு என்ன சொல்ல உரிமை உள்ளது? மல்லிகாவின் வாழ்க்கை அவளின் தனிச் சொத்து. அவள் அதைச் சோதிக்க விரும்பினால் அதைத் தடுக்கவோ அல்லது குறை சொல்லவோ யாருக்கு என்ன உரிமை உள்ளது...?

அம்பிகா : எனக்கு உரிமை உள்ளது என்று நான் எப்பொழுது சொன்னேன்?

(மல்லிகா தன் தலையைத் தாழ்த்தித் தன்னுடைய படபடப்பை மறைக்க முயற்சி செய்கிறாள்)

மல்லிகா : நான் உன் உரிமை பற்றிப் பேசவில்லை.

அம்பிகா : நீ சொல்ல வேண்டாம். நானே சொல்கிறேன். இன்று "உன் வாழ்க்கை உன் சொத்து. உன் மீது எனக்கு எந்த உரிமையும் கிடையாது"

(மல்லிகா பக்கத்து இருக்கையில் அமர்ந்து தன் கைகளினால் அவள் தோளைப் பற்றுகிறாள்)

மல்லிகா : உரிமை இல்லை என்று ஏன் சொல்கிறாய். நீ ஏன் என்னைப் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாய்.

(அம்பிகா அவள் கைகளைக் கழுத்திலிருந்து எடுத்து)

அம்பிகா : இன்று உன் மேல் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்று தெரியும். ஆனால் உன் மேல் இவ்வளவு பெரிய பழி என்னால் சகிக்க முடியவில்லை.

(மல்லிகா கைகளைத் தன் முழங்கால்களுக்குள் வைத்துத் தலையைத் தாழ்த்தி)

மல்லிகா : பழி ஏற்படும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். உன் வருத்தமும் எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு எந்தக் குற்ற உணர்வும் ஏற்படவில்லை. எனது உணர்வு மற்ற ஓர் உணர்வைத் தனதாக்கிக் கொண்டுவிட்டது. அந்த உறவு ஏனைய உறவுகளை விட உயர்ந்தது. நான் என் உணர்வைக் காதலிக்கிறேன். அது புனிதமானது. மென்மையானது. என்றும் அழியாதது.

(அம்பிகாவின் முகத்தில் கவலையின் எண்ணக்கோடுகள் விழுகின்றன)

அம்பிகா : நான் அப்படிப்பட்ட உணர்வை வெறுக்கிறேன்.... புனிதமாம்! மென்மையாம்! அழியாததாம்! உம்.

மல்லிகா : அம்மா.... நீ ஏன் என்னை நம்பமறுக்கிறாய்?

அம்பிகா : நீ எதை உணர்வு என்று நினைக்கிறாயோ அது ஒரு புரட்டு. தன்னைத் தானே ஏமாற்றுதல்... உணர்வாம்... உணர்வரித்து விட்டதாம்... உணர்வு உணர்வை வரித்துவிட்டது என்றால் என்ன... சொல்... அதன் மூலம் வாழ்க்கையில் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகுமா? உணர்வு உணர்வை வரித்துவிட்டதாம்... ஊம்...

(மல்லிகா ஒரு வினாடி வீட்டு மேல் முகட்டை நோக்குகிறாள்)

மல்லிகா : வாழ்க்கையில் அன்றாடத் தேவைகள் மட்டும் எல்லாம் ஆகாது... இவை தவிர மற்றும் பல உள்ளன.... அம்மா,,,,

அம்பிகா : (அரிசியைப் புடைத்துக் கொண்டே) இருக்கலாம். எனக்குத் தெரியாது.

மல்லிகா : நீயும் மற்ற கிராம மக்களைப் போன்று அவரை வெறுப்பும்... சந்தேகமும்... கலந்து பார்க்கிறாய். இதுதான் உண்மை.

அம்பிகா : அவனை நான் அறிந்த மாதிரி இந்தக் கிராமத்தில் யார் அவனை அறிவார்கள்?

(ஒரு வினாடி இருவரின் கண்களும் கலங்குகின்றன)

நான் அவனை வெறுக்கிறேன்.

(மல்லிகாவின் முகத்தில் வேதனை, ஆவேசம், இயலாமை ஆகியவற்றின் சாயல் காணப்படுகிறது)

மல்லிகா : அம்மா!

அம்பிகா : அவனால் மற்றவர்களுக்கு இலாபம் இருக்கிறதோ... லாபம்? ஆனால் எனக்கு உண்டு. "அவன் காரணமாகத்தான் என் வீடு வாசல் வீணாகிறது."

(வாசல் நிலைப்படியிலிருந்து காளிதாசனின் சொற்கள் கேட்கின்றன. அம்பிகாவின் கவலை அதிகமாகிறது. முறத்தை எடுத்து ஒரு வினாடி வாசல்படியைப் பார்த்துவிட்டு மறுபடியும் உள்ளே சென்று விடுகிறாள்)

மல்லிகா : அம்மா நில்! நீ ஏன் உள்ளே செல்ல விழைகிறாய்?

அம்பிகா : அம்மாவின் வாழ்க்கை உணர்வுகள் இல்லாத வாழ்க்கை. வெறும் செயல், நிறைந்த வாழ்க்கை அவளுக்கு வீட்டில் எவ்வளவோ செய்ய வேண்டும்.

(செல்லுதல், காளிதாஸ் இரத்தம் சொட்டும் ஒரு மறியை (மான் குட்டி) கைகளில் எடுத்து அணைத்துக் கொஞ்சிக் கொண்டே)

காளிதாஸ்: நாம் பிழைத்துவிடுவோம்... அப்படித்தானே! ஒரு அம்பினால் அடிபட்டு நாம் உயிர் துறக்க மாட்டோம். நாம் மென்மைதான். ஆனால் என்ன? நாம் வலியைப் பொறுத்துக் கொள்வோம்! "ஒரு அம்பு உயிரை எடுத்தால் ஒரு விரல் தடவி தடவி உயிர் கொடுக்கும்." நாம் புதிய வாழ்க்கையைத் தொடங்குவோம். நாம் மென்மையான ஆசனத்தில் ஓய்வு கொள்வோம். நம்முடைய காயப்பட்ட இடங்களில் நெய் தடவுவோம். நாளை மறுபடியும் காடுகளில் சுற்றுவோம். இனிமையான இளம் புற்களை உண்போம்... அப்படித்தானே?

(மல்லிகா தன்னைச் சமாளித்துக் கொண்டு வாசலை நோக்கிச் செல்லுகிறாள்)

மல்லிகா : காயப்பட்ட மான்குட்டியா? யார் அம்பு எய்திக் காயப் படுத்தினார்கள்? தெற்குப் பகுதிகளைப் போல் இங்கேயும்....?

காளிதாஸ் : இன்று கிராமத்தில் புதிய மனிதர்கள் காணப்படுகிறார்கள்.

(ஜன்னல் அருகில் சென்று ஆசனத்தில் அமர்ந்து)

இன்று சில அலுவலர்கள் வந்துள்ளார்கள்.

(மான் குட்டியை மார்போடு அணைத்து கையினால் மெதுவாகத் தட்டிக் கொடுத்து)

நாம் உறங்கலாமா? சிறிது நேரம் தூங்கினால் வலி பறந்து விடும். ஆனால் அதற்கு முன் சிறிது பால் அருந்தலாமா? மல்லிகா... பால் இருந்தால் கொஞ்சம் எடுத்துவா...

மல்லிகா : அம்மா பால் காய்ச்சி வைத்துள்ளாள். போய்... எடுத்து வருகிறேன்.

(அடுப்பின் அருகில் சென்று பாத்திரத்தைப் பார்க்கிறாள்)

சற்றுமுன்பு இரண்டு மூன்று அரசாங்கச் சிப்பந்திகளைக் குதிரைகளில் பார்த்தோம். இவர்கள் இங்கு எப்பொழுது வந்தாலும் ஏதாவது ஒரு தீங்கு வரும் என்று அம்மா கண்களைக் கசக்கிக் கொண்டு கூறியது... என் மனதை நெருடுகிறது. மழையின் மயிர்க் கூச்செறிதலுக்குப் பிறகு... இது எனக்கு விசித்திரமாக காணப்படுகிறது.

(பால் பாத்திரத்திலிருந்து பாலை வேறு ஒரு பாத்திரத்தில் மாற்றி)

அம்மா இன்று மிகவும் கோபமாக உள்ளார்கள்.

(காளிதாசன் மான் குட்டியைக் கைகளில் ஊஞ்சல் ஆட்டியபடியே...)

காளிதாஸ் : முன்னைக் காட்டிலும் இப்பொது பரவாயில்லை. நமது வலி மெதுவாகக் குறைகிறது. நாம் ஸ்வஸ்தமாக மாறிக்கொண்டு இருக்கிறோம். மென்மையான பஞ்சு போன்ற இந்த உடம்பில் எப்படி அவன் அம்பு எய்ய எண்ணினான்? இது ஒரே பாய்ச்சலாக என்னிடம் வந்துவிட்டது. எங்கு உனக்கு அம்மாவின் பரிவு... அம்மாவின் அரவணைப்பு அன்பு கிடைக்குமோ அங்கு உன்னை எடுத்துச் செல்கிறேன் என்று கூறி எடுத்து வந்துள்ளேன்.

(மல்லிகாவைப் பார்க்கிறான். மல்லிகா பால் எடுத்து அருகில் வருகிறாள்)

மல்லிகா : உண்மையிலேயே அம்மாவிற்குக் கோபம். மழையில் நான் உங்களுடன் இருந்தேன் என்று அம்மாவிற்குச் சந்தேகம். இல்லாவிட்டால் இப்படி நான் ஏன் மழையில் நனைவேன்? அம்மாவிற்கு உலகப் பழி பற்றிய கவலை...

காளிதாஸ் : மான்குட்டியைக் கையில் எடுத்துக் கொள்.

பால் பாத்திரத்தை என்னிடம் கொடு.

(பால் பாத்திரத்தைக் கையில் எடுத்து அதன் வாயைப் பால் அருகில் எடுத்து வைக்கிறாள். காளிதாஸ் பாத்திரத்தை மிக்க அருகில் வைக்கிறான்).

நாம் பால் அருந்த வேண்டாமா? அடம்பிடிக்க மாட்டோம். நாம் பால் கட்டாயம் அருந்துவோம். (அரசு அலுவலர் வந்து நின்று விடுகிறான். வினாடி நேரம் அவர்களைப் பார்க்கிறான். காளிதாசர் மானின் வாயைப் பாலோடு சேர்த்து...)

ஆம் இப்படி.... இப்படி....

(தந்துல் முன்னேறி அவர்கள் அருகில் வந்து)

தந்துல் : பாலூட்டி இதன் மாமிசத்தை இன்னும் ருசியாக மாற்றுகிறாயா?

(காளிதாசும் மல்லிகாவும் திடுக்கிட்டு அவனைப் பார்க்கிறார்கள். மல்லிகா மான்குட்டியோடு சற்றுப் பின்னால் செல்கிறாள். காளிதாசன் பால் பாத்திரத்தைக் கீழே வைக்கிறான்.

காளிதாஸ் : என்னுடைய அறிவின்படி நாம் பரிச்சயமானவர்கள் அல்ல. அறிமுகம் இல்லா வீட்டில் நுழைய உனக்குத் தைரியம் எப்படி வந்தது?

(தந்துல் முதலில் மல்லிகாவையும் பின் காளிதாஸரையும் பார்க்கிறான்)

தந்துல் : இதே கேள்வியை நான் உன்னிடம் கேட்க விரும்பினேன். நாம் அறிமுகமானவர்கள் அல்ல. ஆனாலும் நான் அம்பு எய்த மானை எடுத்து வர உனக்குத் தயக்கம் இல்லையா? இந்த வாசல் வரை இரத்தத் துளிகள். இல்லாவிட்டால் இந்த மழைக் காலத்தில் உன் பின்னால் நான் எப்படி வருவது?

காளிதாஸ் : நீ இந்தப் பகுதிக்குப் புதியவன் என்று நினைக்கிறேன்.

(தந்துல் கேலிச்சிரிப்பு சிரித்து)

தந்துல் : நான் உன் பார்வையைப் புகழத்தான் வேண்டும். என்னுடைய ஆடை அணிகலன் நான் இந்தப் பகுதிக்குப் புதியவன் என்று கூறுகிறது.

மல்லிகா : உன் ஆடைகளை யார் பார்த்தார்கள்?

தந்துல் : அப்படியானால் என் தலையெழுத்தைப் பார்த்தாயா? பார்த்தால்? திருட்டுத் தொழிலைத் தவிர சாமுத்திரிகா லக்ஷணமும் தெரியும் போலும்.

(மல்லிகா அடிப்பட்ட மானுடன் கொஞ்சம் முன்னேறி)

மல்லிகா : உனக்கு இப்படி பழி சுமத்த வெட்கமாக இல்லையா?

தந்துல் : தேவி! மன்னிக்க வேண்டுகிறேன். உங்கள் கைகளில் இருக்கும் இந்த மான்குட்டி நான் அம்பு எய்தது. ஆகவே இது என் உடைமை. ஆகவே என் உடைமையை எனக்குத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்.

காளிதாஸ் : அரசு அலுவலரே! இந்தப் பகுதிகளில் வேட்டையாடக் கூடாது. நீ புதியவன். ஆகவே நாங்கள் உன்னைக் குற்றவாளியாகக் கருதவில்லை. போதுமா!

தந்துல் : "அரசாங்க அலுவலரின் குற்றம் பற்றிக் கிராமத்தான் கூறுவதா?" கிராமத்து இளைஞரே! உமக்கு நியாயம். குற்றம் இவைகளின் பொருளாவது தெரியுமா?

காளிதாஸ் : சொல்லும், பொருளும் அரசாங்க அதிகாரிகள் சொத்தா? மிக்க ஆச்சரியமாக உள்ளது.

தந்துல் : நீ மிக்க சாமர்த்தியசாலியாக இருக்கிறாய். இருந்தாலும் அரசாங்க அலுவலர்கள் அதிகாரம் நீண்ட தூரம் வரை செல்லும் என்று உனக்குப் புரியவில்லையே? காலம் கடத்தாதே. இந்த மான்குட்டியை எனக்குக் கொடுத்துவிடு.

காளிதாஸ் : இந்த மான்குட்டி இந்த மலைப் பிராந்தியத்தின் சொத்து. நாங்களும் இந்த மலைப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே நாங்கள் ஒரே இனம். நாங்கள் இதை உன்னிடம் கொடுத்து விடுவோம் என்று கனவு காணாதே. மல்லிகா! இதை உள்ளே எடுத்துச் சென்று கட்டிலில் அல்லது வேறு ஏதாவது ஆசனத்தில்...

(அம்பிகா திடீரென்று உள்ளிருந்து வருகிறாள்)

அம்பிகா : இந்த வீட்டில் மான்குட்டிக்குக் கட்டிலோ அல்லது வேறு ஆசனமோ கிடையாது.

மல்லிகா : அம்மா நீ தான் நடப்பதையெல்லாம் பார்க்கிறாயே.....

அம்பிகா : அதுதான் பார்க்கிறேனே! ஆகையால்தான் சொல்லுகிறேன். கட்டிலும் ஆசனமும் மனிதன் உறங்குவதற்கு.... மிருகங்களுக்கு அல்ல....!

காளிதாஸ் : மல்லிகா! இதை என்னிடம் கொடு.

(பால் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு மான்குட்டியைத் தன் கைகளில் எடுத்துக் கொள்கிறான்).

இதற்கு என் கை ஆசனமே போதுமானது. இதனை என் வீட்டிற்கே எடுத்துச் செல்கிறேன்.

(வாசலை நோக்கிச் செல்கிறான்)

தந்துல் : இந்த அரசாங்க அதிகாரி.... தந்துல் நீ இதை எடுத்துச் சொல்வதைப் பார்த்துக் கொண்டு இருப்பான்... என்று நினைக்கிறாய்... போலும்?

காளிதாஸ் : அது.... அரசாங்க அதிகாரி.... தந்துல் விருப்பத்தைப் பொறுத்தது.

(அவனை ஏறெடுத்துப் பார்க்காமல் வாசல்படி நோக்கிச் சென்று விடுகிறான்)

தந்துல் : அரசாங்க அலுவலர்களின் விருப்பு வெறுப்பு என்ன என்பதை ஒரு முறை உனக்குப் புரிய வைக்க வேண்டும்.

(காளிதாஸ் வெளியே சென்று விடுகிறான். அவன் நடந்து செல்லும் ஒலி மாத்திரம் காதில் விழுகின்றது).

காளிதாஸ் : ஒரு வேளை.....

தந்துல் : ஒரு வேளை.... ம்.. நீ என்னிடமிருந்து தப்பித்துவிடலாம் என்று நினைக்காதே,

(கத்தியின் பிடியில் கைவைத்து அவன் பின்னால் செல்ல விழைகிறான். மல்லிகா வேகமாகச் சென்று வாயிலை அடைத்து நின்று விடுகிறாள்)

மல்லிகா : நில்லுங்கள். அரசாங்க அலுவலர் அவர்களே.... மான்குட்டிக்காக முரண்டு பிடிக்காதீர்கள். உமக்கு உரிமை

போராட்டம். அவருக்கு உணர்வின் போராட்டம். காளிதாஸ் நிராயுதபாணியாக இருந்தும் உன் ஆயுதம் பற்றிக் கவலை கொள்ளவில்லை.

தந்துல் : காளிதாஸ்.... நான் மான்குட்டிக்காகச் சண்டையிட்டது கவி காளிதாஸ் அவர்களிடமா?

மல்லிகா : ஆம்.... ஆம்... ஆனால் உமக்குக் காளிதாஸைப் பற்றி எவ்வாறு தெரியும்?

தந்துல் : எப்படி தெரியுமா? உஜ்ஜையினி அரசவையில் உள்ள ஒவ்வொரு வரும் 'ருது ஸம்ஹாரம்' எழுதிய கவி காளிதாஸை நன்கு அறிவர்.

மல்லிகா : உஜ்ஜையினி அரசவையில் ஒவ்வொருவரும் அவரை அறிவார்களா?

தந்துல் : பேரரசர் அவர்கள் 'ருதுவம்சம்' நூலைப் படித்து வெகுவாகப் புகழ்ந்தார்கள். ஆகவே அவர் 'ருதுவம்சம்' நூலை எழுதியவருக்கு மரியாதை செய்யவும் அவருக்கு 'அரசகவி' ஆசனமும் அளிக்க விரும்புகிறார்கள். ஆச்சார்யார் இந்த நோக்கோடு தான் இங்கு வந்துள்ளார்கள்.

(மல்லிகா இதைக் கேட்டு மலைத்ததுபோல் நின்று விடுகிறாள்)

மல்லிகா : உஜ்ஜையினி அரசு அவர்களுக்கு மரியாதை கொடுக்க விரும்புகிறதா? அரசகவி ஆசனமா...?

தந்துல் : நான் அவரிடம் மரியாதைக் குறைவாக நடந்துவிட்டேன். அவரிடம் சென்று மன்னிப்புக் கோர வேண்டும்.

(தந்துல் போய் விடுகிறான். மல்லிகா சில வினாடிகள் அதே மாதிரி நிற்கிறாள். திடீரென்று அவளுக்குத் தன் உணர்வு ஏற்படுகிறது. இதற்கு மத்தியில் அம்பிகா பால் பாத்திரத்தை எடுத்து ஒரு மூலையில் வைக்கிறாள். பழைய பாத்திரத்தில் இருந்த கொஞ்சம் பாலை வேறு ஒரு சின்ன பாத்திரத்தில் மாற்றிச் சர்க்கரை கலக்கிறாள். கைகளின் நடுக்கத்தினால் அவள் மனத்தில் உத்வேகம் தெளிவாகத் தெரிகிறது. மல்லிகா கீழ் உதட்டைப் பற்களால் கடித்தபடியே ஓடியவாறு அவள் அருகில் வருகிறாள்.

மல்லிகா : அம்மா.... கேட்டாயா? அரசாங்கம் அவருக்கு அரசகவி ஆசனம் அளிக்க விரும்புகிறது.

(அம்பிகா கையிலிருந்து தடுமாறு தடுமாறி விழும் பால் பாத்திரத்தை எப்படியோ கெட்டியாகப் பிடித்து)

அம்பிகா : ஈரத்துணிகளை உலர்த்திவிட்டேன். கொஞ்சம் பால் உள்ளது சர்க்கரையும் கலந்துவிட்டேன்.

மல்லிகா : அம்மா... அரசாங்க அலுவலர் சொன்னதைக் கேட்டாயா?

அம்பிகா : நீ பாலைக்குடி... இனிமேல் இங்கு யாரும் விருந்தாளி என... வரமாட்டார்கள்,

மல்லிகா : விருந்தாளி! ஆம்.... 'நான் இன்று உலகம் முழுவதற்கும் என் வீட்டில் விருந்து கொடுக்க விரும்புகிறேன்.'

அம்மா... உன்னை இந்தப் பாலால் அபிஷேகம் செய்யட்டுமா?

(பாத்திரத்தை அம்பிகா அவள் கைகளிலிருந்து எடுத்து வருகிறான்...)

(பால் பாத்திரத்தை மேலே எடுத்து)

அம்பிகா : நான் நன்றாகவே பாலில் குளித்து இருக்கிறேன்.

மல்லிகா : அம்மா... உனக்கு இரக்கமே இருக்காதா! .... அரசாங்கமே அவருக்கு மரியாதை செய்யும் பொழுது... நீ மட்டும்....

அம்பிகா : நீ முதலில் இந்தப் பாலைக்குடி. மறுபடியும் மறுபடியும் மழையில் நனைய வேண்டாம் இல்லையா? ... உனக்குப் படுக்கை விரிக்க வேண்டுமா? ...நான் இரக்கமற்றவள்தான்... இருந்துவிட்டுப் போகட்டுமே...!

(மல்லிகா அவள் கழுத்தைக் கட்டிக்கொள்கிறாள்)

மல்லிகா : இல்லை நீ இரக்கமற்றவள் இல்லை, நான் உன்னை இரக்கமற்றவள் என்று எப்பொழுது சொன்னேன்?

அம்பிகா : அம்மாடி.... நீ சொல்லவே இல்லை! நீ இந்தப் பாலைக் குடி.

(மல்லிகா பால் பாத்திரத்தை அவள் கையிலிருந்து எடுத்து ஒரு மிடர் (மடக்கு) குடிக்கிறாள். பாலைக் குடித்தபின் அம்பிகாவின் கைகளைப் பிடித்து அவளை அமர வைக்கிறாள். பின் தானே அவள் மடியில் படுத்துவிடுகிறாள்).

மல்லிகா : அம்மா! "இன்று நான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்று எண்ணிப் பார்த்தாயா?

அம்பிகா : எனக்கு யோசிக்கும் திறனே அற்றுவிட்டது. எனக்கு வேலை தலைக்கு மேல் இருக்கிறது. என்னை எழுந்துபோக விடு.

(எழ முயற்சிக்க மல்லிகா, அவளைத் தடுக்கிறாள்)

மல்லிகா : எழாதே. அப்படியே அமர்ந்தே இரு... அரசே அவருக்கு மரியாதை கொடுக்கப் போகிறது. அம்மா.... அவருக்கு அரசகவி பதவி கிடைக்கப் போகிறது.

(சட்டென்று அம்பிகாவின் மடியிலிருந்து எழுந்து அமர்கிறாள்)

அவரைப் பற்றி அவர் அருகாமையில் இருப்பவரே இன்று வரை புரிந்து கொள்ளவில்லை. அவருக்கு வீட்டிலும் வெளியிலும் ஏச்சும் பேச்சும் தான் கிடைத்தன.... நீ இப்பொழுதாவது நம்புவாயா.... என் உணர்வுகள் ஆதாரமற்றவையல்ல என்பதை....

அம்பிகா : நான் தான் சொல்லிவிட்டேனே! என்னுடைய யோசிக்கும் திறன் மரத்துவிட்டது என்று.

மல்லிகா : ஏன்! உனக்கு ஏன் இவ்வளவு பிடிவாதம்? நீ அவரைப் பற்றி இரக்கமுள்ள மனதோடு... சிந்திக்க மாட்டாயா?

அம்பிகா : யதார்த்தத்தை விட்டுவிலகி.... குருட்டுக் கண்களோடு வாழும் நிலையை நான் தாண்டிவிட்டேனடி!

(உள்ளே செல்கிறாள் மல்லிகா. எழுந்து நிற்கிறாள் அம்பிகா)

எங்குக் குறைபாடு உள்ளதோ அங்கு அம்பிகா கட்டாயம் குறை பாடுகளைப் பார்ப்பாள்.

மல்லிகா : அவரிடம் நீ என்ன குறைகண்டாய்?

அம்பிகா : அந்த மனிதன் தன்வயப்பட்டவன். உலகத்தில் அவனுக்குத் தன்னைத் தவிர யாரிடமும் பற்று கிடையாது.

மல்லிகா : ஆகையால் தான் என்னவோ.... அவர் மாதுலின் பசுக்களை மேய்க்காமல் மேகக் கூட்டங்களில் தன்னை இழந்துவிடுகிறார்).

அம்பிகா : நான் மாதுலைக் கண்டேனா.... அவன் பசுக்களைத்தான் கண்டேனா? நான் என் வீட்டைத்தான் பார்த்து வருகிறேன்.

மல்லிகா : அம்மா.... நீ உட்கார்.

(அம்பிகாவின் கைகளைப் பிடித்து ஜன்னல் அருகே அமர வைக்கிறாள்)

நீ சொல்வதை நான் புரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அம்பிகா : நீயும் புரிந்துகொள்... சொன்னாயே! உனக்கும் அவனுக்கும் உணர்வுமயமான தொடர்பு என்று... அந்த உணர்வுதான் என்ன?

மல்லிகா : அதற்கு மாற்றுப் பெயர் கொடுக்கவில்லை.

(அம்பிகாவின் காலடியில் அமர்ந்து)

அம்பிகா : ஆனால் மக்கள் அதற்கு நாமகரணம் செய்கிறார்களே?

உண்மையிலேயே உனக்கும் அவனுக்கும் உணர்வுமயமான தொடர்பு உள்ளது என்றால் ஏன் அவன் உன்னை மணம் செய்ய விரும்பவில்லை?

மல்லிகா : உனக்கு அவரிடம் எப்பொழுதுமே இரக்கம் இருந்ததில்லை... வாழ்க்கைச் சூழ்நிலையின் எந்த எந்தக் கொடுமைகளை அவர் சகித்தார் என்று உனக்குத் தெரியாதா? மாதுல் வீட்டில் அவர் நிலை என்ன? வசதியற்ற வறுமை நிறைந்த வாழ்க்கையில் அவர் திருமணம் பற்றி எப்படி கனவு காண முடியும்?

அம்பிகா : ஆனால் வசதியற்ற வறுமையற்ற நிலை இப்பொழுது இல்லாத பொழுது?

(மல்லிகா சில வினாடிகள் அமைதியாக இருந்தபடி தன் கால்களைப் பார்த்தபடியே)

எந்தத் தொடர்புகளிலிருந்து தப்ப வசதியற்ற நிலை எவ்வாறு காரணமாகிறதோ அதேபோல் வசதியான நிலையும் காரணமாகி விடுகிறது.

மல்லிகா : இது உன் கூற்று அல்ல. விலோமின் கூற்று.

அம்பிகா : நான் அப்படிப்பட்ட மனிதர்களை நன்றாகவே அறிவேன். உனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்புகளில் நீ ஒரு தலையணை மாதிரி. அதை வைத்து அவன் தன்னைத் தானே நேசிக்கிறான். தன்மேல் பெருமை கொள்ளுகிறான். நீ உயிருள்ளவன் தானே உன்னிடத்தில் உனக்கோ அல்லது அவனுக்கோ எந்தக் கடமையும் கிடையாதா? நாளை உன் அம்மா இருக்க மாட்டாள். வீட்டில் ஒரு வேளை சாப்பாட்டிற்கே தாளம் போட வேண்டியது இருக்கும். அப்பொழுது உன் நிலை என்ன? உன் உணர்வுகள் உன் கேள்விக்குப் பதில் கொடுக்குமா? அப்பொழுது சொல்.... இது விலோமின் கூற்று அல்ல. அம்மாவின் கூற்று என்று.

(மல்லிகா தலைகுனிந்து சில வினாடிகள் அமர்கிறாள். பின்பு அம்பிகாவை நோக்கி)

மல்லிகா : அம்மா.... இன்று வரை வாழ்க்கை எப்படியோ கழிந்துவிட்டது.... நாளையும் அவ்வாறே கழிந்துவிடும். இன்று அவர் வாழ்க்கை ஒரு புதிய இலக்கை நோக்கிச் செல்கிறது. நான் அவருக்கு முன்னால் என் சுயநலக் கூப்பாடுகளைப் பிதற்றுவது எனக்குப் பிடிக்கவில்லை.

(வெளியில் மாதுலின் சப்தம் கேட்கிறது.

மாதுல் : அம்பிகா.... அம்பிகா.... வீட்டில் யாரும் இல்லையா!

(அம்பிகாவும் மல்லிகாவும் வாசலை நோக்குகிறார்கள். மாதுல் களைத்து.... கலைந்து.. வருகிறான்)

ஆம்.... ஆம்.... வீட்டில் இருக்கிறாயா?

எனக்கும் காளிதாஸ் என்ற ஜீவனுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று இந்தக் கிராமம் முழுவதும் பறைச்சாற்றப் போகிறேன்.

மல்லிகா : ஆர்ய மாதுல்... என்ன ஆகிவிட்டது உங்களுக்கு?

மாதுல் : நான்தான் சிறுவயது முதல் அவனைத் தூக்கி எடுத்து வளர்த்தேன். ஆனால் இந்த நாளைப் பார்க்கவா? இந்த மாதிரியான குலதுரோகியைப் பார்க்கவா?

மல்லிகா : அரசு காளிதாஸுக்கு மரியாதை செய்கிறது என்று உங்களுக்குத் தெரியாதா? உஜ்ஜையினிலிருந்து யாரோ ஒரு ஆச்சாரியர் வந்துள்ளார்களாம்.

மாதுல் : நானும் இதைத்தான் சொல்கிறேன். உஜ்ஜையினியிலிருந்து யாரோ ஒரு ஆச்சாரியார் வந்துள்ளார்களாம்.

மல்லிகா : ஆனால் நீங்கள் வேறு... என்னவோ சொல்கிறீர்களே!

மாதுல் : நான் சரியாகத்தான் சொல்கிறேன். ஆச்சார்யார் அவர்கள் நாளையே இவனைத் தன்னோடு உஜ்ஜையினி அழைத்துச் செல்ல விரும்புகிறார்.

மல்லிகா : ஆனால்......

மாதுல் : இரு ரதங்கள், இரண்டு ரதசாரதிகள் மேலும் நான்கு குதிரை வீரர்கள் அவர்களோடு உள்ளனர். எங்களுடைய பாட்டனாகிய

பெண் வயிற்றுப் பேரன் ஒருவன் குப்த அரசுக்காக வீரர்களோடு போர் செய்தான் என்று அம்பிகா... உன்னிடம் சொன்னேன் இல்லையா?

அம்பிகா : நீ உன் மருமகனைப் பற்றித்தானே சொல்லுகிறாய்.

மாதுல் : அம்பிகா... அவனைப் பற்றித்தான் சொல்லுகிறேன். ஒரு விதத்தில் அரசு சார்பாக எங்கள் வம்சத்தை மரியாதை செய்கிறார்கள். ஆனால் இந்த வம்ச பரம்பரை எனக்கு இந்த மரியாதை, பெருமை வேண்டாம் என்று சொல்கிறது.

(மல்லிகா சட்டென்று எழுந்துவிடுகிறாள்)

"நான் அரசுக்காக விலை போகமாட்டேன் என்றும் சொல்கிறது"

(ஆவேசத்துடன் ஒரு மூலையிலிருந்து மற்ற மூலைக்கு நடக்க ஆரம்பிக்கிறான். மல்லிகா ஒரு வினாடி தன்னை மறந்த மாதிரி நின்று விடுகிறாள்)

மல்லிகா : அரசாங்க மரியாதையை அவர் ஏற்க விரும்பவில்லையா?

மாதுல் : இதில் என்ன விவகாரம் என்று எனக்குப் புரியவில்லை. மரியாதை கிடைக்கிறது. ஏற்றுக்கொண்டால்தானே இல்லாவிட்டால் இவன் கவிதைக்கு என்ன மதிப்பு?

மல்லிகா : ஆர்ய மாதுல்! இவர் கவிதைக்கு மதிப்பு இருப்பதால்தான் மரியாதை தேடி வருகிறது. ஆனால் இந்த மரியாதை அவர் நெஞ்சில் முள்ளாகக் குத்துகிறது என்று நான் நினைக்கிறேன்.

(அம்பிகா ஏதோ நினைத்துத் தன் மேலாடையைக் கை விரல்களில் கசக்கிக் கொள்கிறாள்)

அம்பிகா : அவன் கட்டாயம் உஜ்ஜையினி போவான் என்று நான் உனக்கு உறுதி கூறுகிறேன்.

(மாதுல் முன் மாதிரியே உலாவியபடி)

மாதுல் : கட்டாயம் போவான்! அவர்கள் இவனின் அடி வருடிகள். புகழ்ந்து தள்ளி இவனை அழைத்துச் செல்வார்கள்.

அம்பிகா : மரியாதை கிடைத்தால் அதை உதாசீனப்படுத்துவதன் மூலம் மனிதனுக்கு மதிப்பு மேலும் கூடிவிடுகிறது. உன் மருமகன் உலக நீதியில் தேறிவிட்டான் என்று நீ சந்தோஷப்படு.

(மாதுல் சட்டென்று நின்றுவிடுகிறான்)

மாதுல் : அதுதான் உலக நீதி என்றால் உலகநீதியும் முட்டாள் நீதியும் ஒன்றுதான்.

(மறுபடியும் உலாவியபடியே)

பணமோ அல்லது மரியாதையோ... கிடைத்தால் மனிதன் மனம் மாறலாம் அல்லவா? மனம் மாறிவிட்டால் மாறிவிட்டது தான். ஆனால்... என்னால்... அவன் மனதை மாற்ற இயலவில்லை.

(மறுபடியும் நின்றபடியே)

ஒரு சாதாரண கவி அரசமரியாதை ஏற்கவில்லை என்று தெரிந்தால் அரசல் கோபப்படலாம். நீயே யோசித்துப் பார்.

(வெளியிலிருந்து நிக்ஷேப் வருகிறான்)

நிக்ஷேப் : மாதுல் நீங்கள் இதுவரை இங்குதான் இருக்கிறீர்களா? அங்கு ஆச்சாரியார் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மாதுல் : நீ இங்கு என்ன செய்கிறாய்? நான் வரும்வரை அங்கு ஆச்சாரியார் வீட்டில் தங்கும்படி சொன்னேனே?

நிக்ஷேப் : ஆச்சாரியார் தூங்கிவிட்டால் எனக்குத் தெரிவி என்று நீங்கள் தானே சொன்னீர்கள்.

மாதுல் : இதுவும் சொன்னேன். அதுவும் சொன்னேன். அது சரி. அவன் வரவில்லையா?

நிக்ஷேப் : ஆனால் மாதுல்....

மாதுல் : ஆனால் என்ன? மாதுல் முட்டாளா? நீ என்னை முட்டாள் என்று நினைக்கிறாயா?

நிக்ஷேப் : இல்லை மாதுல்...

மாதுல் : நான் முட்டாள் இல்லை. அப்படியானால் நிச்சயம் நீ தான் முட்டாள்... ஆச்சாரியார் என்ன சொன்னார்.

நிக்ஷேப் : அவர் தங்களோடு இந்தக் கிராமப்பகுதியில் சுற்றி வர விரும்புகிறார்.

(மாதுல் முகத்தில் கர்வத்தின் உணர்வு தெரிகிறது)

எந்த பிராந்தியத்தில் காளிதாஸனின் கவிதை பிறந்ததோ அங்கு...

(மாதுலின் கர்வத்தின் உணர்வு வெறுப்பாக மாறி விடுகிறது).

மாதுல் : காளிதாஸன் கவிதை! (உலாவிக் கொண்டே) இவன் கவிதை மீது ஆச்சாரியர்க்கு ஏனோ இவ்வளவு மோகம்... தெரியவில்லை.

(அம்பிகாவைப் பார்த்தபடி)

இவனுக்குச் சாதாரண நடைமுறையே தெரியவில்லை... நீயோ இவன் உலக அறிவைப் பற்றிப் பேசுகிறாய்... மான் குட்டியை அணைத்தபடியே வீட்டுக்கு வந்துகொண்டு இருந்தான். யார் செய்த புண்ணியமோ... தெரியவில்லை... நான் வழியில் பார்த்துவிட்டேன். மேன்மை தாங்கிய கவிகுல திலகமே! இத்தருணம் தன் வேசத்தை விட்டுவிலகிச் செல்லக்கூடாது...? தங்களை தரிசிக்க உஜ்ஜையினிலிருந்து ஏக பெரிய ஆச்சாரியார்கள் வந்துள்ளார்கள் என்று அவனிடம் வேண்டினேன். அப்பொழுது பாதையில் பாம்பைக் கண்ட மாதிரி உடனேயே திரும்பிவிட்டான்.

(மல்லிகா அம்பிகா பக்கத்தில் உள்ள ஆசனத்தில் அமர்கிறாள். மாதுல் உலாவிக் கொண்டே).

அம்பிகா : மல்லிகா, மாதுலுக்கு அமர ஒரு ஆசனம் எடுத்துவா.

(மல்லிகா எழ மாதுல் அவளைத் தடுத்து)

மாதுல் : எனக்கு எந்த ஆசனமும் வேண்டாம். ஆச்சாரியார் என்னை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்.

(நிசேஷப் அம்பிகாவைப் பார்த்துப் புன்முறுவல் செய்கிறான். மாதுல் மூலை வரை சென்று திரும்பி வந்து)

மஹா கவிஞரே! ஆச்சாரியார் உங்களை அழைத்துப் போக வந்துள்ளார்கள். உங்களுக்கு அரசாங்க மரியாதை கிடைக்கும் என்று சொன்னேன். இதைக் கேட்டு அவன் கண்களில் நெருப்புப் பொறி பறக்க ஒரு பார்வை பார்த்து... "நான் அரசாங்கக் காசுக்கு விலை போகமாட்டேன்" என்று கூறிச் சென்றுவிட்டான். அவன் கூற்று, அரசங்கப் பொற்காசுகள் இவருக்காக உருகுவது போல இருந்தது. எனக்கு ஒரே தர்மசங்கடம். அவன் பின் ஓடி அவனைச் சமாதானப்படுத்துவதா அல்லது வந்தவர்களைப் பார்ப்பதா? இந்த நிசேஷப்பை ஆச்சார்யார் அருகில் அமர்த்திவிட்டு வந்தேன். ஆனால் அவனோ அச்சு கழன்ற சக்கரம் மாதிரி என் பின்னால் ஓடி வருகிறான்.

நிக்ஷேப் : ஆனால் மாதுல்.... நான் உங்களுக்குச் செய்தி தெரிவிக்கவே வந்தேன்...

மாதுல் : நீ செய்தி சொன்னதற்கு அனேக கோடி நன்றிகள். மிக நல்லது செய்தாய் விருந்தாளிகள் அங்கு இருக்க இவர் இங்கு செய்தி தெரிவிக்க ஓடிவந்தாராம். இப்பொழுது உங்களிடம் ஒரு வேண்டுகோள். நமது கவிகுல திலகம் எங்கு உள்ளார் என்று தேடிக் கண்டுபிடித்து வாருங்கள்.

(வெளியே சென்று)

எப்பாடுபட்டாவது அவனை ஆச்சாரியார் முன்னால் கொண்டு வந்து நிறுத்திவிடவேண்டும். இது என் கடமை. (ஆனால் மனத்தில், அவனைப் பார்த்தால் அவன் குடுமியைப் பிடித்துத் தரதர என இழுத்து...)

(மாதுல் சென்று விடுகிறான்)

நிக்ஷேப் : மாதுலின் மூன்றாவது கண் எப்பொழுதும் திறந்தே இருக்கும்.

மல்லிகா : தற்சமயம் காளிதாஸ் எங்கே?

நிக்ஷேப் : காளிதாஸ் அம்பாள் கோவிலில் உள்ளார்.

மல்லிகா : நீங்கள் அவரைப் பார்த்தீர்களா?

நிக்ஷேப் : ஆம்... பார்த்தேன்.

மல்லிகா : ஆனால் மாதுல் வசம் ஏன் சொல்லவில்லை.

நிக்ஷேப் : மாதுல் அங்கு இச்சமயம் செல்வது எனக்குப் பிடிக்கவில்லை.

மல்லிகா : ஏன்? நீங்களும் காளிதாஸ் போவதை விரும்பவில்லையா?

நிக்ஷேப் : காளிதாஸ் உஜ்ஜையினிக்குக் கட்டாயம் போக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆகையால்தான் மாதுல் அவரிடம்... போவதை விரும்பவில்லை. மாதுலுக்குத் தன்னைப் பற்றி பேசுவதிலேயே அலாதி இன்பம். நிலைமையைப் புரிந்து கொள்ளும் சக்தி இல்லை. உஜ்ஜையினியிலிருந்து வந்த விருந்தினர்கள் திரும்பாதவரை வீட்டுக்குச் செல்லமாட்டேன். அம்பாள் கோவிலில்தான் இருப்பேன் என்று காளிதாஸ் பிடிவாதம் பிடிக்கிறார்.

அம்பிகா : அற்புதமான குருட்டுத்தனம்!

நிக்ஷேப் : குருட்டுத்தனமா?

அம்பிகா : ஆம்... குருட்டுத்தனம்தான்.

நிக்ஷேப் : இதில் என்ன குருட்டுத்தனம் உள்ளது?

(அம்பிகா அவனை முறைத்துப் பார்க்கிறாள்)

அம்பிகா : அரசு, கவிக்கு மரியாதைச் செய்ய விரும்புகிறது. ஆனால் கவியோ கண்களை மூடிக்கொண்டு அம்மான் கோவிலில் தியானத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறார். அரசப் பிரதிநிதிகள் கோவிலுக்கு வந்து கவியிடம் வேண்டுகிறார்கள். கவியும் மெதுவாக... கண்களைத் திறக்கின்றார்... இவ்வளவு பெரிய நாடகம் குருட்டுத்தனம் இல்லையா?

நிக்ஷேப் : காளிதாஸ் நாடகம் ஆடவில்லை. அவருக்கு அரசாங்க மரியாதையில் மோகம் இல்லை. அவர் உண்மையிலேயே இந்த மலைப் பிரதேசத்தை விட்டுப் போக விருபவில்லை.

(அம்பிகா எழுந்து பாத்திரங்கள் உள்ள இடத்திற்குச் செல்லுகிறாள்)

அம்பிகா : விரும்பிவில்லையா? ஊஹூம்.

(ஒரு தாம்பாளம் எடுத்து வந்து குதிரிலிருந்து அரிசி எடுத்து)

நிக்ஷேப் : மாதுவோ மாதுவோ அல்லது வேறு யார் சொன்னாலும் அவர் தன் கொள்கையை விடமாட்டார்.

(மல்லிகாவைப் பொருள் பொதிந்த பார்வையில் பார்க்கிறான். மல்லிகாவின் கண்கள் தானாகத் தாழ்ந்து விடுகின்றன).

"எனக்குத் தெரிந்தவரை ஒரே ஒருவர் வேண்டுகோள் விடுத்தால்தான் அவர் தன் பிடிவாதத்தை விடக்கூடும்"

அம்பிகா : அவன் தன் பிடிவாதத்தை விட்டாலும் விடாவிட்டாலும் இங்கு யாருக்கும் எந்த இலாபமும் இல்லை.

(தாம்பாளத்தை அடுப்பு அருகில் எடுத்து வந்து அவர்களுக்குத் தன் முதுகுப்புறத்தைக் காட்டியபடியே மும்முரமாக இருப்பது போலக் காட்டுகிறாள்)

நிக்ஷேப் : காளிதாஸ் தன் உணர்வுகளின் வேகத்தால் வரும் சீதேவியைக் காலால் உதைத்து மிகப் பெரிய தவறு செய்கிறார். திறமை மனிதனைக் கால்பாகம்தான் உருவாக்குகிறது. ஆனால் அவன் கௌரவம்தான் அவனை முழு மனிதனாக மாற்றுகிறது. காளிதாஸ் கட்டாயம் தலைநகருக்குப் போக வேண்டும்.

(அம்பிகா மும்முரமாக இருப்பதாகக் காட்டிக்கொண்டாலும் மும்முரமாக இருக்க முடியவில்லை).

அம்பிகா : அவனுக்கு என்ன கஷ்டம்?

நிக்ஷேப் : அவன் பிடிவாதத்திற்குப் பின்னால் ஏதோ கசப்பான அடிமன ஆழத்தில் வலி இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது.

அம்பிகா : அந்தக் கசப்பான அடி எங்கே என்று எனக்குத் தெரியும். சில காலத்திற்கு முன்னால் ஒரு அரசாங்க அதிகாரி அவருக்கு மரியாதை செய்துவிட்டார்.

நிக்ஷேப் : மல்லிகா! நீ மட்டும்தான் அந்தக் கசப்பான அடியின் வலியைப் போக்க முடியும். "காலம் யாருக்காகவும்... காத்து இருப்பதில்லை." காளிதாஸ் அங்குச் செல்லாவிட்டால் அரசுக்கு எந்த விதமான நஷ்டமும் இருக்காது. அரசகவி பதவி காலியாக இருக்காது. ஆனால் இன்று இருக்கும் காளிதாஸ் அங்கு வாழ்க்கை முழுவதும் அரசு கவியாக இருப்பார். இன்று யார் "ருதுஸம்ஹாரம்" படைத்த கவியைப் புகழ்கிறார்களோ அவர்களே சில தினங்களுக்குப் பிறகு அவனை மறந்துவிடுவார்கள்.

(மல்லிகா தன்னை மறந்த நிலையில் எழுகிறாள்)

மல்லிகா : முடியாது. அவர் இந்த மரியாதையை வெறுக்கக் கூடாது. இந்த மரியாதை அவர் திறமைக்காக. அவர் திறமை.. தன் உரிமையை விடக்கூடாது. கிளம்புங்கள். நான் உங்களோடு அம்மன் கோவிலுக்கு வருகிறேன்.

(அம்பிகா சட்டென்று எழுந்து)

அம்பிகா : மல்லிகா!

(மல்லிகா வெறுத்து அம்பிகாவைப் பார்க்கிறாள்)

மல்லிகா : அம்மா!

அம்பிகா : நான் இந்தச் சமயம் உன்னை அங்கு அனுப்ப முடியாது என்று மூன்றாவது மனிதர் முன் சொல்ல வேண்டி இருக்கிறது.

நிக்ஷேப் : இந்த நிக்ஷேப் மூன்றாவது மனிதன் அல்ல அம்பிகா?

மல்லிகா : இது ஒரு முக்கியமான தருணம்... நான் இச்சமயம் கட்டாயம் அங்குச் செல்ல வேண்டும். வாருங்கள் ஆர்ய நிக்ஷேப்! நாம் போகலாம்.

(அம்பிகாவைப் பார்க்காமலேயே வெளியே செல்லுகிறாள். அம்பிகாவின் கோபம் தோல்வியாக மாறுகிறது. நிக்ஷேப்பும் அம்பிகாவின் உணர்வை மதித்து ஒரு வினாடி தாமதிக்கிறான்).

நிக்ஷேப் : அம்பிகா! என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

(மல்லிகாவின் பின்னால் செல்லுகிறான். ஒரு வினாடி அம்பிகா கண்களை மூடியபடியே நிற்கிறாள். பின் வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருளைப் பார்த்துக் கொண்டே உடைந்த இருக்கையின் மேல் அமர்ந்து தாம்பாளத்தில் உள்ள அரிசியை உருட்ட ஆரம்பிக்கிறாள். கண்களின் முட்டும் கண்ணீரை முந்தானையால் துடைக்கிறாள். ஒளிமங்குகிறது அம்பிகாவின் குரலும் உடைந்து வெளிப்படுகிறது)

அம்பிகா : உணர்வுகளாம்! ஊஹூம்.

(முந்தானையில் முகத்தை மறைக்கிறாள். ஒளி மேலும் மங்குகிறது. அப்பொழுது வாயிலில் நெருப்புத் தண்டின் ஒளி பிரகாசிக்கிறது. விலோம் நெருப்புத் தண்டினைக் கையில் எடுத்து வெளியிலிருந்து வருகிறான். அம்பிகா உட்கார்ந்து இருப்பதைப் பார்த்து அவன் அருகில் வருகிறான்.

விலோம் : சூழும் கருமேகங்கள் காரணமாக இன்று முன்பாகவே இருட்டி விட்டது. அம்பிகா! உனக்கு நேரமே தெரியவில்லை.. போலும்...

(அம்பிகா முந்தானையிலிருந்து தன் முகத்தை வெளியே எடுக்கிறாள். நெருப்புத் தண்டின் ஒளியினால் அவளின் முகக் கோடுகள் மேலும் இருக்கமுற்றும் கண்கள் உள்ளே ஆழ்ந்தும் காணப்படுகின்றன).

ஆமாம்! நீ விளக்கு ஏற்றவில்லையா?

அம்பிகா : விலோம்..... நீ இங்கு ஏன் வந்தாய்?

(விலோம் இடப்புறம் உள்ள விளக்கருகில் சென்று)

விலோம் : விளக்கு ஏற்றட்டுமா? (நெருப்புத் தண்டினால் விளக்கை ஏற்றுகிறான்)

விலோமின் வருகை அப்படி என்ன வியக்கத்தக்க விஷயமா?

(எழுந்து எதிரில் உள்ள தீபத்தை ஏற்றுகிறான். அம்பிகா எழுந்து நிற்கிறாள்)

அம்பிகா : விலோம்... நீ போய் விடு. உனக்குத்தான் தெரியுமே.... நீ இங்கு வருவது....

விலோம் : மல்லிகா பொறுக்க மாட்டாள். அவளுக்குப் பிடிக்காது... சரிதானே!

(தீபத்தை ஏற்றி அம்பிகாவைப் பார்க்கிறான்)

எனக்குத் தெரியும்... அம்பிகா. மல்லிகா பெருவெள்ளந்தி. உலகத்தைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் அவளுக்கு ஒன்றும் தெரியாது.

(சுவரில் பதிந்து இருக்கும் பிடிப்பில் நெருப்புத் தண்டைச் சாய்வாகப் பொருத்துகிறான்)

காளிதாஸுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது. ஆகையால் நான் இந்த வீட்டிற்கு வருவதை மல்லிகா விரும்புவதில்லை.

(திரும்பி அம்பிகா அருகில் சென்று)

காளிதாஸ் ஏன் விரும்பவில்லை... தெரியுமா... ஏன் என்றால் என் கண்களில் அவன் மனத்தின் சத்தியம் எட்டிப் பார்க்கிறது. அவனுக்கு ஒரே சிக்கல்... உனக்கு என்னைப் பற்றித்தான் தெரியுமே... நான் பிறர் உணர்வதை அப்படியே சொல்லிவிடுவேன். இதுதான் என்னுடைய ஒரே குற்றம்.

அம்பிகா : நான் இச்சமயம் உன் குற்றம் குறைகளை அலச விரும்பவில்லை.

விலோம் : நீ இந்தச் சமயம் மிகவும் வருத்தமாக இருக்கிறாய். அம்பிகா... நீ எப்பொழுதுதான் வருத்தமாக இல்லை... உன்னுடைய வாழ்க்கையே வருத்தத்தின் வரலாறுத்தான். நீ முன்னைவிட மிகவும் இளைத்துவிட்டு இருக்கிறாய்... காளிதாஸ் உஜ்ஜையினி போகிறான்... தெரியுமா?

அம்பிகா : எனக்குத் தெரியாது.

(விலோம் அவள் சொல்லுவதைக் கேட்காமலேயே தாழ்வாரத்தின் அருகில் செல்லுகிறான்).

விலோம் : அரசு அவனுக்கு மரியாதை செய்கிறது. காளிதாஸ் அரச கவியாக உஜ்ஜையினியில் இருப்பான். அவன் போவதற்கு முன்னால் அவனுக்கும் மல்லிகாவிற்கும் திருமணம் நடத்தப்பட வேண்டும். இதைப்பற்றி நீ யோசித்தாய் அல்லவா?

அம்பிகா : நான் இச்சமயம் ஒன்றும் யோசிக்க விரும்பவில்லை.

விலோம் : நீ... மல்லிகாவின் அம்மா! இதைப் பற்றி யோசிக்க விருப்பமில்லை என்கிறாயே? ஆச்சரியம் தான்.

அம்பிகா : விலோம்.... நான் தான் சொன்னேன்... நீ இங்கிருந்து போய்விடு.

விலோம் : காளிதாஸ் உஜ்ஜையினி போய் விடுவான். ஆனால் மல்லிகா... எவன் காரணமாக இந்தக் கிராமம் முழுவதும் மல்லிகாவின் மீது வீண் பழி ஏற்பட்டுள்ளதோ... அந்த மல்லிகா இங்கே வீழ்ந்து கிடப்பாளா? அம்பிகா! நீயே சொல்... பழி ஒரு இடம்... பாவம் ஒரு இடமா?

(அம்பிகா பதில் அளிக்காமல் ஆசனத்தில் அமர்ந்துவிடுகிறாள். விலோம் திரும்பி அவள் முன்னால் வருகிறான்)

ஏன்? இத்தனை வருடம் வரை இந்த நாளைப் பார்க்கவா எல்லா வேதனையையும் தாங்கிக் கொண்டிருந்தாய். இத்தனை வருடங்கள் வரை உனக்கு என்ன... என்ன... ஏற்பட்டது என்று தொலைவிலிருந்து பார்த்தாலே பார்த்தவனுக்குப் புரிந்துவிடும். காலம் உன் மனது. உடம்பு ஆத்மாவின் தொடர்புகளைத் துண்டாடிவிட்டது. மல்லிகாவிற்கு எந்தக் குறைபாடும் இருக்கக் கூடாது என்று தன்னைத்தானே நீ அணுஅணுவாகக் கரைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் இன்று அவள் வாழ்க்கையில் ஒரு பெரிய குறைபாடு ஏற்படும்பொழுது நீ ஏன் யோசிக்க விரும்பவில்லை?

அம்பிகா : விலோம்! இவற்றைச் சொல்லி நீ ஏன் கவலையைக் குறைக்கவில்லை. உன்னைக் கை எடுத்துக் கும்பிடுகிறேன்... என்னை இச்சமயம் தனியாக இருக்கவிடு.

விலோம் : அம்பிகா! இச்சமயம் உன் அருகில் நான் அவசியம் இருக்க வேண்டும். நான் இந்த விஷயங்களை உன்னிடம் அல்ல. அவனிடம் சொல்ல வந்தேன். மல்லிகாவுடன் அவன் கட்டாயம் இங்கு வருவான். அம்மன் கோவில் பக்கமாக மல்லிகா செல்வதைப் பார்த்தேன். நான் அவளுக்காகக் காத்திருக்கிறேன்.

(வாசலில் காளிதாஸும் அவன் பின்னால் மல்லிகாவும் வருகிறாள்)

காளிதாஸ் : விலோம்! நான் உன்னை அதிக நேரம் காக்க வைக்க விரும்பவில்லை.

(விலோமைப் பார்த்தவுடன் மல்லிகாவிற்குக் கோபமும், வெறுப்பும் பொங்குகின்றன. அவள் ஜன்னல் அருகில் செல்கிறாள். காளிதாஸ் விலோம் அருகில் சென்று)

நீ ஏன்... எங்கு... எந்த இடத்தில்... என்னைப் பார்க்க ஆவலாக உள்ளாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும். சொல்.. நீ எந்தப் புதிய தாளத்திற்கு அடிபோடுகிறாய்.

விலோம் : தாளத்திற்கு அடிபோடுவது என் தொழில், அல்ல.

காளிதாஸ் : ஆமாம். ஆமாம். உன் தொழில் வேறு என்று எனக்கு நன்றாகவே தெரியும்.

(சில வினாடிகள் அவனை உற்றுப் பார்த்துவிட்டு)

அத்தொழில் புதிய தாளத்திற்கு அடிப்போடுவதை ஒருவேளை விட்டுவிட்டது போலும்.

விலோம் : இன்று உண்மையிலேயே நீ உன் கவிதைத் தொழிலைப் பெருமை கொள்ளலாம்.

(நெருப்புத் தண்டின் அருகில் சென்று சுடரைத் தட்டி விடுகிறான். ஒளி அவன் முகத்தில் விழுகிறது)

தலைநகரிலிருந்து அழைப்பு வந்துள்ளதாமே?

காளிதாஸ் : நானும்தான் கேட்டேன். உனக்கு என்ன வருத்தமா!

விலோம் : வருத்தம்! ஆம்.... ஆம்.... மிக்க வருத்தம். ஒரு உண்மையான நண்பனைப் பிரிவதால் வருத்தம் ஏற்படாதா?

...நாளை விடியற்காலையிலேயே போகப் போகிறாயா?

(மல்லிகாவைப் பார்த்துவிட்டு, காளிதாஸை நோக்கிப் பார்த்து) அங்குச் சென்றால் மனிதன் வேலையில் மூழ்கிவிடுவானாம். நாடகக் கொட்டகை, மதுபானம் மற்றும் வாழ்க்கையை மயக்கக்கூடிய பல இடங்களும் உள்ளனவாம்)

(மல்லிகாவின் உணர்வுகளில் கடுமை ஏற்பட்டுவிடுகிறது).

மல்லிகா : ஆர்ய விலோம்! இந்த இடமும், இந்தக் காலமும் இப்படிப்பட்ட விஷயங்கள் பேசுவதற்கு ஏற்றதல்ல. நான் இந்தச் சமயத்தில் இங்கே தங்களைப் பார்ப்பேன் என்று எண்ணவே இல்லை.

விலோம் : நீ என்னை இந்த இடத்தில் பார்த்து மகிழ்ச்சி அடைய மாட்டாய் என்று எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால்

அம்பிகாவைப் பார்த்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. ஆகவே அம்பிகாவைப் பார்க்க வந்தேன். இரு ஒரு சாதாரண விஷயந்தானே...!

காளிதாஸ் : விலோம் அமைதியாகச் சும்மா இருப்பதுதான் எதிர்பாராதது. ஆனாலும் அவனது செயல்கள் எதிர்பாராதது அல்ல.

விலோம் : காளிதாஸ்! நாம் ஒருவரை ஒருவர் நன்றாகவே அறிந்திருக்கிறோம். இது உண்மையிலேயே மகிழ்ச்சியான விஷயந்தான். என் குணத்தில் உண்மையிலேயேய நீ அறியாதது ஒன்றும் இல்லை.

(ஒரு வினாடி வரை காளிதாஸின் கண்களை நோக்குகிறான்) விலோம் யார்? தோல்வியைத் தழுவிய காளிதாஸை வெற்றி கொண்டவன் இந்த விலோம்... நான்... ஒரு வெற்றி அடைந்த விலோம். ஆகவே நாம் மிக்க அருகாதையிலேயே இருக்கிறோம்.

(நெருப்புத்தண்டிலிருந்து விலகி காளிதாஸின் அருகில் செல்கிறான்)

காளிதாஸ் : உண்மை.... உண்மை....

எல்லா எதிர்மறைகளும் ஒன்றுக்கொன்று மிக்க அருகாமையிலேயே இருக்கின்றன.

விலோம் : நீ இந்த உண்மையை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. அந்த அருகாமையின் உரிமையினால் உன்னிடம் ஒரு கேள்வி. ஒரு வேளை இதற்குப் பிறகு உன்னுடன் பேசச் சந்தர்ப்பங்கள் கிடைக்காமலேயே போகலாம். ஒரு நாள் காலதாமதம் உன்னை என்னிடம் இருந்து நீண்டதூரம் எடுத்துச் சென்று விடும்.

காளிதாஸ் : வருடக்கணக்கான இடைவெளிக்குப் பிறகும்... எதிர் மறைகளை எதிர்மறைகளிலிருந்து விளக்க முடியாது.... நான் உன்னுடைய கேள்வியைக் கேட்க மிக்க ஆவலாக உள்ளேன்.

(விலோம் காளிதாஸுக்கு மிக்க அருகில் வந்து அவன் தோள்களில் தன் கைகளைப் பதிக்கிறாள்)

விலோம் : நீ இப்பொழுது பழைய காளிதாஸ்தான். நீ மாறவேயில்லை. நான் நன்றாக அறிவேன்.

(பொருள் பொதிந்த பார்வையோடு அம்பிகாவைப் பார்க்கிறான்)

காளிதாஸ் : என்னால்... உன்னுடைய கருத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

(விலோமின் கைகளைத் தன் தோள்களிலிருந்து விலக்கி விடுகிறான்).

விலோம் : நீ இன்றுவரை நேற்று இருந்த அதே மனிதன்தானே? மாறவில்லையே?

(மல்லிகா ஜன்னல் அருகில் இருந்து விலோமிற்கு அருகில் வருகிறாள்)

மல்லிகா : ஆர்ய விலோம்! நான் இந்த விதமான உளறல்களை மன்னிக்க முடியாது.

விலோம் : என்ன! உளறல்களா!

(அம்பிகாவிற்கு அருகில் வருகிறான். காளிதாஸ் இரண்டு மூன்று அடிகள் எடுத்து மறுபக்கம் சென்றுவிடுகிறான்)

இது என்ன உளறல்கள். நான் பொருள் புதைந்த கேள்விதான் கேட்கிறேன். காளிதாஸ்! அப்படித்தானே? அம்பிகா! நீயும் அப்படித் தானே நினைக்கிறாய்.

(அம்பிகா தடுமாறும் உணர்வுடன் எழுகிறாள்)

அம்பிகா : இதில் எனக்கு ஒன்றும் தெரியாது. மேலும் நான் ஒன்றும் தெரிந்துகொள்ள விரும்பவில்லை.

(உள்ளே செல்கிறாள்)

விலோம் : நில் அம்பிகா.. நில்.

(அம்பிகா நின்று அவனைப் பார்க்கிறாள்)

அம்பிகா : என்னிடம் பேச என்ன இருக்கிறது...?

விலோம் : இன்று வரை இந்தக் கிராமப் பகுதியில் காளிதாஸையும், மல்லிகாவையும் இணைத்து ஏதேதோ பேசப்பட்டன.

(மல்லிகா ஒரு அடி முன்னே வருகிறாள்)

மல்லிகா : ஆர்ய விலோம், நீங்களுமா...

விலோம் : ஆகையால் இதை மனதில் வைத்துக்கொண்டு காளிதாஸ் விவரமாகக் கூற வேண்டும்... அவன் உஜ்ஜையினி தனியாகப் போகிறானா அல்லது...

மல்லிகா : காளிதாஸ் தங்களுடைய எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர் தங்களுக்கு கட்டுப்பட்டவர் அல்ல.

விலோம் : அவன் கட்டுப்பட்டவன் என்று எப்பொழுது நான் சொன்னேன். ஆனால் ஒரு வேளை அவன் மனசாட்சி அவனைப் பதில் கூற முடியாமல் கட்டுப்படுத்தலாம்.

அப்படித் தானே காளிதாஸ்?

(காளிதாஸ் திரும்புகிறான் இருவரும் எதிர் எதிராக வந்து விடுகிறார்கள்)

காளிதாஸ் : நான் உன்னைக் கண்டிப்பாக புகழத்தான் வேண்டும். நீ மற்றவர்கள் வீட்டில் மட்டும் அல்ல, மற்றவர்கள் வாழ்க்கையிலும் உரிமையின்றித் தலையை நீட்டுகிறாய்.

விலோம் : உரிமையில்லாமல் நுழைகிறேனா...? ஏன் அம்பிகா! காளிதாஸனின் இந்த வார்த்தை உனக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறதா. நீயே சொல். இந்த விலோம் உரிமையில்லாமல் மற்றவர் வாழ்க்கையில் தலையை நீட்டுகிறேனா?

அம்பிகா : நான் இது சம்பந்தமாக ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

(உள்ளே சென்று விடுகிறாள்).

விலோம் : ஆமாம்... போய்விட்டாள். காளிதாஸ் நீயே சொல். உன்னுடைய இந்த விஷயம் எதுவரை பொருத்தமாகத் தோன்றுகிறது. நான் யாருடைய வாழ்க்கையில் உரிமையில்லாமல் நுழைந்து இருக்கிறேன். நீயாவது சொல்.

இந்தக் கிராமப் பிரதேசத்தில் யாரிடமாவது கேட்கலாம். (சுட்டெரிக்கும் பார்வையினால் காளிதாஸைப் பார்த்துவிட்டு நெருப்புத் தண்டினை அதன் பிடிப்பில் இருந்து கையில் எடுத்துக் கொள்கிறான்)

அப்படியானால் உன் மனச்சாட்சிப்படி என் கேள்விக்குப் பதில் அளிக்க நீ கட்டுப்பட்டவன் அல்ல. ஏனென்றால் என் கேள்வியே அப்படி...

காளிதாஸ் : நீ எப்படி வேண்டுமானாலும் யூகித்துக் கொள்ளலாம். ஆனால் எனக்கு இந்தக் கிராமப் பிரதேசத்தை விட்டு உஜ்ஜயினி செல்லுவதில் சிறிதுகூட ஆசை இல்லை.

(விலோம் நெருப்புத் தண்டினைக் காளிதாஸின் முகமருகில் எடுத்து வருகிறான்)

விலோம் : உனக்கு அந்த ஆசை ஏன் ஏற்படும்? அந்த ஆசை சாதாரணமான மனிதனுக்கு ஏற்படும். உனக்கு ஏற்படுமா? ஆனால் ஒரு பேச்சுக்கு வைத்துக்கொள்.... நீ அங்குச் செல்வதற்குத் தயாராகி விட்டாய்... அந்த நேரத்தில் இது சரியல்ல...

(மல்லிகா, விலோம், காளிதாசன் நடுவில் வந்துவிடுகிறாள். அவள் முகத்தில் நெருப்புத் தண்டின் ஒளி படர்கிறது)

மல்லிகா : ஆர்ய விலோம்! நீங்கள்... தங்கள் நிலை கடந்து பேசுகிறீர்கள். நான் என்ன குழந்தையா?.... நான் என் நன்மை தீமை பற்றி நன்கு அறிவேன். நீங்கள் இங்கே ஒரு அழையா விருந்தாளி என்று உங்களுக்குப் புரியவில்லையா?

விலோம் : எனக்கு இதை உணர்த்தவேண்டிய அவசியம் இல்லை. நீ என்னை வெறுக்கிறாய். எனக்கு இது நன்றாகவே தெரியும். நான் இங்கு இருப்பதிலிருந்தே நான் உன்னை வெறுக்கவில்லை என்பது உனக்கும் புரிந்திருக்கும்.

(நெருப்புத்தண்டின் ஒளியைக் காளிதாஸின் முகத்தில் படரச்செய்து)

மேலும் ஒரு கேள்வி நான் காளிதாஸனிடம் கேட்க வேண்டும்.

(பொருள் பொதிந்த பார்வையோடு காளிதாஸை நோக்கிவிட்டு மறுபடியும் மல்லிகாவைப் பார்க்கிறான்)

மல்லிகா! நீ காளிதாஸை நன்றாக அறிவாய்.... ஆனால்... உன்னை விடக் காளிதாஸை நான் நன்றாகவே அறிவேன்.

(மறுபடியும் ஒருவர் ஒருவராக இருவரையும் பார்த்துவிட்டு)

(வாயிலை நோக்கிச் செல்கிறான். அங்குச் சென்று திரும்பி மறுபடியும் காளிதாஸைப் பார்க்கிறான்)

காளிதாஸ்! உன்னுடைய பயணம் இனிதாகவே இருக்கட்டும். விலோம் எப்பொழுதுமே உனது நன்மையை விரும்புவான் என்று நீ நன்கு அறிவாய்.

காளிதாஸ் : இதை உன்னைத் தவிர வேறு யார் அறிவார்?

(விலோமின் தொண்டையிலிருந்து வெறுப்பு நிரம்பிய ஒலி வெளி வருகிறது. அவன் மறுபடியும் மல்லிகாவை நோக்கி)

விலோம் : இந்த அழையா விருந்தாளி மறுபடியும் எப்பொழுதாவது இங்குத் திரும்பி வரலாம். அதற்கு இப்பொழுதே மன்னிப்பைக் கேட்டுக் கொண்டு....

(கேலி நிரம்பிய புன்முறுவல் செய்து சென்று விடுகிறான். காளிதாஸ் ஒரு வினாடி நேரம் மல்லிகாவை நோக்கிவிட்டு ஜன்னல் அருகே செல்கிறான்).

மல்லிகா : அவன் பேசியதைக் கேட்டு என்னவாயிற்று உனக்கு? மறுபடியும் சோர்ந்துவிட்டாயா?

(காளிதாஸ் ஜன்னல் வழியாக வெளிப்புறம் நோக்குகிறான்)

நீ செல்வதாக... எனக்கு வாக்கு கொடுத்துவிட்டாய்... புரிகிறதா...

(காளிதாஸ் திரும்பி அவள் அருகில் வருகிறான்)

காளிதாஸ் : மல்லிகா! நீ மறுபடியும் ஒருமுறை யோசித்துப்பார். இங்குக் கேள்வி... மரியாதையையும் அரசாங்க ஆதரவையும்... ஏற்பது பற்றி அல்ல. இதைக்காட்டிலும் ஒரு பெரிய கேள்வி என் முன் எழுகிறது.

மல்லிகா : அந்தக் கேள்வி நான்தான்... அப்படித் தானே?

(அவனைத் தன் கைகளால் பிடித்து ஆசனத்தில் அமரச் செய்கிறாள்)

காளிதாஸ்... இப்படி... உட்கார். உனக்கு என்னைப் பற்றித் தெரியும்... இல்லையா?

(காளிதாஸ் அவளை நோக்கியபடியே இருக்கிறான்)

நீ... இந்தப் பொன்னான தருணத்தை எட்டி உதைத்து இங்கேயே தங்கிவிடுவதால் எனக்கு இன்பம் ஏற்படும் என்று நினைக்கிறாயா...? (தளும்பும் கண்ணீரை மறைக்கக் கண்களை இமைத்துவிட்டு மறுபடியும் மேலே நோக்குகிறாள்)

நீ இங்கிருந்து சென்றுவிடுவதால் என் மனம் வெற்றிடமாக மாறிவிடும். ஒருவேளை வெளியிலும் நான் பார்க்கும் என்னைச் சுற்றியுள்ள அனைத்துமே வெற்றிடமாகத் தோன்றலாம் என்று

எனக்குத் தெரியும். ஆனாலும் நான்..... என்னை நானே ஏமாற்றிக் கொள்ள முடியாது.

(முறுவலிக்க முயற்சி செய்து)

நீங்கள்... அங்குச் செல்ல வேண்டும் என்று நான் மனப்பூர்வமாகச் சொல்கிறேன்.

காளிதாஸ் : அதுசரி... இத்தருணம் நீ உன் கண்களைப் பார்த்தாயானால்...

மல்லிகா : நான் சொல்வதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லையே என்பதால்தான் என் கண்களில் கண்ணீர்.

(அவன் காலடியில் அமர்ந்து அவன் முழங்கால்களுக்குள் தன் முழங்கைகளைப் பதித்து)

நீ இங்கிருந்து சென்றாலும் என்னிடம் இருந்து விலகிச் செல்ல முடியுமா...?

இந்தக் கிராமப்பகுதியில் வசிப்பதால் மட்டும் உன்னுடைய திறமை வளர வாய்ப்புகள் கிட்டுமா?

இங்குள்ள மக்கள் உன்னைப் புரிந்துகொள்ளவில்லை.

அவர்கள் தங்களுக்குத் தெரிந்த அளவுகோலினாலேயே உன்னையும் அளக்க விரும்புகிறார்கள்.

(தன் முன்கைகளில் தன் முகவாயைப் பதித்து)

நான் உன்னை அறிவேன் என்று நீ அறிவாய் அல்லவா?

எந்தக் கயிற்றைக் கொண்டு கட்டினாலும் நீ அந்த வளையத்தில் வந்து விடுவாய் என்று எனக்குத் தெரியும் ஆகவே உன்னை நான் என் வளையத்தில் சிக்க வைக்க விரும்பவில்லை. ஆகவே நீ இங்கிருந்து சென்றுவிடு என்றுதான் கூறுகிறேன்.

காளிதாஸ் : மல்லிகா நீ முழுமையாக உணரவில்லை. இங்குக் கேள்வி நான் உன் வளையத்தில் சிக்குவது பற்றி அல்ல.

(அம்பிகா சொற்களின் உறுத்தலை உணர்ந்தாலும் தன்னை இயல்பாகவே வைத்துக் கொள்ள முயற்சி செய்கிறாள். காளிதாஸ் ஏதோ ஒரு நினைப்பில் எழுந்து உலாவத் தொடங்குகிறான்)

இந்தக் கிராமப் பிரதேசம் தான் என்னுடைய உண்மையான பூமியாகும். பல நூற்கயறுகளால் நான் இந்தப் பூமியில் கட்டுண்டு

கிடக்கிறேன். அந்த நூற்கயறுகளில் நீயும் உண்டு. இந்த வானம், இந்த மேகம், மலை முகில்கள், இங்குள்ள பசுமை, மான் குட்டிகள், இடையர்கள் எல்லோரும் உண்டு.

(மல்லிகாவை நோக்கி)

இங்கிருந்து சென்றால் நான் எனது பூமியிலிருந்து வேரோடு பிடுங்கப்படுவேன்.

(மல்லிகா இருக்கையில் தன் முழங்கையினால் முட்டுக் கொடுத்து)

மல்லிகா : அந்தப் புதிய பூமி இந்த இடத்தை விட அதிகமாகச் செழிப்பாகவும் செழுமையுாகவும் காணப்படும் என்று ஏன் நீ நினைக்கவில்லை... இந்தப் பூமியிலிருந்து நீ எடுக்க வேண்டியவற்றை எல்லாம் எடுத்துக் கொண்டு விட்டாய். உனக்கு அந்தப் புதிய பூமி தேவை. அது உன்னுடைய ஆளுமையை வளர்த்துப் பரிமளிக்கச் செய்யும். உன்னை வேரூன்றி வளரச் செய்யும்.

காளிதாஸ் : புதிய பூமி காய்ந்தும் காணப்படலாம்.

(மறுபடியும் உலாவியபடியே)

மல்லிகா : உள் ஈரம் இல்லாத எந்த நிலமும் பூமியும் இருக்க முடியாது. உன்னுடைய திறமை அந்த உள் ஈரத்தைக் கண்டிப்பாகத் தொட்டுவிடும்.

காளிதாஸ் : அதே சமயம் அந்த வாழ்க்கைக்கும் சில எதிர்பார்ப்புகள் இருக்கும் அல்லவா?...

(மல்லிகா எழுந்து அவன் அருகில் சென்று அவனது கைகளைத் தன் கைகளில் பற்றிக் கொண்டு)

மல்லிகா : அந்த வாழ்க்கையில் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் உங்களுக்கு இல்லையே. நீங்கள் மற்றவர்களுக்குப் புதிய எதிர்பார்ப்புகளைப் படைக்கமுடியும்.

காளிதாஸ் : ஆனாலும் பலப் பல சந்தேகங்கள் மனத்தில் எழுகின்றன. எனது மனத்தில்... உற்சாக உணர்வு உண்டாகவில்லை.

மல்லிகா : காளிதாஸ்.... என்னைப் பார். என்னைப் பாரேன்? பார்க்க மாட்டாயா?

(காளிதாஸ் அவளது கண்களை நோக்குகிறான்)

இன்னுமா உனக்கு உற்சாக உணர்வு ஏற்படவில்லை. நீ இங்கிருந்து சென்றாலும் இங்கிருந்து பிரியவில்லை என்பதை நம்ப வேண்டும். நீ... தனியாகவா போகிறாய்... இந்தக் காற்று, இந்த மேகங்கள், இந்த மான்கள் எல்லாவற்றையும் உன்னோடு எடுத்துச் செல்வாய்... மேலும் நானும் உன்னைவிட்டுச் செல்லமாட்டேன். எப்பொழுது உன்னிடம் வர விரும்பினாலும் மலைமுகட்டில் ஏறி வந்துவிடுவேன். பறந்து வரும் மேகக் கூட்டத்தில் சூழ்ந்துவிடுவேன்.

(மேகங்கள் இடிக்கின்றன. காளிதாஸ் அவள் கைகளைப் பிடித்தபடியே இருக்கிறாள். மல்லிகா இமைகளை இமைத்துத் தன் கண்ணீரை உலர வைக்கிறான்)

மழை கொட்டும் என்று தோன்றுகிறது. ஏற்கெனவே நன்றாக இருட்டிவிட்டது. ஆச்சாரியார் உன்னை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்.

காளிதாஸ் : என்னைச் செல்லக் கட்டாயப்படுத்துகிறாயா?

மல்லிகா : ஆமாம், நீ தான் பாரேன்! நீ சென்றாலும் நாம் மிக்க மகிழ்வாக இருப்பேன். நீண்ட நேரம் மலைமுகடுகளில் உலாவுவேன். ஒவ்வொரு மாலையும் அம்மன் கோவில் சென்று அந்தி வானம் சிவப்பதை இரசிப்பேன்...

காளிதாஸ் : இதன் பொருள்.... நான் உன்னிடமிருந்து விடைபெறட்டுமா?

மல்லிகா : இல்லை... இல்லை... நான் உனக்கு விடை கொடுக்க மாட்டேன். நீ செல்கிறாய். ஆகவே உனதுவழி ஒளிமயமாக இருக்கப் பிரார்த்தனை செய்வேன். நம் உணர்வுகள் நம்மிடமிருந்து விடைபெறாது...

(அவனுடைய கைகளை விலக்கி)

போ. (மல்லிகா முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள்) போ. காளிதாஸ்.

(காளிதாஸ் ஒரு வினாடி கண்களை மூடியபடியே இருக்கிறான். பிறகு விடுக்கென்று சென்றுவிடுகிறான். மல்லிகா கைகளினால் முகத்தை மூடியபடியே இருக்கையில் அமர்கிறாள். வேகமாக இடித்து மழை கொட்டும் ஒலி காதுகளில் விழுகிறது. மல்லிகா தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தேம்ப முனைகிறாள். அம்பிகா

உள்ளே இருந்து வந்து அவள் தலைமேல் கைவைத்து முகத்தை மேலே தூக்குகிறாள்.

அம்பிகா : மல்லிகா!

(மல்லிகா இருக்கையில் இருந்து ஜன்னல் அருகில் செல்கிறாள். ஜன்னலிலேயே தன் தலையைச் சாய்த்துக் கொள்ளுகிறாள்).

உனக்கு உடம்பு சரியில்லை. உள்ளே சென்று ஓய்வு எடுத்துக்கொள்.

(தன் விம்மலை அடக்க முயற்சி செய்து அவ்வாறே ஜன்னல் அருகில் நிற்கிறாள்)

மல்லிகா : அம்மா! என்னை இங்கேயே இருக்கவிடு. என் உடம்புக்கு ஒன்றும் இல்லை. அம்மா நீதான் பாரேன்! நாலாப் பக்கமும் எவ்வளவு அடர்ந்த மேகங்கள் சூழ்ந்துள்ளன. நாளை இந்த மேகங்கள் உஜ்ஜையினிக்குப் பறந்து சென்றுவிடும்.

(மறுபடியும் முகத்தை மூடி விம்முகிறாள். அம்பிகா மகள் அருகில் சென்று அவளைத் தன்னுடன் சாய்த்துக் கொள்ளுகிறாள்)

அம்பிகா : மல்லிகா! அழாதே!

மல்லிகா : அம்மா! நானா அழுகிறேன்! என் கண்கள் சொரிகின்ற நீர்த் துளிகள் வருத்தத்தினால் அல்ல... மகிழ்ச்சியினால்... ஆம்... மகிழ்ச்சியினால்தான்....

(அம்பிகாவின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொள்கிறாள். மறுபடியும் இடி முழங்கவும் மேகத்தின் கர்ஜனையும் மழையின் சப்தமும் பலமாகக் கேட்கின்றன).

அங்கம் இரண்டு

சில வருடங்களுக்குப் பிறகு

அதே அறை :

(அறையின் நிலைமை முன்னைவிட மாறி இருக்கிறது. தரைப்பூச்சு அங்குப் பெயர்ந்து காணப்படுகிறது. காவியினால் வரையப்பட்ட ஸ்வஸ்திக் சின்னம், சங்கு, தாமரை இப்பொழுது மிகவும் வெளிரி இருக்கின்றன. அடுப்பின் அருகில் குறைந்த பாத்திரங்களே காணப்படுகின்றன. குதிர்கள் இரண்டு மட்டும்தான் உள்ளன. அதன் மேல் பாசி படர்ந்து காணப்படு கிறது. இருக்கையின்மேல் நறுக்கோலை (போஜ்பத்ர) ஓலைச்சுவடிகள் சிதறிக் கிடக்கின்றன. இருக்கையின் அருகில் ஒரு உடைந்த மேடை உள்ளது. அதில் நறுக்கோலைகளின் கட்டப்பட்ட ஒரு சுவடி (நூல்) வைக்கப்பட்டுள்ளது.

அடுப்பின் பக்கத்தில் ஒரு கொடி கட்டப்பட்டுள்ளது. அதில் சில துணிகள் உலர வைக்கப்பட்டுள்ளன. பொரும்பாலான துணிகள் கிழிந்தும் பல இடங்கள் கைத்தையல் போடப்பட்டும் காணப்படுகின்றன.

ஒரு உடைந்த மேடை வாசல் கதவு அருகில் இருக்கிறது. ஒரே ஒரு இருக்கை உள்ளது. அதில் அமர்ந்து மல்லிகா கலுவத்தில் மருந்து அரைத்துக்கொண்டு இருக்கிறாள்.

உள்ளே இருக்கும் கட்டிலின் ஒரு பாகம் மட்டும் காணப்படுகிறது. அம்பிகா கட்டில் மீது படுத்துக்கொள்கிறாள். அடிக்கடி புரண்டு புரண்டு (மாறி மாறி) படுத்துக்கொள்கிறாள். நிக்ஷேப் வெளியில் இருந்து வருகிறான். மல்லிகா தன்மேல் சால்வையைச் (துப்பட்டாவை) சரிசெய்து கொள்கிறாள்)

நிக்ஷேப் : அம்பிகாவின் உடல் நிலை இப்பொழுது எப்படி உள்ளது?

மல்லிகா : இப்பொழுதும் அதே காய்ச்சல்தான் வருகிறது.

நிக்ஷேப் : உடம்பு முன்னைக்காட்டிலும் தேறி வருகிறதா ?

மல்லிகா : அப்படி ஒன்று தெரியவில்லை.

நிக்ஷேப் : இரு வருடங்களாக ஒரேமாதிரியான காய்ச்சல்.

(மல்லிகா பெருமூச்சு விட்டு அரைத்த மருந்தைக் கலுவத்திலிருந்து பாத்திரத்திற்கு மாற்றுகிறாள். நிக்ஷேப் மோடாவை இழுத்து அதன் மீது அமர்கிறான்.

உண்மையில் அம்பிகா மிகவும் கவலை அடைந்தவளாகக் காணப்படுகிறாள்.

மல்லிகா : மருந்தும் சரியாகச் சாப்பிடுவது இல்லை.

(மருந்தில் பாலையும் தேனையும்கலந்து கொடுக்கிறாள். நிக்ஷேப் தன்னுடைய கைவிரல்களைக் கோர்த்துக்கொண்டே அவளைப் பார்க்கிறான்)

நிக்ஷேப் : உன் உடல் நலம் எப்படி உள்ளது ?

மல்லிகா : ஏதோ .... இருக்கிறது.

நிக்ஷேப் : "நீ மிகவும் உடல் நலிந்து போகிறாய்.... வெகு நாட்களாகவே தலைநகரிலிருந்து யாரும் வரவில்லை."

(மல்லிகா அவனைப் பார்க்காமல் தன்னை மும்முரமாகக் காட்டிக் கொண்டு மருந்தைக் கலக்குகின்றாள்).

நிக்ஷேப் : ஒரு தடவை உஜ்ஜையினி சென்று அவரைப் பார்த்து வரலாம் என்று தோன்றுகிறது.

மல்லிகா : ஏன் ?

நிக்ஷேப் : அவரிடம் நான்அதிகம் பேசவேண்டும். நான்தான் குற்றவாளி என்று என் மனம் அடிக்கடி கூறுகிறது.

(மல்லிகா ஆழமான உணர்வோடு அவனைப் பார்க்கிறாள்)

மல்லிகா : எதைப்பற்றி ?

(நிக்ஷேப் பெருமூச்சடைந்து)

நிக்ஷேப் : எதைப்பற்றி என்பது உனக்குத் தெரியும்.... காளிதாஸ் உஜ்ஜையினி சென்று அங்கேயே இருந்து விடுவார் என்று நான் நினைக்கவே இல்லை.

மல்லிகா : அங்குக் காளிதாஸ் இவ்வளவு மும்முரமாக உள்ளார் என்பதைப் பார்த்து எனக்கு மிக்க மகிழ்ச்சி. இங்கு அவன் "ருதுசம்ஹாரம்" என்ற நூலை மட்டும் தான் படைத்தான். ஆனால் அங்கோ அவன் மேலும் பல புதிய காவியங்களைப் படைத்துள்ளான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அங்கிருந்து

வந்தவர்கள் மூலம்அவன் படைத்த குமார சம்பவம், மேக தூதம் என்ற இரண்டு படைப்புகள் கிடைத்தன. அவர்கள் காளிதாஸ் இயற்றிய மற்றொரு உயர்ந்த காவியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் அந்தப் படைப்பின் நகல் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

நிக்ஷேப் : அவர் சில நாடகங்களையும் படைத்தார் என்று காதில் விழுகிறது. இந்த நாடகங்கள் அங்கு உள்ள நாடக அரங்கத்தில் நடிக்கப்பட்டன. இருந்தாலும்....

மல்லிகா : இருந்தாலும்..... என்ன.

நிக்ஷேப் : எனக்குக் கூற வருத்தமாக உள்ளது. அங்கு இருந்து வந்தவர்கள் மூலம் நான் மேலும் பல செய்திகள் கேள்விப் பட்டேன்....

மல்லிகா : முன்னேறும் மனிதர்களுக்குப் பல வீண் பழிகளைச் சுமக்க நேரிடுகின்றன.

நிக்ஷேப் : நான் பழிகளைப் பற்றிக் கூற வரவில்லை.

(எழுந்து நடக்க ஆரம்பிக்கிறான்).

நீயும் கேள்விப்பட்டாயா. குப்த வம்சத்து இராஜகுமாரியுடன் அவர் திருமணம் நடைபெற்று விட்டது.

மல்லிகா : இதில் என்ன தவறு.

நிக்ஷேப் : ஒரு பக்கம் பார்த்தால் இதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால் அவர் இங்கு இருந்த சமயம் நான் வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று வரட்டுப் பிடிவாதம் பிடித்துக் கொண்டு இருந்தாரே ? (அவளைப் பார்த்து)

அந்தப் பிடிவாதம் என்னவாயிற்று. அவர் இதைப் பற்றிச் சிறிது கூடச் சிந்திக்கவில்லை....அவரின் அந்த வரட்டுப் பிடிவாதத்தைக் காப்பாற்றுவதற்காக நீ....

மல்லிகா : காளிதாஸ் சம்மந்தப்பட்ட சந்தர்ப்பத்தில் என் விஷயம் ஏன் வரும்....நான் சாதாரண மனிதர்களுள் ஒருத்தி. ஆனால் அவரோ அசாதாரணமானவர். ஆகையால் அவள் வாழ்க்கையும் அசாதாரணமாகத்தான் அமைய வேண்டும்....அரசகுமாரி மிகவும் புத்திசாலி என்று கேள்விப்பட்டேன்.

நிக்ஷேப் : நானும் கேள்விப் பட்டேன். மிகவும் படித்துள்ளார்கள். நான் கூறினேன் அல்லவா.... ஒரு பக்கம் பார்த்தால் இதில் தவறு

ஒன்றுமில்லை. ஆனால் மறுபக்கம் பார்க்கும்போது எனக்கு மிகுந்த பட்சாதாபம் ஏற்படுகிறது.

மல்லிகா : "இதற்கு மாறாக எனக்கு என் மீதே மிகுந்த பட்சாதாபம் ஏற்படுகிறது''. ஏனென்றால் நான்அவருடைய முன்னேற்றப் பாதையில் ஒரு முட்டுக்கட்டையாக இருந்திருப்பேன். உங்கள் சொற்படி நான் அவனை அங்குப் போகும்படி தூண்டாவிட்டால் எவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டு இருக்கக்கூடும்?

நிக்ஷேப் : நான் சொல்லியபடி நீ நடக்கமாலிருந்தால் உன்னுடைய வாழ்க்கை இவ்வாறு திசைமாறி இருக்காது? இதனால் எனக்கு மிகவும் மனவருத்தம்.

மல்லிகா : என்னுடைய வாழ்கையில் என்ன மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது? முன்பு அம்மா வேலை செய்தார்கள். அவர் உடல் நலக்குறைவால் இன்று நான் வேலை செய்கிறேன்.

நிக்ஷேப் : வெளித்தோற்றத்தில் இவ்வளவுதான் வித்தியாசம்.

மல்லிகா : உள்.....தோற்றத்திலும் இவ்வளவுதான் வித்தியாசம்.

(மருந்தை எடுத்து நின்று கொண்டு).

அம்மாவுக்கு மருந்தைக் கொடுக்க வேண்டும். நான் இதோ வருகிறேன்.

(உள்ளே சென்று அம்பிகாவைக் கைத்தாங்கலாக அமர வைத்து மருந்தைக் குடிக்கச் செய்கிறாள். அம்பிகா மருந்தைக் குடித்து தலையை அசைக்கிறாள். நிக்ஷேப் உலாவியபடியே ஜன்னல் அருகே வருகிறான். வெளியில் குதிரைகளின் குளம்பு ஒலி கேட்கிறது. பிறகு மறைந்து விடுகிறது. நிக்ஷேப் ஜன்னலை ஒட்டி நின்று வெளியே பார்த்துக் கொண்டே இருக்கிறான். அம்பிகா மருந்த உண்டு படுத்துவிடுகிறாள். மல்லிகா வெளியில் வந்து கதவின் அருகாமையில் நின்று அம்பிகாவைப் பார்க்கிறாள்.

மல்லிகா : அம்மா ! குளிர் அடிக்கிறது.... கதவைச் சாற்றிவிடட்டுமா?

(அம்பிகா சம்மதம் தெரிவித்துத் தலையை அசைக்கிறாள். மல்லிகா கதவைச் சாத்துகிறாள். நிக்ஷேப் ஜன்னலைவிட்டு அகல்கின்றான்)

நிக்ஷேப் : இன்றும்.... சில மனிதர்கள் வெளியிலிருந்து வந்துள்ளார்கள் போலும் !

மல்லிகா : எந்த மனிதர்கள்?

நிக்ஷேப் : அரசாங்க அதிகாரிகள் போலும். அன்று காளிதாஸை அழைத்துச் செல்ல ஆச்சாரியர் அவர்களுடன் யார் வந்தார்களோ அவர்களைப் போன்று இரு மனிதர்களை இன்று பார்த்தேன்.

(மல்லிகா சிறிது நடுங்கி விடுகிறாள்)

மல்லிகா : அதே மாதிரி மனிதர்களா?

(தன்னுடைய உணர்வினை மறைத்துச் சிரிக்க முயற்சிக்கிறாள்)

அம்மா இவர்களைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா.... உனக்கு? இந்த மாதிரி மனிதர்கள் இங்குக் காணப்பட்டால் ஏதாவது ஒரு தீங்கு கட்டாயம் நேரிடும். ஏதாவது யுத்தம் அல்லது அம்மை! .... மக மாறி...!

ஆனால் கடந்த தடவை இவ்வாறு ஒன்றும் நடக்கவில்லையே...!

நிக்ஷேப் : ஒன்றும்... நடக்கவில்லையா?

(மல்லிகா அவன் பார்வையிலிருந்து தப்பிக்க ஈரத்துணிகளைப் பார்ப்பதில் ஈடுபடுகிறாள்)

மல்லிகா : என்ன நடந்தது ? எது நடந்ததோ. அது நன்றாக இருந்தது (ஒன்று... இரண்டு துணிகளைக் கீழே எடுத்து மறுபடியும் கொடியில் உலர்த்துகிறாள்)

இந்நாட்களில் காற்றில் எவ்வளவு ஈரம்.... துணிகள் மணிக்கணக்காக உலர வைத்தாலும் உலரவே இல்லை.

(மறுபடியும் குதிரைக் குளம்புகளின் ஒலி. நிக்ஷேப் மறுபடியும் ஜன்னல் அருகில் செல்கிறான். அவன் வாயிலிருந்து வியப்பின் ஒலி திடீரென்று கிளம்புகிறது)

நிக்ஷேப் : என்னது! என்னது! ..... ஆச்சர்யம்.... இருக்காது....! ....ஆனால் எப்படி இல்லாமல் இருக்கும்?

(குதிரை குளம்புகளின் ஒலி தூரம் சென்றுவிடுகிறது. ஆவேசம் வந்த மாதிரி நிக்ஷேப் ஜன்னல் பக்கத்தில் இருந்து விலகி வருகிறான்)

மல்லிகா : என்ன ஆயிற்று ஆர்ய நிக்ஷேப்? திடீரென்று பொங்கி எழுந்து விட்டீர்களே ? ஏன் ! என்னவாயிற்று ....?

நிக்ஷேப் : நான் இப்பொழுது ஒரு மனிதன் குதிரையில் செல்வதைப் பார்த்தேன்.

மல்லிகா : அதில் என்ன இருக்கிறது? உங்களுக்கும் அம்மா மாதிரி தீங்கு வரும் என்ற சந்தேகம் வந்துவிட்டதா?

நிக்ஷேப் : மல்லிகா அவர் எனக்கு மிக்க நன்றாகத் தெரிந்த மனிதர்.

மல்லிகா : தெரிந்த மனிதாரா?

நிக்ஷேப் : ஆமாம். அவர் காளிதாஸ்தான். எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது..... அவர் காளிதாஸ்தான்.

மல்லிகா : காளிதாஸா ! .... இது எப்படி நடக்கும்?

நிக்ஷேப் : நான் என் கண்களினால் பார்த்தேன். குதிரையைச் செலுத்திக் கொண்டு மலை முகட்டை நோக்கிச் சென்றார். அரச ஆடையில் மற்றவர்களுக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால் நிக்ஷேப்பின் கண்கள்அவரை அடையாளம் தெரிந்து கொள்ளுவதில் எந்தத் தவறும் செய்யாது. அரசாங்க அதிகரிகளும் அவருடன் வந்து இருப்பார்கள். நான் சென்று பார்க்கிறேன்.

(அதே ஆவேசத்தோடு செல்லுகிறான்)

மல்லிகா : காளிதாஸ் வந்துள்ளான் மலைமுகட்டை நோக்கிச் சென்றுள்ளான்.

(தன் விரலைக் கடிக்க வலி உணர்வு ஏற்படுகிறது. பின்பு இயந்திர கதியில் ஜன்னலுக்கு அருகில் செல்கிறாள். வாசல் வழியாக ரங்கிணி, ஸங்கிணி இருவரும் உள்ளே நுழைகின்றனர். மல்லிகா வியப்பினால் அவர்களைப் பார்க்கிறாள். ரங்கிணி, ஸங்கிணி இருவரும் முன்னே வருகின்றனர்)

ரங்கிணி : நாம் உள்ளே வரலாமா என்று இவளைக் கேள்?

ஸங்கிணி : நீதான் கேளேன்?

(மல்லிகா அவர்கள் அருகில் வருகிறாள்)

ரங்கிணி : நல்லது. நானே கேட்கிறேன்.... இது உன்னுடைய வீடா!

மல்லிகா : ஆமாம்....உள்ளே வாருங்கள். நீங்கள் என் வீட்டிற்கு வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது...!

(இருவரும் உள்ளே வருகின்றனர். நாலாப்பக்கமும் தங்கள் பார்வையைச் சுழல விடுகின்றனர்)

ரங்கிணி : நாங்கள் சாதாரணமாகத்தான் இங்கு வந்தோம்....இந்தக் கிராமப் பகுதியைச்சுற்றிப் பார்த்தபடியே...

ஸங்கிணி : நாங்கள் இப்பகுதியின் வீட்டு அமைப்புகளைப் பார்க்க ஆசைப்படுகிறோம்.

ரங்கிணி : இங்குள்ள வாழ்க்கை முறைகளையும் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

ஸங்கிணி : முதலில் எங்களை அறிமுகப்படுத்திக் கொள்கிறோம். இவள் ரங்கிணி. உஜ்ஜையினியில் உள்ள நாட்டியப் பள்ளியில் பயிற்சி செய்கிறாள். நாடகம் எழுதுவதில் இவளுக்கு மிக்க ஈடுபாடு.

ரங்கிணி : இவள் ஸங்கிணி. அதே பள்ளியில் மிருதங்கம், வீணை கற்கிறாள். காதல் கவிதை எழுதுவதில் வல்லவள். தற்சமயம் உரைநடையில் இவளுக்கு ஈடுபாடு வந்துள்ளது.... நீ இப்பொழுது உன்னைப்பற்றிச் சொல்.

(மல்லிகா பதில் கூறாமல் வியப்போடு அவர்களைப் பார்க்கிறாள்)

ஸங்கிணி : நீ உன்னைப் பற்றிச் சொல்லவில்லையே!

மல்லிகா : என்னைப் பற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது. வாருங்கள். இந்த இருக்கைகளில் அமருங்கள்.

ஸங்கிணி : நாங்கள் இங்கு அமர வரவில்லை. கற்றுக் கொள்ள வந்துள்ளோம். இந்த இடத்தை நீங்கள் எப்படி அழைப்பீர்கள்?

மல்லிகா : எந்த இடத்தை ?

ரங்கிணி : நாம் தற்சமயம் இருக்கும் இடத்தை, உஜ்ஜையினியில் இதை "அறை" என்று அழைப்போம். நீங்கள் எப்படி அழைப்பீர்கள்.

மல்லிகா : அறை....

ரங்கிணி : நீங்கள் இதை "அறை" என்றுதான் அழைப்பீர்கள்? மேலும்....

(சால் அருகில் சென்று அதைச் சுட்டிக்காட்டி) இதை...

மல்லிகா : சால்.

ரங்கிணி : சால். அறையை அறை என்றும் சாலைச் சால் என்றுமா?

(நிராசையினால் தோளைக்குலுக்கினாள்)

ஸங்கிணி : இவைகளுக்கு வட்டாரச் சொல் வேறு இல்லையா?

(மல்லிகா களை இழந்து அவர்களை நோக்கியபடியே இருக்கிறாள்)

மல்லிகா : வட்டாரச்சொற்களா ?

ஸங்கிணி : ஆம். வட்டாரச் சொற்கள்தான். "யத்தா" வை யர்வா என்றும் "தத்தா" வை தர்வா என்றும் சில மக்கள் சொல்லுவர் என்று பதஞ்சலி எழுதியுள்ளார்.

"அதாவது "யர்வாண ஸதர்வாண: க்திசயோ பமூவு:"

மல்லிகா : எனக்கு இவ்வளவு அறிவு கிடையாது.

(ஸங்கிணி சோர்வு அடைந்த மாதிரி இருக்கையில் அமர்கிறாள். ரங்கிணி சுற்றிச் சுற்றி அறையில் உள்ள ஒவ்வொரு பொருளையும் பார்க்கிறாள். மல்லிகா ஸங்கிணியுடன் சேர்ந்து செல்லுகிறாள்.

ஸங்கிணி : நாங்கள் இங்குள்ள வாழ்க்கை சம்பந்தப்பட்ட....மறுபடியும் சொல்லுகிறேன்.... இங்குள்ள வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டும் நாங்கள் தெரிந்துக்கொள்ள விரும்பு கிறோம். உன்னுடைய வீடு துணிமணிகள் எல்லாம் கிட்டதட்ட எங்களது போல்தான் இருக்கின்றன. இங்குள்ள வாழ்க்கையின் தனித்தன்மைதான் என்ன?

மல்லிகா : இங்குள்ள வாழ்க்கையின் தனித்தன்மையா!

(வினாடி நேரம் ஜன்னலை நோக்கிப் பார்த்துவிட்டு)

எனக்குத் தெரியாது. எல்லாவிதத்திலும் எங்கள் வாழ்க்கை மிகச் சாதாரணமானது.

ஸங்கிணி: இதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தப் பிரதேசம் காளிதாஸன் போன்ற சிறப்பான திறமை பெற்றவர்களை ஈன்று எடுத்துள்ளது. இங்கு உள்ள ஒவ்வொரு பொருளும் சாதாரண மானவையன்று.

(ரங்கிணி அடுப்பின் அருகில் சென்று எல்லாப் பொருள்களையும் ஊன்றிக் கவனித்து ஒருதடவை உள்ளேயும் எட்டிப் பார்த்துவிட்டு அவள் அருகில் வருகிறாள்.

அரசாங்கத்திட்டப்படி கவி காளிதாஸின் வாழ்க்கைப் பின்னணிப் பற்றி ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். இது எவ்வளவு பெரிய காரியம் என்று உனக்குப் புரிந்து இருக்கும். ஆனால் இங்கு வந்து எங்களுக்குக் கிட்டத்தட்ட நிராசைதான் ஏற்பட்டுள்ளது. இங்கு எந்த விதமான செய்திகளும் கிடைக்கவில்லை.

ஸங்கிணி : இங்குள்ள மூலிகைச் செடிகளின் பெயர்களாவது கூறுங்கள்.

மல்லிகா : என்ன மூலிகைச் செடிகள்?

ஸங்கிணி : என்ன மூலிகைச் செடிகளா?

(யோசித்து)

காளிதாஸ் குமார சம்பவ காவ்யத்தில் எழுதியுள்ளாரே...

"பாஸ்வந்தி ரத்னானி மகா ஔசதிச்ச" : "பாஸ்வந்தி ரத்னானி இந்த ஒளிவிடும் மூலிகைச் செடிகள் என்ன என்று கூற முடியுமா...?

மல்லிகா : மூலிகைச் செடிகள் ஒளிராது.

(ஸங்கிணி எழுந்து விடுகிறாள்)

ஸங்கிணி : மூலிகைச் செடிகள் ஒளிராதா...? அப்படியானால் காளிதாஸன் எழுதியது பொய்யானதா?

மல்லிகா : அவர்கள் எந்தப் பொய்யும் எழுதவில்லை. அவர் எழுதியது...

ரங்கிணி: நீ விடு ஸங்கிணி. இவளுக்கு இந்தப் பகுதியைப்பற்றிச் சிறப்பாக ஒன்றும் தெரியாது போலும்.

(ஸங்கிணி நிராசையால் முகத்தைக் கோணிக்கொண்டு எழுகிறாள்)

ஸங்கிணி: நாங்கள் உன் நேரத்தை வீணாக்கிவிட்டோம். மன்னித்துவிடு. ரங்கிணி! கிளம்பு .... போகலாம்....

(இருவரும் செல்லுகிறார்கள். மல்லிகா வாயில் கதவை மூடி விட்டு இருக்கையின் பக்கத்தில் அமர்கிறாள். சிதறிய பக்கங்களில் தன் தலையைப் பொருத்துகிறாள். கண்களை மூடிக்கொண்டு)

மல்லிகா: பல வருடங்களுக்கு... பிறகு நீ திரும்பி வந்துள்ளாய். நீ வந்தால் மேகங்கள் சூழும்.

பகலிலேயே இருட்டிவிடும்... பழைய மாதிரியாகவே மழையில் நனைந்து கொண்டே..... பார்த்தாயா....நான் உன் எல்லா நூற்களையும் படித்து விட்டேன் என்று கூறுவேன்.

(சில பக்கங்களைக் கையில் எடுத்து)

உஜ்ஜையினி செல்லும் மனிதர்களிடம் என்ன என்ன சொல்லி எப்படி எல்லாம் வேண்டி இந்த நூற்களை வாங்கினேன் தெரியுமா? மேகதூத வரியைப் உனக்குப் பாடிப்பாடிக் காட்டுவேன்.... மலை

முகடுகளில் மணி ஒலி எதிரொலிக்கும். அப்பொழுது இந்த சிறிய அன்பளிப்பை உன் கைகளில் கொடுப்பேன்....

(மேடையில் உள்ள ஓலைக்கட்டை கையில் எடுத்து)

இவைகள் உன்னுடைய புதிய படைபிற்கு. இந்த எழுத்தோலைகளை உனக்காக எனது கையினால் கோர்த்துள்ளேன். இதில் நீ எப்பொழுதாவது எழுதும்பொழுது, இதில் நானும் உள்ளேன்... என் உணர்வுகளும்...கலந்துள்ளன.... இந்தப் புதிய படைப்பில் எனது பங்கும் உள்ளது என்ற உணர்வு எனக்கு ஏற்படும்.

(பெருமூச்சு விட்டபடி ஓலைச்சுவடிகளை வைத்துவிட்டு)

ஆனால்.....இன்று நீ வந்துள்ளாய். இங்கு உள்ள சூழ்நிலை முழுவதும் மாறிவிட்டது. நீ பழைய மனிதனா? இல்லை.... மாறிவிட்டாயா...என்று என்னால் எதையும் யூகிக்கமுடியவில்லை. நம் உணர்வுகள் நம்மை...வஞ்சிக்குமா....?

(யாரோ ஒருவன் கதவை இடிக்கிறான். அவள் தலையை உதறிக்கொண்டு எழுந்து கதவின் அருகில் சென்று கதவைத் திறக்கிறாள். வாயிலில் அனுஸ்வரும், அனுநாஸிக் இருவரும் சேர்ந்து நிற்கிறார்கள். மல்லிகா அவர்களைப் பார்த்துக் குழம்பி விடுகிறாள்.

அனுஸ்வர்: நான் தேவி மல்லிகா அவர்கள் முன்புதான் நிற்கிறேன் என்று எண்ணுகிறேன்.

மல்லிகா : கூறுங்கள்.

அனுஸ்வர்: அரசர்....தேவ் மாத்ரு குப்தர் அவர்களின் வேலைக்காரர்கள், வணக்கத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். (இருவரும் தலை சாய்த்து தங்கள் வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். மல்லிகா திகைத்த மாதிரி அவர்களைப் பார்க்கிறாள்)

மல்லிகா: தேவ் மாத்ருகுப்தர்? யார் அந்த மாத்ருகுப்தர்?

ருதுஸ்ம்ஹாரம், குமார சம்பவம், மேகதூதம், இரகுவம்சம் ஆகிய இலக்கியங்களைப் படைத்த கவி அரசர், அரசியல் வித்தகர், ஆச்சாரியர் வருங்காலக் காஷ்மீரத்தின் அரசர். தேவ் மாத்ருகுப்தரின் பட்டத்து அரசியும் குப்த வம்ச குமாரியும் அனைத்திலும் பாண்டித்தியம் பெற்ற தேவி பிரியங்குமஞ்சரி தங்களைப் பார்க்க மிக ஆவலாக உள்ளார். வெகு விரைவில்

இங்கு வர உள்ளார். நாங்கள் அவர்களின் வேலையாட்கள். அவர்களின் வருகையை உங்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க நாங்கள் இங்கு வந்துள்ளோம்.

மல்லிகா : ருதுஸம்ஹாரம், மேகதூதம் ஆகியவற்றைப் படைத்தவர் காளிதாஸ்தானே! ஆனால் தாங்களோ....

அனுஸ்வர்: அவர் குப்த ராஜ்ஜியத்தின் சார்பாகக் காஷ்மீர் அரசராக பொறுப்பேற்கச் செல்கிறார். மாத்ருகுப்தர் என்பது அவரின்புதிய பெயர்.

மல்லிகா : அவர் காஷ்மீர் அரசராகப் பொறுப்பேற்கிறாரா? அவரின் பட்டமகிஷியா என்னைச் சந்திக்க இங்கு வருகிறார்?

அனுஸ்வர்: இந்த மதிப்புமிக்க தருணத்தில் தாங்கள் தங்கள் இந்த வீட்டு வாசலைச் சீர்திருத்தக் கண்டிப்பாக விரும்புவீர்கள் என எனக்கு மிக்க நம்பிக்கை உண்டு. இதைத் தங்களின் கட்டளையாக ஏற்று நாங்களே சீர் செய்து விடுகிறோம். அனுநாஸிக்.... வா. சீர் செய்யலாம்....

(இருவரும் உள்ளே வந்து எல்லாப் பொருட்களையும் சுத்தம் செய்யும் நோக்கோடு பார்க்கிறார்கள். மல்லிகா சற்று விலகி ஒரு பக்கம் செல்கிறாள். அனுநாஸிக் இருக்கையின் அருகில் வருகிறான்)

அனுநாஸிக்: இந்த இருக்கை கதவின் அருகில் இருக்க வேண்டும்.

அனுஸ்வர்: அரசி அவர்கள் உள்ளே நுழையும் சமயம் இந்த இருக்கை கதவின் அருகில் இருக்கவேண்டாமா?

அனுநாஸிக்: அப்படியானால் இப்பொழுது இருக்கும் இடத்திலிருந்தும் சில அங்குலம் தெற்குப்பக்கம் நகர்த்த வேண்டும்.

அனுஸ்வர்: தெற்குப்பக்கத்திலா?

(மறுப்புத் தெரிவிக்கும் விதத்தில் தலையை அசைக்கிறான்)

இப்பொழுது இருக்கும் இடத்திலிருந்து ஐந்துஅங்குலம் வடக்குப் பக்கம் நகர்த்த வேண்டும். ஏன் என்றால் ஜன்னல் வழியாக சூரிய வெளிச்சம் நேராக இங்குதான் படுகிறது.

அனுநாஸிக்: இதை நன் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

அனுஸ்வர்: நீ சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

அனுநாஸிக் : அப்படியானால்....!

அனுஸ்வர்: நமக்குள் ஏன் இந்த விவாதம். இருக்கை இருந்தபடியே இருக்கட்டும்.

அனுநாஸிக்: இதுதான் சரி. இது இங்கேயே இருக்கட்டும். ஆனால் இந்த சால்....?

(சால்கள் அருகில் செல்கிறான்)

அனுஸ்வர்: ஒரு சால் இந்தப்பக்கம். ஒரு சால் அந்தப்பக்கம் இருக்க வேண்டும். சரிதானே?

அனுநாஸிக் : இந்த சால்கள் இங்கேயே இருக்கக்கூடாது.

அனுஸ்வர்: ஏன்?

அனுநாஸிக்: இந்த "ஏன்" என்பதற்குப் பதில் இல்லை.

அனுஸ்வர்: இதை நான் ஏற்க மாட்டேன்.

அனுநாஸிக் : நீ சொல்வதை நான் ஏற்கமாட்டேன்.

அனுஸ்வர்: அப்படியானால்....

அனுநாஸிக்: இந்தச் சால்கள் இங்கேயே இருந்து விட்டுப்போகட்டும்.

(இருவரும் துணிகள் உலர வைக்கப்பட்டிருக்கும் கொடிக்கயிறு பக்கம் செல்கிறார்கள். மல்லிகா இருக்கையின் அருகில் சிதறி இருக்கும் ஒலை நறுக்குகளை ஒன்று சேர்த்து அவைகளை மோடாவின் மேல் வைக்கிறாள். பின் உள்ளே செல்கிறாள். அனுஸ்வர் ஈரத்துணிகளைத் தொடுகிறான்.

அனுஸ்வர்: இந்தத் துணிகள்.

அனுநாஸிக்: இவைகள் ஈரமாக உள்ளன. இவைகளை எடுக்க வேண்டும்.

அனுஸ்வர்: ஏன்?

அனுநாஸிக் : சாஸ்திரம் இவ்வாறு சொல்லுகிறது....

அனுஸ்வர்: எவ்வாறு சொல்கிறது?

அனுநாஸிக்: எனக்கு ஞாபகம் இல்லை.

அனுஸ்வர்: ஞாபகம் இல்லாத சாஸ்திரமா?

அனுநாஸிக்: ஆம்.

அனுஸ்வர்: அப்படியனால்?

அனுநாஸிக் : இது சந்தேகமான விஷயம்.

அனுஸ்வர்: அப்படியானால் இது கட்டாயம் சந்தேகப்பட வேண்டிய விஷயம்தான்.

அனுநாஸிக்: சந்தேகமான விஷயமானதால் துணிகளும் அங்கேயே இருக்கட்டும்.

அனுஸ்வர்: அதுதான் சரி. அப்படியே இருக்கட்டும்.

அனுநாஸிக்: ஆனால் இந்த அடுப்பை இங்கிருந்து கட்டாயம் அகற்ற வேண்டும்.

அனுஸ்வர்: அதாவது அடுப்பின் அருகில் உள்ள எல்லாப் பொருள்களையும் இங்கிருந்து எடுத்து விடவேண்டும். இதற்கு வெகுநேரம் தேவைப்படும்.

அனுநாஸிக் : நேரம் மட்டுமல்ல. மிக்க மனோதைரியமும் வேண்டும்.

அனுஸ்வர்: மனோதைரியம் மட்டுமல்ல.

அனுநாஸிக்: ஆகையால் பாத்திரம் பண்டங்களின் மீது கைவைப்பது நமக்கு ஏற்றதல்ல.

அனுஸ்வர்: ஆமாம்....ஆமாம்...நமக்கு ஏற்றதல்ல.

அனுநாஸிக்: அடுப்பை அகற்ற வேண்டாம் என்பதில் நாம் மிக்க ஒற்றுமையாகத்தானே உள்ளோம்?

அனுஸ்வர்: அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.

(அனுநாஸிக் நாலாப் பக்கமும் பார்க்கிறான்)

அனுநாஸிக் : வேறு எதையும் ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் இல்லையே?

(அனுநாஸிக்கும் சேர்த்து நாலாப் பக்கமும் பார்க்கிறான்)

அனுஸ்வர்: வேறு எதையும் ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் இல்லை.

அனுநாஸிக்: இல்லை, ஏதோ கொஞ்சம்பாக்கி உள்ளது.

அனுஸ்வர்: என்னது? கொஞ்சம் பாக்கியுள்ளதா.

அனுநாஸிக்: இந்த இருக்கை வழிப்பாதையில் இருக்கிறது. இதை இங்கிருந்து எடுக்கவேண்டும்.

அனுஸ்வர்: நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அனுநாஸிக் : அப்படியானால்...!

அனுஸ்வர்: அப்படியானால்...

அனுநாஸிக்: அப்படியானால் இதை இங்கிருந்து எடுத்து விடவேண்டும்.

அனுஸ்வர்: ஆம். எடுத்து விடவேண்டும்.

அனுநாஸிக்: ஆகவே....

அனுஸ்வர்: ஆகவே...

அனுநாஸிக் : ஆகவே நீ எடுத்துவிடு.

அனுஸ்வர்: நானா ?

அனுநாஸிக்: ஆமாம்.

அனுஸ்வர்: நீ இல்லையா?

அனுநாஸிக்: இல்லை!

அனுஸ்வர்: ஏன்?

அனுநாஸிக் : இதற்கு எந்தப் பதிலும் இல்லை.

அனுஸ்வர்: ஆனாலும்,

அனுநாஸிக்: முதலில் நான்தான் உன்னிடம் சொன்னேன்.

அனுஸ்வர்: ஆனால் இருக்கையை நீதான் முதலில் பார்த்தாய்.

அனுநாஸிக்: அதனால்?

அனுஸ்வர்: அதனால்?

அனுநாஸிக் : எடுத்துவிடு.

அனுஸ்வர்: நீ எடுத்து விடு.

அனுநாஸிக்: அங்கேயே அது இருக்கட்டும்.

அனுஸ்வர்: அப்படியே இருக்கட்டும்.

அனுநாஸிக்: இத்தருணத்திலா ?

அனுஸ்வர்: ஆமாம். இத்தருணத்தில்.

அனுநாஸிக் : நாலாப் பக்கமும் ஒரு பார்வை பாாத்துவிடு.

(மாதுல் வேகமாக உள்ளே வருகிறான்)

மாதுல்: உங்களுடைய வேலை இங்கு முழுவதும் முடிந்துவிட்டதா?

அனுநாஸிக்: என்ன அனுஸ்வர்?

அனுஸ்வர்: ஆமாம். முடிந்துவிட்டது.முடிந்துவிட்டது அல்லவா! என்ன அனுநாஸிக்?

அனுநாஸிக் : ஆமாம்....ஆமாம்.... முடிந்துவிட்டது. ஆனால் ஒரு பார்வை மட்டும் பார்க்க வேண்டும்.

அனுஸ்வர்: ஆமாம்.....ஒரே ஒரு பார்வை மட்டும்தான் பாக்கி.

மாதுல்: அந்தப் பார்வை இருக்கட்டும். தேவி பிரியங்குமஞ்சரி வந்துவிட்டார்கள்.

அனுநாஸிக்: தேவி பிரியங்குமஞ்சரி வந்துவிட்டார்களா? அப்படியானால் கிளம்பு அனுஸ்வர்.

அனுஸ்வர்: கிளம்பு! ....

(இருவரும் ஒன்றாக வெளியே செல்கின்றனர். மாதுல் அவர்கள் பின்னால் செல்கிறான். சில வினாடிகளுக்குப் பிறகு பிரியங்குமஞ்சரிக்கு வழிகாட்டியபடியே திரும்பி வருகிறான்.

மாதுல்: இவள் இந்தப்பிரதேசத்தில் மிக்க ஒழுக்கமான, மிக்க பணிவான, மிக்க வெள்ளந்தியான பெண்....

(மல்லிகா உள்ளேயிருந்து வருகிறாள்)

வா...வா...மல்லிகா. நான் தேவி அவர்களிடம் உன்னைப் பற்றிப் புகழ்ந்து கொண்டு இருந்தேன்.

(துதிபாடும் சிரிப்பு சிரிக்கிறான்)

தேவி இங்கே வந்ததிலிருந்து உன்னைப் பற்றியே விசாரித்துக் கொண்டு இருக்கிறார்கள். இவள்தான் நம் மல்லிகா....இந்தப் பிரதேசத்தின் அரச அன்னம்...மல்லிகா...தேவி அவர்களுக்கு எந்த இருக்கையைத் தயாராக வைத்துள்ளாய்?

மல்லிகா பிரியங்குமஞ்சரிக்கு வணக்கம் செய்கிறாள். பிரியங்குமஞ்சரி புன்சிரிப்புடன் வணக்கத்தை ஏற்றுக் கொள்கிறாள்)

பிரியங்குமஞ்சரி : ஆர்ய மாதுல் அவர்களே! நீங்கள் இப்பொழுது வெளிப்புறம் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். பணியாளர்கள் நான் திரும்பும் வரை வெளியில் காத்து இருக்கட்டும்.

மாதுல்: நீங்கள் அமர இருக்கை.....!

பிரியங்குமஞ்சரி : அதுபற்றிக் கவலை வேண்டாம். எனக்கு எந்த வசதிக்குறைவும் இல்லை.

மாதுல்: கண்டிப்பாக குறை இருக்கும். ஆனால் தாங்கள் குறைகளைக் குறைகளாகக் கருதுவது இல்லை. இது வேறு விஷயம். இதன் பெயர்தான்உயர் குலத்தன்மை. உயர்ந்த குலங்களுக்கே இந்தப் பெருமைகள்.....

பிரியங்குமஞ்சரி : நீங்கள் இளைப்பாருங்கள். நான் உங்களை மிகவும் வேலை வாங்கி விட்டேன். நீங்கள் களைத்திருப்பீர்கள்...?

(குழைந்து குழைந்து சிரித்துக் கொண்டே)

மாதுல்: உங்கள் காரணமாக நானா களைத்துப் போனேன்? நீங்கள் நாள் முழுவதும் என்னை மலை முகட்டிலிருந்த பள்ளத்தாக்குவரை பள்ளத்தாக்கு முதல் மலை முகட்டு வரை ஏறி இறங்கச் சொன்னாலும் இந்த மாதுல் களைப்பு அடையமாட்டான். அவன் உடம்பு இரும்பு....தேவி...இரும்பு. தற் பெருமை இல்லை இது. எங்கள் வம்சத்திறமை மட்டும் அன்று. உடல் வலுவிற்கும் பெயர்பெற்றது. நான் ஆடு மாடுகளுக்குப் பின்னால் தினம் தினம் பத்துப் பத்து மைல்கள் சுற்றி இருக்கிறேன். ஆடு மாடு மேய்ப்பதுதான் உலகிலேயே மிகவும் கடினமான காரியம் என்பது எனது வாக்கு. எங்கேயாவது ஒரு மாடு வழி தவறி மாறிவிட்டால்....

பிரியங்குமஞ்சரி : இன்னும் உங்கள் ஆடு மாடுகள் வழி மாறி ஓடிக்கொண்டு இருக்கும். ஒரு நடை போய்ப் பார்த்து வாருங்கள்.

மாதுல்: நான் மாடு மேய்ப்பவனா? குப்த வம்சத்தோடு தொடர்பு கொண்டு மாடு மேய்ப்பதா? உண்மையில் நான் எல்லா ஆடு மாடுகளையும் விற்றுவிட்டேன். உண்மையைச் சொன்னால் இதில் இலாபம் தான்...

(பிரியங்குமஞ்சரியின் பார்வை மல்லிகாவின் பக்கம் செல்கிறது. முன்னேறி மல்லிகாவின் கைகளைத் தன் கைகளோடு இணைத்துக்கொண்டு)

மாதுல் : ஏன் என்றால்....நல்லது....நல்லது....எனக்கு உத்தரவு கொடுங்கள். வீட்டில் போட்டது போட்டபடி கிடக்கிறது. சென்று சீர் செய்ய வேண்டும். சரி....பணியாளர்கள் தங்களை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள். மல்லிகா! தேவியை அமர வை. இல்லாவிட்டால் இவர்கள் நின்று கொண்டே இருப்பார்கள். நல்லது, நான் சென்று வருகிறேன். ஏதாவது கட்டளை இருந்தால் சொல்லி அனுப்புங்கள்.

பிரியங்குமஞ்சரி : நீங்கள் செல்லலாம். இங்கு என்னைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டாம்.

மாதுல்: நல்லது...நல்லது.

(சென்று கொண்டே)

எனக்கு என்ன கவலை! கவலைப்பட இங்கு மல்லிகாவும் அம்பிகாவும் உள்ளனர். இருந்தாலும்...ஏதாவது தேவைப் பட்டால் சொல்லி அனுப்புங்கள்.

(சென்று விடுகிறான். பிரியங்குமஞ்சரி வினாடிநேரம் மல்லிகாவைப் பார்த்து அவள் முகவாயைத் தன் கையினால் தொட்டு)

பிரியங்குமஞ்சரி : உண்மையிலேயே நீ மிக்க அழகுதான். முன்பின் அறியாவிட்டாலும் நீ எனக்குப் பரிச்சயம் அற்றவள் போல் தோன்றவில்லையே?

மல்லிகா: நீங்கள் உட்காருங்களேன்.

பிரியங்குமஞ்சரி : நான் அமர விரும்பவில்லை. நான் உன்னையும் உன் வீட்டையும் பார்க்க விரும்புகிறேன். "அவர் அனேக தடவைகள் உன்னைப்பற்றியும் உன் வீட்டைப் பற்றியும் பேசியிருக்கிறார். "மேகதூதம்" படைக்கும் பொழுது அடிக்கடி இந்த இடத்தைத்தான் ஞாபகப்படுத்தி வந்தார்".

(நாலாப் பக்கமும் பார்த்து விட்டுத் தன் பார்வையை மல்லிகாவின் மீது பதிக்கிறாள்)

நாங்கள் செல்ல மற்றொரு வழி மிகவும் சுலபமானது. ஆனால் இந்த நிலத்தின் ஈர்ப்பு சக்தி எங்களை இந்த வழியாக இழுத்து வந்துள்ளது.

மல்லிகா : உங்களை எப்படி உபசரிப்பது என்றே எனக்குப் புரியவில்லை. முதலில் இந்த இருக்கையில் அமருங்கள். நான் தங்களுக்கு என்ன...

பிரியங்குமஞ்சரி : உபசரிப்பது பற்றி யோசிக்க வேண்டாம். நான் இங்கு உன் விருந்தினராக வரவில்லை. "அவர் இங்கு வரத்தயாராக இல்லை. நான் தான் அவரைக் கட்டாயப்படுத்தி இங்கு அழைத்து வந்தேன்''. நானும் இந்தப் பகுதியை ஒரு முறை பார்க்க விரும்பினேன். இது தவிர...

(தொண்டையிலிருந்து பாண்டித்தியம் கலந்த ஒலி கிளம்புகிறது)

இதைத்விர வேறு ஒரு கரணமும் உண்டு. இந்தப் பகுதியின் சூழ்நிலையைக் கொஞ்சம் என்னிடம் எடுத்துச் செல்லவேண்டும்.

மல்லிகா: இந்தப் பகுதியின் சூழ்நிலைகளையா?

(பிரியங்குமஞ்சரி புன்முறுவலுடன் அவளைப் பார்க்கிறாள். பின்பு ஜன்னல் அருகில் சென்று)

பிரியங்குமஞ்சரி : இங்கிருந்து எவ்வளவு தூரம் வரை இந்த மலைத்தொடர்கள் நீண்டுசெல்கின்றன!.... எவ்வளவு பரிசுத்தமான அழகு! இங்குவந்து உன்னைக் கண்டது எனக்குப் பெருமையாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது.

(மல்லிகா இரண்டு அடிகள் அவளைநோக்கி எடுத்து வைத்து)

மல்லிகா: சில நாட்கள் நீங்கள் இங்கு வந்தது எங்கள் பாக்யமாகும். இங்குச் சில வசதிக்குறைவுகள் கண்டிப்பாக இருக்கக்கூடும் ஆனால்....

(பிரியங்குமஞ்சரி மறுபடியும் பாண்டித்தியம் நிறைந்த உணர்வோடு அவளை நோக்குகிறாள்)

பிரியங்குமஞ்சரி : "இந்தக் கொள்ளை அழகிற்கு முன்னால் வாழ்க்கையின் எல்லாச் சிறப்பும் துச்சம். இந்த அழகினைக் கண்களில் படியச் செய்ய இந்த வாழ்நாட்கள் முழுவதும் போதாது".

(ஜன்னலில் இருந்து விலகி)

இங்கு உன்னுடன் சில நாட்கள் தங்கியிருக்க ஆவல்தான். ஆனால் அவ்வளவு காலம் எங்கே இருக்கின்றது? காஷ்மீர் அரசியல் நிலையற்று உள்ளது. அங்கிருந்து விலகி இருக்கும் ஒவ்வொரு நாளும் விதவிதமான பிரச்சினைகளை

தோற்றுவிக்கும். ஒரு பிரதேசத்தை அரசாட்சி செய்வது என்பது மிக்க பொறுப்பான விஷயம்.மேலும் எங்கள் மீது மிக்க பெரிய பொறுப்பு உள்ளது. ஏன் என்றால் காஷ்மீரின் அரசியல் நிலைமை இச்சமயம் மிகச் சிக்கலாக உள்ளது. அவரோ இங்குள்ள அழகைப் பற்றி மிகவும் விமர்சித்துள்ளார். ஆனால் அதைப் பார்த்து இரசிக்கும் காலம் எங்குள்ளது?

(கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு இருக்கையில் அமர்கிறாள்)

"ஆகையால்தான் உன்னைக் கண்டு போட்டியும் பொறாமையும் ஏற்படுகிறது". இந்த அழகின் இயல்பான... இயற்கையான... ஆராதனை எங்களுக்கு ஒரு கனவுதான்... நீ உட்கார்.

(இருக்கையில் தனக்கு முன்னால் அமரச் சாடை செய்கிறாள். மல்லிகா கீழே அமர அவள் மல்லிகாவைத் தடுக்கிறாள்.)

இங்கே என் அருகில் உட்கார்...!

மல்லிகா: நான் மற்ற ஒரு இருக்கையில் அமர்கிறேன்...

(மூலையில் இருக்கும் மோடாவை இருக்கையின் அருகில் நகர்த்துகிறாள். மோடாவின் மேல் உள்ள போஜ ஓலை நறுக்குகளைச் சரிப்படுத்தி தன் மடியில் வைத்து அமர்கிறாள்)

பிரியங்குமஞ்சரி: இந்தப் பகுதியில் இருப்பதினாலேயே உனக்கு இலக்கியத்தில் மிக்க ஈடுபாடு போலும்.

(மல்லிகாவின் கண்கள் கீழே தாழ்கின்றன)

மல்லிகா: இவை யாருடைய படைப்புக்கள்... எனத் தெரியுமா...? கவி காளிதாசனின் படைப்புக்கள் (பிரியங்குமஞ்சரி புருவங்கள் சற்றுச் சுருங்கி விடுகின்றன)

பிரியங்குமஞ்சரி : இப்பொழுது அவர் மாத்ருகுப்தர் என்ற பெயரினால் அழைக்கப்படுகிறார். இங்குக் கூட அவரது படைப்புகள் கிடைக்கின்றனவா?

மல்லிகா: இவைகளை நான் உஜ்ஜையினியில் இருந்து வருபவரின் மூலம் வரவழைத்துக் கொண்டேன்.

(பிரியங்குமஞ்சரின் உதடுகளில் கேலி கலந்த புன்சிரிப்பு காணப்படுகிறது)

பிரியங்குமஞ்சரி : நான் புரிந்து கொண்டேன். நீ அவரின் குழந்தைப் பருவம் தொட்டே தோழி என்று அவர் மூலம்

தெரிந்துகொண்டேன். ஆகையால் அவர் படைப்புகளின் மீது உனக்கு இவ்வளவு மோகம் இருப்பது இயல்பானதுதான்.

(ஏதோ யோசித்தபடியே மேல் நோக்கிப் பார்க்கிறாள்)

அவரும் அவ்வப்பொழுது இங்குள்ள வாழ்க்கையைப் பற்றிப் பேசிக்கொண்டே தன்னை மறந்து விடுகிறார். ஆகையால் அரசாங்க வேலைகளிலிருந்து அவர் மனம் வெறுத்து ஒதுங்கி விடுகிறது.

(அவள் பார்வை மல்லிகாவின் மீது படுகிறது)

அப்படிப்பட்ட சமயங்களில் அவர் மனத்தை இயல்பான நிலைக்குக் கொண்டு வர மிக்க கடுமையன முயற்சி செய்ய வேண்டியுள்ளது. அரசியல் இலக்கியம் இல்லை. அதில் ஒவ்வொரு வினாடியும் மிக்க மதிப்பு வாய்ந்தவை. ஏதாவது ஒரு வினாடி தடுமாறி விட்டால் மிகப் பெரிய தீங்குதான் விளைகின்றது. அரசியல் வாழ்க்கைச் சக்கரத்தைச் சரியாக இயக்க மனிதன்மிகவும் விழிப்பாக இருக்க வேண்டியுள்ளது... இலக்கியம் அவரது வாழ்க்கையில் முதற்படி. தற்பொழுது அவர் வாழ்க்கையின் இரண்டாவது படியை அடைந்து விட்டார். அவரை இந்த இரண்டாவதுபடியில் தக்க வைப்பதற்கான முயற்சியில் என்னுடைய அதிக நேரம் சென்று விடுகிறது.

(புன்முறுவல் செய்ய முயற்சிக்கிறாள்)

அரசியல் வாழ்க்கை....கவிவாழ்க்கையை விடச் சிரமமானது. இதில் மிகுந்த கவனத்துடன் செயல்படவேண்டியிருக்கிறது.

மல்லிகா: "எனக்கு அரசியல் வாழ்க்கை பற்றி ஒன்றும் தெரியாது".

பிரியங்குமஞ்சரி : ஏனென்றால் நீ இந்தப் பகுதியில் வசிப்பவளாயிற்றே?

(எழுகிறாள். மல்லிகா எழ முயற்சிக்கும் பொழுது அவள் தோளைப்பற்றி அவளை அமர வைக்கிறாள்.)

(கீழ் உதட்டைச் சற்றுக் கடித்துக்கொண்டே உலாவ ஆரம்பிக்கிறாள்)

நான்...இங்குள்ள சில சூழ்நிலைகளை என்னுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என்று உன்னிடம் சொன்னேன் இல்லையா? இதற்குக் காரணம் அவருக்கு எந்தக் குறைபாடும் ஏற்படக்கூடாது என்பதால்தான். இங்குள்ள சூழ்நிலைகளின் நுகர்ச்சி...அவருக்குக் கிட்டாததால்அவருக்கு மிகவும் விரயம் ஏற்பட்டுள்ளது. அவரும் வீணாகத் தன் தைரியத்தை இழந்து விடுகிறார். இதனால்

காலமும்...சக்தியும் வீணாகின்றன. அவருக்குக் காலம் பொன் போன்றது. அவரின் பொன் போன்ற காலம் இவ்வாறு விரயமாகக்கூடாது என்பதுதான் என் கவலை.

(மல்லிகாவின் முன் சென்று நிற்கிறாள்)

ஆகையால் இங்கிருந்து சில சூழ்நிலை நுகர்ச்சிகளை என்னுடன் எடுத்துச் செல்கிறேன். சில மான் குட்டிகளை எடுத்துச் சென்று தோட்டத்தில் வளர்ப்போம். இங்குள்ள சில மருந்துச் செடிகளைச் செயற்கை மலைப் பிரதேசங்களிலும் அருகில் உள்ள பகுதிகளிலும் பயிர் செய்வோம். இந்த மாதிரி அமைப்பு உள்ள வீடுகளை அங்குக் கட்டுவோம். மாதுல் தன் குடும்பத்துடன் வருவான். சில அனாதைக் குழந்தைகளையும் எங்களுடன் அழைத்துச் சென்று உரிய கல்வி அளிப்போம். இதனால் அவரிடம் மாறுதல் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

(உலவிக்கொண்டே அந்த அறையின் மற்ற கோடிக்குச் செல்கிறார்கள்)

பார்! உன் வீடு மிகவும் சிதைந்துள்ளது. இதைக் கண்டிப்பாக மராமத்து செய்ய வேண்டும். நீ விரும்பினல் இதைச் சீர் செய்ய ஆணை இடுகிறேன். உஜ்ஜையினியின் சிறந்த இரு கட்டிடக்கலை வல்லுனர்கள் எங்களுடன் உள்ளனர். சரியா?

(மல்லிகா எழுந்து அவளை நோக்கி வருகிறாள்)

மல்லிகா: நீங்கள் மிக்க இளகிய மனம் படைத்தவர். ஆனால் இந்த வீட்டில் இருப்பது எங்களுக்குப் பழகிவிட்டது. எங்களுக்கு எந்த வசதிக் குறைவும் இல்லை.

பிரியங்குமஞ்சரி : ஆனாலும் இந்த வீட்டை மராமத்து செய்வது நல்லதுதான். அவரின் வாழ்க்கையின் ஆரம்ப நாட்கள் இந்த வீட்டோடு சம்பந்தப்பட்டுள்ளன. மாதுல் இருந்த வீட்டை இடித்துப் புதிய மாளிகை கட்ட ஆணை பிறப்பித்துள்ளேன். உஜ்ஜையினி யிலிருந்து பளிங்குக் கற்கள் கொண்டுவந்து வேலை ஆரம்பிக்கச் சொல்லியுள்ளேன். ஆனால் இதைக் கண்காணிக்க நான் இங்குத் தங்க முடியாது. ஏன் என்றால் நாளையே நாங்கள் பயணப்பட வேண்டியுள்ளது. நீயும் எங்களுடன் வந்துவிடேன்?

(மல்லிகா தன்னை மறந்த மாதிரி பார்க்கிறாள்)

மல்லிகா: நானா?

பிரியங்குமஞ்சரி : ஆமாம். இதில் என்ன தயக்கம்? நீ இங்கே எந்தக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவள் இல்லையே?

மல்லிகா: என் தாயார் இங்குள்ளார்களே?

பிரியங்குமஞ்சரி : இதில் என்ன தயக்கம்? உன்னுடைய தாயாரும் உடன்வர ஏற்பாடு செய்துவிட்டால் போதுமானது. இங்குக் கட்டிட வல்லுனர்கள் வீட்டைச் செப்பனிடுவார்கள். அங்கு நீ என்னோடு என்னுடைய தோழியாக இருப்பாய்.

(மல்லிகாவின் முகத்தில் அடிபட்ட கர்வத்தின் சாயல் தோன்றுகிறது. ஆனால் அவள் அதை மறைத்து வைக்கிறாள்)

மல்லிகா: மன்னிக்க வேண்டுகிறேன். நாங்கள்....அப்படிப்பட்ட கௌரவத்திற்குப் பாத்திரமானவர்கள் அல்ல.

பிரியங்குமஞ்சரி : ஆனால் நீ இதற்கும் மேற்பட்ட தகுதியுள்ளவள் என்று நான் நினைக்கிறேன். நான் இங்கு வருவதற்கு முன்பு இரு அரசாங்க அதிகாரிகள் இங்கே வந்தார்களே...

(உதடுகளில் அறிவு நிறைந்த புன்முறுவல் வெளிப்படுகிறது)

நான் காரணமில்லாமல் அவர்களை இங்கு அனுப்பவில்லை. நீ அவர்களைப் பார்த்தாயா?

(மல்லிகா அவர் கூற்றின் பொருளை அறிய முயற்சி செய்து நிலையற்று அவளைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாள்)

மல்லிகா: ஆமாம்....பார்த்தேன்.

பிரியங்குமஞ்சரி: அவர்களில் யார் உனக்குத் தகுதி என்று நீ நினைக்கிறாயோ அவரை நீ திருமணம் செய்து கொள்ளலாம். இருவருமே தகுதி வாய்ந்த அதிகாரிகள்தான்.

மல்லிகா: தேவீ....!

(போஜ ஓலை நறுக்குகளைத் தன் மார்போடு அணைத்துச் சில அடிகள் இருக்கையை நோக்கி நகருகின்றாள். பிரியங்குமஞ்சரி அவளை நேராகப் பார்த்துக்கொண்டே மெதுவாக அவள் அருகில் செல்கிறாள்)

பிரியங்குமஞ்சரி : ஒருவேளை நீ இந்த இருவரையும் தகுதியற்றவர்களாக நினைக்கலாம். அரசாங்கத்தில் இந்த இருவர் மட்டும் அன்றி மேலும் அனேக அதிகாரிகள் உள்ளனர். நீ யாரை விரும்புகிறாயோ...

(மல்லிகா இருக்கையில் அமர்ந்துகொள்கிறாள். தழுதழுத்தத் தொண்டையுடன் தன் உதடுகளைக் கடித்துக்கொள்கிறாள்)

மல்லிகா: இனி இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதைத் தயவு செய்து நிறுத்தி விடுங்களேன்.

(தழுதழுத்தத் தொண்டையின் காரணமாகச் சொற்கள் சரியாக எழாமல் இருக்கின்றன. உள் கதவு திறக்கிறது. அம்பிகா நோயும் ஆவேசம் காரணமாக ஒடுங்கிய உடலுடன நடுநடுங்கியபடியே வெளியே வந்து தன்னைச் சரிப்படுத்தி நிற்கிறாள்)

பிரியங்குமஞ்சரி : ஏன்? உன் மனத்தில் தனக்கென்று வீடு வாசல் குழந்தை வேண்டும் என்ற கற்பனை இல்லையா?

(அம்பிகா மெதுவாக அவர்கள் அருகில் செல்கிறாள்)

அம்பிகா: இல்லை....இவள் மனத்தில் இந்த விதமான கற்பனைகளே இல்லை.

(பிரியங்குமஞ்சரி சுற்றி வந்து அவளைப் பார்க்கிறாள். மல்லிகா தடுமாற்ற உணர்வுகளுடன் எழுந்து விடுகிறாள்)

மல்லிகா: அம்....மா?

அம்பிகா : இவள் மனத்தில் இந்தவிதக் கற்பனை இல்லவே இல்லை. ஏன் என்றால் இவள் உணர்வு மயமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கிறாள். இவளுடைய அந்த உணர்வு மற்றொரு உணர்வை தனதாக்கிக் கொண்டது.

(மூச்சு இரைப்பதினால் சொற்கள் தொண்டையை அடைத்து விடுகின்றன. மல்லிகா கையில் உள்ள ஓலை நறுக்குகளை இருக்கை மேல் வைத்துவிட்டு அம்பிகாவைப் பின்புறமாக தாங்கிக் கொள்கிறாள்)

மல்லிகா: நீ ஏன் எழுந்து வந்தாய்? உனக்கு உடம்பு சரியில்லை. போ... உள்ளே போய் படுத்துக்கொள்.

(அவளை உள்ளே அழைத்துச் செல்ல விரும்புகிறாள். ஆனால் அம்பிக அவள் கைகளைத் தன் முதுகிலிருந்து எடுக்கிறாள்)

அம்பிகா : நான் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளிடம்கூடப் பேசக்கூடாதா? பல நாட்கள்....மாதங்கள்...வருடங்கள் நான் புழுங்கிப் புழுங்கியே சென்று விட்டன. எனக்கு இது வீடில்லை. எமன் வாழும் இருட்டுக்குகை. இதில் நான் எப்பொழுதும் அடைபட்டுக் கிடக்கிறேன். ஆனால் நான் எவருடனும் பேசக்கூடாது என்று நினைக்கிறாயா?

(செல்லும் முயற்சியில் தடுமாறிக் கீழே விழும் சமயம் மல்லிகா அவளைப் பிடித்துக்கொள்கிறாள்)

மல்லிகா: ஆனால் அம்மா....உனக்கு உடம்பு சரியில்லை.

அம்பிகா : "உன்னைக் காட்டிலும் நான் சௌக்கியமாக உள்ளேன்".

(பிரியங்குமஞ்சரி அருகில் சென்று தலை முதல் கால் வரை ஏற இறங்கப் பார்க்கிறாள்.

அரச மருமகளே! இந்த வீடு எப்பொழுதுமே இந்த மாதிரி இருந்ததில்லை. என் கை கால் இருந்த வரை இதைத் தினமும் துடைத்து மெழுகிச் சுத்தம் செய்து வந்தேன். இங்கு உள்ள ஒவ்வொரு பொருளும் நிலைதடுமாறி இருந்ததில்லை. ஆனால் இன்று தாயும் மகளும் இடிந்தமாதிரி விழுந்து கிடக்கிறோம். இவை எல்லாம் எதன் காரணமாக... என்று தெரியுமா?

(மூச்சு இரைப்பதால் மேலே பேச முடியவில்லை. பிரியங்குமஞ்சரி அறையைப் பார்க்கும் சாக்கில் அவளை விட்டு விலகிச் செல்கிறாள்)

பிரியங்குமஞ்சரி : இந்த வீட்டின் நிலைமை சரியில்லை என்பதை நான் பார்க்கிறேன். மல்லிகா என்னுடன் வந்துவிட்டால் சிக்கல்கள் தனக்குத்தானே அவிழ்ந்து விடும். ஆனால் இப்பொழுது....

(உதட்டினைக் கடித்துக் கொண்டே சில வினாடி யோசிக்க நின்று விடுகிறாள்)

இப்பொழுது எது முடியுமோ அதைச் செய்து விடுகிறேன். கட்டிட வல்லுனர்களை அழைத்து ஆணையிடுகிறேன். அவர்கள் இந்த வீட்டை இடித்து அந்த இடத்தில்....

(மல்லிகா திடுக்கிட்டு விடுகிறாள்)

மல்லிகா: அவ்வாறு செய்யாதீர்கள். இந்த வீட்டை இடிக்க ஆணை இடாதீர்கள்.

(பிரியங்குமஞ்சரி நேராகவே அவளைப் பார்க்கிறாள்)

பிரியங்குமஞ்சரி : உன் வசதிக்காகத்தான் சொல்கிறேன். உனக்குப் பிடிக்க வில்லை என்றால்....சரி...விட்டுவிடு. நான் வீட்டை இடிக்க ஆணை இடமாட்டேன். ஆனாலும் உனக்காக ஏதாவது செய்யவிரும்புகிறேன். இச்சமயம் நான் இங்குத் தங்க இயலாது. நாளை பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அவர் மலை முகடுகளை நோக்கிச் சென்றுள்ளார். நான் இங்கு

வரக் கட்டாயம் விரும்பினேன். ஆகையால் இந்த இடைவெளி நேரத்தில் இங்கு வந்தேன். நல்லது....!

(மல்லிகாவின் விரல்கள் பின்னிக் கொள்கின்றன. கண்கள் தானே குனிந்து கொள்கின்றன. அம்பிகா ஆவேசமாக இரண்டு அடிகள் பிரியங்குமஞ்சரியை நோக்கி எடுத்து வைக்கிறாள்)

அம்பிகா : அரச மருமகளே! நான் உன்னிடம் கொஞ்சம் பேச விரும்புகிறேன். நாங்கள்....நாங்கள்....

(இருமல் வெளிப்படுகிறது. இருமலில் அவள் சொற்கள் புதைந்துவிடு கின்றன. பிரியங்குமஞ்சரி வெளியில் சென்றவள் திரும்பி அவளிடம் வருகிறாள்).

பிரியங்குமஞ்சரி : நான் உங்கள் சிரமத்தை உணர்கிறேன். என்னால் எது முடியுமோ அதைக் கண்டிப்பாகச் செய்கிறேன். இச்சமயம் பணியாளர்கள் என்னை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள்.... ஆகவே...

(அழுத்தமும் அமைதியும் கலந்த புன்முறுவலுடன் மல்லிகாவைப் பார்த்துத் தலையை அசைத்து விட்டுச் சென்று விடுகிறாள். ஆவேசத்தின் காரணமாக ஒடுங்கியவாறு மல்லிகாவை அம்பிகா பார்க்கிறாள். கீழே விழும் நிலையில் இருக்கையில் அமர்கிறாள். கீழே கிடந்த ஓலை நறுக்குகளை எடுத்து மல்லிகாவிடம் நீட்டுகிறாள்).

அம்பிகா: இந்த மேக தூதத்தின் வரிகளைப்படி. இதில்தானே அவர் மனத்தின் மென்மை வழிந்தோடுகிறது? இன்று இந்த மென்மையின் மற்றொரு உருவத்தைப் பார்த்தாயா?

(மல்லிகா ஏமாற்றப்பட்ட மாதிரி அவளைப் பார்த்தவாறே இருக்கிறாள்).

இன்று அவன் உன் உணர்வுகளுக்கே விலை பேசவிரும்புகிறான். ஏற்றுக்கொள்வதுதானே? வீடும் மராமத்து செய்யப்படும். உனக்கும் அங்குப் பணிப் பெண் பதவியும் கிடைத்துவிடும். உனக்கு இதைவிட வேற என்ன சௌபாக்கியம் கிடைக்கக்கூடும்?

மல்லிகா: அரச குமாரியின் வாழ்க்கை நோக்கே அலாதியானது. அதற்கு மற்றவர் எப்படி பொறுப்பாளி ஆக முடியும்?

அம்பிகா: ஆனால் அரசகுமாரி இங்கு வருவதற்கு முன்னால் யார் பொறுப்பாளி? நூற்றுக்குநூறு அவன், அவன் விருப்பப்படியேதான் இங்கு வந்துள்ளாள். கட்டிட வல்லுனர்கள் மராமத்து செய்து

விடுவார்கள். தன் அரசியல், பணச்செல்வாக்கை வெளிப்படுத்து வதற்கு இதை விட ஒரு நல்ல சந்தர்ப்பம் அவளுக்கு எப்பொழுது கிட்டும்?

மல்லிகா: ஆனால் அம்மா....

அம்பிகா: அம்மாவிற்கு ஒன்றும் தெரியாது. ஒன்றும் புரியாது. உணர்வின் அடித்தளத்தை எட்ட இயலாது. அவள் ஒரு ஜடம். அம்மா....

(இருமல் காரணமாக மேலே பேச முடியவில்லை. விலோம். வெளியில் இருந்து வருகிறான்)

விலோம் : இந்த மாதிரி நீ ஏன் சோர்ந்து விடுகிறாய். இன்று இந்தக் கிராமம் முழுவதுமே உன்னைக் கண்டு பொறாமைப்படுகிறது.

(மல்லிகாவைப் பொருள் பொதிந்த பார்வையினால் பார்க்கிறான். அவன் பார்வையைப் பார்க்க இயலாமல் மல்லிகா கண்ணைத் தாழ்த்திக் கொள்கிறாள்.

அரசாங்கப் பாதமலர் பதிந்ததன் காரணமாக இவர்கள் உன்னை மிக்க கௌரவசாலியாக நினைக்கிறார்கள். இந்தப் பொன்னான வாய்ப்பு எல்லோருடைய வாழ்க்கையிலும் கிட்டுவதில்லை.

அம்பிகா: இந்தப் பொன்னான வாய்ப்பைத் தரிசிக்கத்தானே நான் இந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கிறேன். இவ்வளவு பெரிய பாக்கியம் இந்த அற்பமான வாழ்க்கையில் எப்படி பொருந்தும்

(எழுந்து நின்று)

வா! எனக்கு எவ்வளவு பெரிய பாக்கியம் கிடைத்துள்ளது என்று இந்தக் கிராமம் முழுவதும் பறை சாற்றிவிட்டு வருகிறேன். எங்களுடைய வருடக்கணக்கான தரித்திரமும் வருத்தமும் எவ்வளவு பெரிய நற்பயனை அளித்துள்ளன! அரசாங்கக் கட்டிட வல்லுனர்கள் எங்கள் வீட்டை மராமத்து செய்து விடுவார்கள்!

விலோம் : இந்தக் கிராமத்தில் உன் பேச்சைக் கேட்க யாரும் தயாராக இல்லை.

(சிறிது உலாவியபடியே ஜன்னலுக்கு அருகில் செல்கிறான்).

இன்று இந்தக் கிராமமே மும்முரமாக இருக்கிறது. இங்கு வந்த விருந்தினர்களைக் கவனிக்கப் பலவிதமான பொருட்கள் சேகரிக்க வேண்டி உள்ளது. விருந்தினர் இங்குள்ள கற்களைக் கூட விட்டுவைக்காமல் எல்லாவற்றையும் தங்களுடன் எடுத்துச் செல்ல விரும்புகின்றனர். இன்று இங்குள்ள கற்களுக்கும் மிக்க மதிப்பேறி விட்டது.

மல்லிகா: ஆர்ய விலோம்! முன்பிருந்தே இங்குள்ள கற்கள் மிக்க மதிப்பு உள்ளவை. ஆனால் ஒன்று! யாரும் இது வரை இதன் மதிப்பை உணரவில்லை.

(அம்பிகா ஆவேசமாக அவளை நோக்கி முன்னேறுகிறாள்)

அம்பிகா: நீ போய்தான் பொறுக்கிக் கொள்ளேன்? ஏன் என்றால் இங்கு உள்ள மக்கள் இந்தக் கற்களை விட்டுவைக்க மாட்டார்கள். அப்பொழுது உணர்வுகளுக்கு எந்த அடித்தளமும் இல்லாமல் போய் விடும்!

மல்லிகா: அம்மா! உட்கார். உனக்கு உடம்பு சௌகரியம் இல்லை.

(அவள் தோள்களைப் பிடித்து இருக்கையில் அமர வைக்கிறாள்)

விலோம் : இந்தக் கிராமத்தின் நாலாப் பக்கமும் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. இந்தநாள் அவர்கள் வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய திருநாள். மக்கள் தம் ஆடு மாடுகளைக் கவனியாமல் விருந்தினர்களுக்கு உபசரிக்க மும்முரமாக ஏற்பாடு செய்கின்றனர். அவர்கள் திரட்டும் பொருள்களில் மான்குட்டிகளும் அடக்கம். ஏனென்றால் அவைகள் அரசகுமாரியின் விசேஷக் கட்டளையினால் பிடிக்கப்படுகின்றன.

மல்லிகா: இது உண்மை இல்லை.

விலோம் : உண்மையில்லையா? அரசகுமாரி இந்திரவர்மாவிற்கும் விஷ்ணுதத்தனுக்கும் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அவர்கள்....

மல்லிகா: இந்த ஆணைக்கு வேறுபொருள் இருக்கலாமே?

விலோம் : வேறுபொருளா? வேறு என்ன பொருள் இருக்கக்கூடும்? அரசகுமாரி மான்குட்டிகளுடன் விளையாடுவார்களா அல்லது உஜ்ஜையினியில் உள்ள கலைஞர்கள் அதன் வடிவம்தான் சமைப்பார்களா? அரச குடும்பத்துடன் இங்கு வந்துள்ள கலைஞர்கள் இங்குள்ள ஒவ்வொரு பொருளின் வடிவத்தையும் நகல் எடுப்பது விநோதமான விஷயம். இங்குள்ள மரம், செடி, கொடி.... அவர்கள் நகல் எடுத்துச் செல்லாத எந்தப் பொருளும் இருக்காது என நினைக்கிறேன்.

மல்லிகா: இதற்கு மேலும்.... வேறு ஒரு பொருள் இருக்கலாம்... இல்லையா?

(விலோம் ஜன்னலை விட்டு விலகி அவளை நோக்கி வருகிறான்)

விலோம் : இதற்கு மேலும் வேறு ஒரு பொருள் இல்லை என்று நான்

எப்பொழுது சொன்னேன்? இதன் பொருள் விளக்கமாகவே உள்ளது. அவர்கள் இங்கு உள்ள ஒவ்வொரு பொருளையும் சிறப்புக் கண்ணோட்டத்தோடு பார்க்கின்றனர். இந்தச் சிறப்புகளை இங்கிருந்து சென்று மற்றவர்களுக்கும் காண்பிக்க விரும்புகின்றனர். நீ, நான், இந்த வீடு, இந்த மலை எல்லாமே அவர்களுக்கு விசித்திரமாகவும் சிறப்பாகவும் தோன்றுகின்றன. அவர்களின் கூர்மையான பார்வையால் இங்குள்ள சிறப்புகளை மட்டுமன்று. அங்குள்ள சிறப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். ஆகவே அவர்களின் பார்வையின் கூர்மையின் திறனைப் புகழத்தான் வேண்டும். ஒரு கலைஞர் இங்குள்ள வெயிலின் ஒளியில் தன்னுடைய நிழலின் நகலை எடுப்பதைப் பார்த்தேன்.

அம்பிகா: இங்குள்ள வெயிலின் ஒளியில் அவர்களின் நிழல்கள் கண்டிப்பாக மாறுபட்டுத்தான் இருக்கும்!.... அந்த அரக்கி யார்? எந்த உயிரினத்தைத் தன் நிழலில் பிடிக்க விரும்புகிறாள்?

(பேசும் பொழுது அவள் மூச்சு இரைக்கிறது)

இன்று நான்...இன்று நான்...அந்த அரக்கியாக மாறி.... அதன் மூலம்....

(இருமல் காரணமாகச் சொற்கள் வெளிவரவில்லை. மல்லிகா அவளின் தோள் மீது கை வைத்து அணைத்தவாறே)

மல்லிகா: அம்மா...நீ ஓய்வு எடுத்துக்கொள். அதிகமாகப் பேசாதே. ஆர்ய விலோம்! அம்மாவின் உடம்பு சரியில்லை. ஆகவே அவர்களை ஓய்வு எடுக்க விடுங்களேன்.

விலோம் : சரி. அம்பிகாவை உள்ளே அழைத்துச் செல். இந்தக் கிராமத்தில் இந்த விழாக் கோலாகலம் அம்பிகாவின் மனத்தை அமைதி இழக்கச் செய்யும். நான் திருவிழா பற்றிச் சொல்லத்தான் வந்தேன். காளிதாஸ் இங்கு வருவது நல்லது அல்ல என்று நினைக்கிறான். இது ஒரு வியக்கத்தக்க விஷயமாகும். நீ கேள்விப் பட்டாயா? அவர்கள் நாளை இங்கிருந்து சென்று விடுவார்கள்.

அம்பிகா: அவன் இங்கு வர விரும்பவில்லை. அம்பிகா இன்னும் இறக்க வில்லை என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்.

விலோம் : ஆனால் அவன் கட்டாயம் இங்கு ஒரு தடவை வருவான். அவன் கட்டாயம் வர வேண்டும். மனிதன் தன் தொடர்புகளை இவ்வாறு ஒரேடியாக உதறித் தள்ள முடியாது.

(மறுபடியும் உலாவிக் கொண்டு ஜன்னல் அருகில் செல்கிறான்)

முக்கியமாக அவன் ஒரு மென்மையான கவி இருதயம் கொண்டவன். நீ என்ன நினைக்கிறாய்? அவன் ஒருதடவை இங்கு வரவேண்டும்.

மல்லிகா: ஆர்ய விலோம் கை எடுத்து வணங்குகிறேன். அம்மாவை ஓய்வு எடுக்க விடுங்கள். உங்கள் பேச்சினால் அம்மாவின் மனது சோர்ந்து விடுகிறது.

விலோம் : என் வார்த்தையினால் அம்பிகாவின் மனது சோர்ந்து விடுகிறதா? எக்காரணங்களனால் அவள் மனம் சோர்ந்து விடுகிறது என்று அம்பிகவிற்குத் தெரியும்.

(ஜன்னல் வழியாக வெளிப்பகுதியைப் பார்க்கிறான்)

எனக்கும் அக்காரணங்கள் புரியும். ஆகையால் அம்பிகாவின் மனத்தில் உள்ள பல விஷயங்களை நான் வாய் விட்டுச் சொல்லி விடுகிறேன்.

(திரும்பி மல்லிகாவைப் பார்க்கிறான்)

நான் இங்கு இருப்பது உனக்கு உருத்துகிறது என்று எனக்கு நன்றாகத் தெரியும். இது ஒன்றும் எனக்குப் புதியது அல்ல. ஆனாலும் இன்னும் சிறிது நேரம் இங்கு இருக்க விரும்புகிறேன்.

(மறுபடியும் வெளிப்புறம் பார்க்கிறான்)

மலைமுகட்டை நோக்கி ஒரு குதிரை வீரன் செல்லுவதைப் பார்க்கிறேன். இத்தடவை ஒருவேளை அவன் இங்குச் சிறிது நேரம் தங்க வாய்ப்பு உண்டு. அத்தருணம் நானும் அவன் ஷேமலாபங்களை விசாரித்து விடுகிறேன். நானும் அவனும் பழைய நண்பர்கள்.

(மல்லிகா மிகவும் கோபப்படுகிறாள்)

மல்லிகா: இந்த நிலைமையில் நீங்கள் இங்கு இருப்பது எப்படிப் பார்த்தாலும் சரி இல்லை. நீங்கள் அவரைப் பார்க்க விரும்பினால் அதற்கு இந்த இடம் ஏற்றதல்ல.

(விலோம் முன் மாதிரியே வெளிப்பக்கம் பார்க்கிறான்)

விலோம் : இந்த இடத்தில் என்ன தவறு? அவன் சென்ற சமயம் நாம் அவனை இந்த இடத்தில் தான் சந்தித்தோம். பல வருடங்களுக்கு பிறகு அதே இடத்தில் மறுபடியும் சந்திப்பதால் இந்த நீண்ட இடைவெளியின் உணர்வு ஏற்படாது.

(மல்லிகா அவன் அருகில் சென்று அவனைக் கைகளினால் பிடித்து ஜன்னலை விட்டு விலக்க விரும்புகிறாள்.

மல்லிகா: மறுபடியும் கை எடுத்து வணங்குகிறேன். நீங்கள் இங்குத் தங்கவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்காதீர்கள்.

(விலோம் தன் இடத்தில் இருந்து கொஞ்சம் கூட அசையாமல் இருக்கிறான். தொலைவிலிருந்து குதிரைக் குளம்பின் ஒலி கேட்கிறது)

நான் தங்களை இருகரம் கூப்பி வேண்டுகிறேன்...நீங்கள் சென்று விடுங்கள். இது என் வீடு. நீங்கள் இச்சமயம் இங்கு இருப்பதை நான் விரும்பவில்லை.

(விலோம் மறுபடியும் அங்கேயே நிற்கிறான். குதிரையின் குளம்பொலிஅருகில் கேட்கிறது. மல்லிகா அங்கு இருந்து நகன்று அம்பிகாவின் அருகில் செல்கிறாள்)

அம்மா! இவரை இங்கிருந்து போகச்சொல். ஏதாவது எதிர்பாராத நிகழ்ச்சி இங்கு நடப்பதை நான் விரும்பவில்லை. உனக்கு உடம்பு சரியில்லை. உன் உடம்பைப் பாதிக்கும் எந்த ஒரு செயலும் இங்கு நடக்க நான் விரும்பவில்லை.

(அம்பிகா மரத்துபோன கட்டை மாதிரி மல்லிகா அசைக்க அசைந்து கொடுக்கிறாள். கோபத்தினால் புருவம் மேல் நோக்கி உள்ளது. கண்கள் இமைக்க மறந்து எதிரே பார்க்கின்றன. குதிரைக் குளம்பின் ஒலி மிக்க அருகில் கேட்கிறது. மல்லிகா மறுபடியும் விலோம் அருகில் செல்கிறாள்)

மல்லிகா: ஆர்ய விலோம், தயவு செய்து இங்கிருந்து சென்று விடுங்கள். உங்களுக்குப் புரியாது...

(குதிரைக்குளம்பின் ஒலி அருகில் வந்து தூரச் சென்று விடுகிறது. மல்லிகா மரத்த மாதிரி நிற்கிறாள். விலோம் மெதுவாகத் திரும்பி அவளைப் பார்க்கிறான்)

விலோம் : நான் போகிறேன்.

(தொண்டையிலிருந்து கேலி ஒலி வெளிப்படுகிறது)

என்னால் இங்கு எதிர்பாராத நிகழ்வு நடக்க நான் விரும்பவில்லை. ஆனால் என்ன எதிர்பாராத நிகழ்வு நடந்துவிடும்? நான் அறியலாமா?

(ஜன்னலை விட்டு விலகி அறையின் நடுப்பகுதிக்கு வருகிறான்)

ஏன் அம்பிகா! நான் இங்கு இருப்பதினால் என்ன எதிர்பாராத நிகழ்வு நடந்துவிடும்?

அம்பிகா: எனக்குத் தெரியும். இன்று அல்ல...அன்று முதலே நன்றாகத் தெரியும். அவன் இங்கு வந்தால் மிக்க ஆச்சரியமாக இருக்கும். அவன் வராதது ஒன்றும் ஆச்சரியமானது அல்ல.

(அவளின் குரல் மேல் ஸ்தாயில் ஒலிக்கிறது. மல்லிகா தன் வலிமை முழுவதும் இழந்தமாதிரி மெதுவாக இருக்கையில் அமர்கிறாள்) இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இவனைப் பற்றி நான் சரியாக நினைத்தது பற்றி எனக்கு மகிழ்ச்சி. வாழ்க்கை ஒரு உணர்வு! மென்மையான உணர்வு! மிக மிக மென்மையான உணர்வு!

விலோம் : எனக்கு மிக்க வருத்தம். வருடக்கணக்காக இந்த நாளைத் தான் எதிர்பார்த்து, எனது நட்பின் மீதும் எனக்கு மிக்க நம்பிக்கை இருந்தது....

(பொருள் பொதிந்த பார்வையினால் மல்லிகாவைப் பார்க்கிறான்)

ஆனால் இன்று அந்த நம்பிக்கை பொய்த்துவிட்டது. அந்த நட்பு ஒருவேளை ஒரு தலைப்பட்சமாக இருந்தது போலும்! அவன் நம்மைத் தன் நட்புக்குத் தகுதி உள்ளவனாகக் கருதவில்லை. தகுதி தன் தகுதிக்கு ஏற்பதான் நட்புக்கொள்ளும்.

(மல்லிகா திடீரென்று எழுகிறாள். அவள் கண்களில் நிராசையின் இறுக்கம் ஒளிர்கிறது)

மல்லிகா: ஆர்ய விலோம்!

(குழந்தையுடன் விளையாடுவது மாதிரி பார்வை பார்க்கிறான்)

நீங்கள் தயவு செய்து இங்கிருந்து போய் விடுங்கள். இல்லாவிட்டால் கண்டிப்பாக ஒரு எதிர்பாராத நிகழ்வு நடந்து விடும்.

விலோம் : அப்படியா ?

(புன்சிரிப்போடு அம்பிகாவைப் பார்க்கிறான்)

அப்படியானால் நான் கட்டாயம் செல்லத்தான் வேண்டும்....நல்லது. அம்பிகா! உன் உடல்நலம் பற்றி எனக்கு மிக்க வருத்தமாக உள்ளது. முடிந்தவரை நெய்யும் தேனும் சாப்பிடு. நான் இப்பொழுதுதான் புதிய தேன் எடுத்து வந்திருக்கிறேன்.... தேவைப்பட்டால் உனக்கும்...

மல்லிகா: எங்களுக்குத் தேன் ஒன்றும் தேவைப் படவில்லை. வீட்டில் அதிகமாகவே தேன் உள்ளது.

விலோம் : அப்படியா? மிக்க நல்லது அம்பிகா.

(வினாடி நேரம் இருவரையும் பார்த்துவிட்டுச் செல்லுகிறான். வாசல் வரை சென்று மறுபடியும் நின்று கொண்டு)

எப்பொழுதுதாவது தேன் தேவைப்பட்டால் தயங்காமல் சொல்லி அனுப்பு.

(சென்று விடுகிறான். மல்லிகா வினாடி நேரம் தலை குனிந்து நிற்கிறாள். பின்பு தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளே சென்று விடுகிறாள். அம்பிகாவின் உணர்வு ஆவேசமாக மாறிப் பின்பு நிராசையாக மாறிப் பின் இறுக்கமாக மாறுகிறது)

அம்பிகா: மல்லிகா!

(மல்லிகா நின்று விடுகிறாள். ஆனால் பதில் கூறாமல் கைகளினால் முகத்தை மூடிக்கொள்கிறாள். அம்பிகா மெதுவாக எழுந்து அவள் அருகில் வந்து அவளை அணைத்துக் கொள்கிறாள். மல்லிகாவும் அம்பிகாவின் மார்பில் தன் முகத்தைப் பதித்துக் கொள்கிறாள்.

(அழுகையினால் அவள் உடம்பு முழுவதும் நடுங்குகிறது. தொண்டையிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. அம்பிகாவின் கண்களில் கண்ணீர். அவளின் நடுங்கும் உடலைத் தன் கைகளினால் அணைத்து முதுகை மெதுவாகத் தடவிக் கொடுக்கிறாள். பின் தன் உதடுகளாலும் கன்னங்களினாலும் மல்லிகாவைக் கொஞ்சத் தொடங்குகிறாள்)

அம்பிகா : இன்னுமா அழுகிறாய்? அவனுக்காகவா? எவன் உன்னை...?

மல்லிகா : 'அவரைப் பற்றி ஒன்றும் சொல்லாதே'.... அம்மா.... ஒன்றும் சொல்லாதே....

(விம்ம ஆரம்பிக்கிறாள். அம்பிகா அவளைத் தாங்கி அங்கேயே அமர வைக்கிறாள். தேம்பும் அவள் முதுகுப்புறம் குனிந்து கொள்ளுகிறாள்)

அங்கம் மூன்று

(சில வருடங்களுக்குப் பிறகு)

(மழை... இடியின் சப்தம். திரை இழுக்கப்படுகிறது. அதே அறை. ஒரு விளக்கு மட்டும் எரிகிறது. அறையின் நிலைமை முன்பைவிட மிகவும் மாறுபட்டு இருக்கிறது. எல்லாம் ஜீரணித்த நிலையில் சிதறிக் கிடக்கின்றன. ஒரே ஒரு குதிர் மட்டும் உள்ளது. அதன் ஒரு பக்கம் உடைந்து காணப்படுகிறது. இருக்கை தன் இடத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதில் இப்பொழுது புலித்தோல் விரித்து இல்லை. சுவர்களில் உள்ள ஸ்வஸ்திக் போன்ற அடையாளங்கள் முற்றிலும் நிறம் மங்கிக் காணப்படுகின்றன. அடுப்படியில் ஓர் இரு பாத்திரங்கள் மட்டுமே உள்ளன. அதில் கரி படர்ந்து காணப்படுகிறது. ஒரு மூலையில் அழுக்கான கிழிந்த துணிகள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. அறையில் ஒருவரும் இல்லை. மாதுல் ஈரத்துணிகளுடன் ஊன்றுகோலின் உதவியுடன் வருகிறான். நான்கு பக்கமும் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சு விடுகிறான். மறுப்பு தெரிவிக்கும் விதத்தில் தலையை அசைத்துவிட்டு அறையின் நடுப்பகுதிக்கு வருகிறான்.)

மாதுல் : மல்லிகா!

(மல்லிகாவின் குரல் உள்ளே இருந்து வருகிறது.)

மல்லிகா: யார் அது?

மாதுல் : நான்தான் மாதுல். மழை என்னை எந்த நிலைக்கு கொண்டுவந்து விட்டது பார்!

(தலையிலிருந்தும் துணிகளில் இருந்தும் தண்ணீரைப் பிழிந்து எடுக்கிறான். மல்லிகா உள்ளே இருந்து வருகிறாள். அவள் ஆடைகள் கிழிந்தும், சாயம் போனதாகவும் காணப்படுகின்றன. அவள் கண்களில் உணர்வுகள் கூட விசித்தரமாக உள்ளன. அவளுடைய ஆளுமையும் கூட அந்தக் கறைபோல் ஜீரணித்துக் காணப்படுகிறது. கதவுகளைத் திறந்தவுடன் உள்ளே காணப்படும் பாகத்தில் முன்பு கட்டில் இருந்த இடத்தில் ஒரு உடைந்த தொட்டில் காணப்படுகிறது. மல்லிகா வெளியே வந்து கதவுகளைச் சாற்றி விடுகிறாள்)

மல்லிகா : ஆர்ய மாதுல், நீங்கள் இந்தக் கொட்டும் மழையிலா?

மாதுல் : மழையிலிருந்து தப்பிக்க உன் வீட்டைத் தவிர எந்தப் புகலிடமும் கிடையாது. நினைத்தேன்... எது எப்படி இருந்தாலும் மாதுலுக்கு இன்றும் நீ அதே மல்லிகாதான்...! அதான் உடனே வந்துட்டேன்.

இந்த ஆடிக் காலத்துப் பருவ மழை எனக்கு ஏளனமாக இருக்கிறது. முன்பு என் இரு கால்களினால் நடந்தபொழுது பேய் மழையைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட்டதில்லை. இன்று நிலை வேறு. ஊன்றுகோலை முன் வைக்கும் சமயம் கால் பின்னால் வழுக்குகிறது. காலை முன்னால் வைக்கும் சமயம் ஊன்றுகோல் பின்னால் வழுக்குகிறது. அரண்மனைக்குச் சென்று காலை உடைத்துக் கொள்வேன் என்று முன்னமே தெரிந்து இருந்தால் ஒரு பொழுதும் இந்தக் கிராமத்தை விட்டுச் சென்று இருக்க மாட்டேன். அவர்கள் கிருபையினால் என் வீடும் தலைகீழாக மாறி உள்ளது. காலைக் கீழே ஊன்றவே முடியவில்லை. அந்த வழவழப்பான கல் தரையைக் காட்டிலும் இந்த மண் தரையே மேல். ஏன் என்றால் மண்தரையில் கால்களுக்குப் பிடிப்பு இருந்தது. ஆனால் இன்று எனக்கு வீடு இருந்தும் வீடு அற்றவனாக உள்ளேன். அந்த வெண்மையான பளிங்குக் கற்களை பார்த்த மாத்திரத்திலேயே எனக்கு அரண்மனை ஞாபகம் வந்து விடுகிறது. அரண்மனையில் வசித்துதான் ஒரு காலை உடைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

மல்லிகா : நிற்கத் தங்களுக்குக் கடினமாக இருக்கும். இந்த இருக்கையை எடுத்துக் கொள்ளுங்கள்.

(மாதுல் இருக்கையில் அருகில் சென்று ஊன்றுகோலைக் கீழே வைத்து நன்றாக சம்மணமிட்டு உட்காருகிறான்)

மாதுல் : என்னைக் கேட்டால் அரண்மனையின் வாழ்க்கையைக் காட்டிலும் கடினமான வாழ்க்கை இந்த உலகத்தில் வேறு எங்கும் இருக்க முடியாது. முன்னே பார்த்தால் சிப்பாய். பின்னே பார்த்தால் சிப்பாய். நான் சிப்பாய் முன்னால் போகிறேனா அல்லது சிப்பாய் என் முன்னால் செல்கிறானா என்று இன்னும் எனக்குப் புரியவில்லை. இன்னும் ஒரு கொடுமையான விஷயம்... நான் யாரைப் பார்த்து மரியாதை நிமித்தம் தலைவணங்க நினைக் கிறேனோ அவர்கள் என்னைப் பார்த்துத் தலை வணங்கு கிறார்கள். இது கொடுமையல்லவா?

(தலையினால் தன்னை நோக்கிச் செய்கை செய்து)

மாதுலைப் பார்த்து, அவன் முன்னால் தலைவணங்க அவனிடம் எந்த தகுதி உள்ளது... என்று எனக்குத் தெரியவில்லை... நீதான்

சொல்... மாதுல் கடவுளா? பண்டிதனா? அல்லது இராஜாவா? பிறகு ஏன் அனைவரும் மாதுலைப் பார்த்துத் தலைவணங்க வேண்டும்?

எனக்கே சந்தேகம்! நான் எலும்பு மாமிசத்தில் ஆன மனிதனா அல்லது கோவிலில் உள்ள பளிங்குச் சிலையா? ஆகவே நான் என்னை அடிக்கடி தொட்டுத் தொட்டுப் பார்க்கிறேன். மாதுலை மட்டும்தானா என்ன! அவன் கட்டிக் களைந்த துணிமணிகளையும் தொட்டு வணங்கத் துவங்கிவிட்டார்கள். ஆனால் இங்கு வந்ததும் எனக்கு ஒரு நிம்மதி... யாரும் என்னைக் கண்டு தலைகுனிந்து வணங்குவது இல்லை. நான் முன்னே செல்கிறேனா அல்லது காவலாளி முன்னே செல்கிறானா என்ற சந்தேகமும் எனக்கு இல்லை. ஆனால் ஒன்று. இந்தக் கொட்டும் மழையை மட்டும் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மல்லிகா : துணிகளை உலர்த்த நெருப்பு மூட்டட்டுமா!

(மாதுல் அடுப்பு அருகில் சென்று பின் நான்கு பக்கங்களிலும் நோக்குகிறாள்)

மாதுல் : உன் வீட்டு நிலைமை ஏன் இவ்வளவு மோசமாக உள்ளது. அம்பிகா இருந்தவரை இந்த வீடு இந்த நிலையில் இருந்ததில்லை. பிரியங்குமஞ்சரி உனக்கு துணிமணிகளும் பொற்காசுகளும் கொடுத்து அனுப்பி இருந்தார்களாம். இவற்றை நீ திருப்பி அனுப்பிவிட்டாயாம்! ஏன் திருப்பி அனுப்பிவிட்டாய்?

மல்லிகா : அவை எனக்குத் தேவைப்படவில்லை!

(அழுக்கு அடைந்த துணிமணிக்குள் அடியில் இருந்த போஜ்பத்ர ஓலைச்சுவடிகளை வெளியே எடுத்துத் தூசி தட்டுகிறாள்)

மாதுல் : இந்த வீட்டை மராமத்து செய்யும்படி கட்டிடக் கலைஞர்களுக்கு அரசி கட்டளையிட்டு இருக்கிறீர்கள்.

மல்லிகா : எந்த மராமத்து வேலையும் எனக்கு அவசியமாகத் தோன்றவில்லை.

(ஓலைச் சுவடியினை வைப்பதற்கு நாலாபக்கமும் பார்த்துவிட்டுக் கடைசியில் மாதுல் அருகில் உள்ள இருக்கையில் வைத்து விடுகிறாள்)

நெருப்பு மூட்டட்டுமா?

மாதுல் : தேவையில்லை. மழை அடங்கிக் கொண்டு இருக்கிறது.

(ஊன்றுகோலை எடுத்துக்கொண்டு ஜன்னல் அருகில் செல்கிறான்)

சிறு சிறு தூரல்கள்தாம். எப்படியாவது காலை இழுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டால் அங்கேயே ஆடைகளை உலர்த்தி விடலாம். மறுபடியும் வலுத்த மழை பிடித்துக் கொண்டால்.... அவ்வளவுதான்.

(ஜன்னலைவிட்டு அகன்று மல்லிகா அருகில் வருகிறான்)

நீ காஷ்மீர் பற்றி ஏதாவது செய்தி கேள்விப்பட்டாயா?

(மல்லிகா ஆழமான உறுதியான பார்வையால் அவனைப் பார்க்கிறாள்)

மல்லிகா : நான் இருபத்திநான்கு மணி நேரமும் வீட்டில் அடைந்து கிடக்கிறேன். அதனால் வெளிச் சமாச்சாரங்களை நான் எப்படி கேட்கமுடியும்!

மாதுல் : நான் கேட்டுள்ளேன். நம்பமுடியவில்லை. ஆனால் நம்பாமலும் இருக்க முடியவில்லை. அரசியலில் எதுவும் நடக்கலாம். எது நடக்க முடியாது என்று நம்புகிறோமோ அது கட்டாயம் நடந்துவிடும். ஆகவே இது இருக்கவும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.

(மல்லிகா களை இழந்த மாதிரி அவனைப் பார்க்கிறாள்)

மல்லிகா : அது என்ன செய்தி?

மாதுல் : அரசர் இயற்கை எய்திவிட்டார்கள். காஷ்மீரில் புரட்சியாளர்கள் தலைதூக்குகிறார்கள். காளிதாஸ் காஷ்மீரை விட்டுச் சென்றுவிட்டான் என்று அங்கு இருந்து வந்த ஒரு காயப்பட்ட வீரன் சொன்னான்.

மல்லிகா : என்ன! காளிதாஸ் காஷ்மீரை விட்டுச் சென்றுவிட்டானா?

(பழைய மாதிரி களையிழந்த தோற்றத்துடன் இருக்கையில் அமர்கிறாள்)

இப்பொழுது அவர் உஜ்ஜையினி சென்று விட்டாரா?

மாதுல் : இல்லை. உஜ்ஜையினி செல்லவில்லை. அவர் சன்னியாசம் வாங்கிக்கொண்டு காசி சென்றுவிட்டார் என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். நான் அதை நம்பவில்லை. ஏன் என்றால் அவருக்குத் தலைநகரில் அவ்வளவு மரியாதை உண்டு. அவர் காஷ்மீரில் தங்கவில்லை என்றால் நேராகத் தலைநகர் வந்து இருக்கவேண்டும். ஆனால் இது நடக்க முடியாதது இல்லை. இரண்டாவது காளிதாஸுக்கு ஒரு அரசியல் வாழ்க்கை

இருக்கிறது. என்னால் இன்று வரை இந்த இரண்டு வாழ்க்கைச் சக்கரத்தில் அச்சைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் எது நினைக்கிறேனோ அதற்கு எதிர்மறையாகச் செயல்கள் நடக்கின்றன. நான் எந்த எதிர்மறையை அடையும்பொழுது அந்தச் சக்தியும் எதிர்மறைக்கு எதிர்மறையாக நடந்துவிடுகிறது. ஆகையால் எதை நான் நினைக்கிறேனோ அது எப்பொழுதும் பொய்த்துவிடுகிறது. ஆகவே அவன் சன்னியாசம் வாங்கிவிட்டானா அல்லது இல்லையா என்பதைக் குறித்து நீயாக ஒரு முடிவிற்கு வந்துவிடு. அவன் சன்னியாசம் வாங்கிவிட வில்லை. காசிக்குச் சென்றிவிட்டால் என்பதுதான் உண்மையாக இருக்கும்.

(மல்லிகா இருக்கையில் இருந்து ஓலைச் சுவடியை எடுத்து மார்போடு அணைத்துக்கொள்கிறாள்)

மல்லிகா : இல்லை. இது உண்மையாக இருக்கமுடியாது. என்னுடைய இருதயம் இதை ஏற்க மறுக்கிறது.

மாதுல் : நான் உன்னிடம் என்ன கூறினேன்? எதை நான் சொல்கிறேனோ? அது ஒருபொழுதும் உண்மையாக இருக்க முடியாது! ஆகவே நான் ஒன்றும் கூறவில்லை. அவன் காசி சென்று உள்ளான் என்றால் நான் பொய்யன் ஆகிவிடுவேன். போகவில்லை என்றாலும் நான் பொய்யனாகிவிடுவேன்... இது சரியா?

(ஊன்றுகோலைப் பிடித்துக்கொண்டு சென்றுவிடுகிறான். மல்லிகா ஊமை மாதிரி பேச்சற்று இருக்கையில் அமர்ந்து இருக்கிறாள்)

மல்லிகா : (தனக்குத் தானே...)

இருக்கமுடியாது நீ காசி போகவில்லை. நீ சன்னியாசம் வாங்கிக் கொள்ளவில்லை. ஆகையால்தான் நான் உன்னை இங்கிருந்து செல்லச் சொல்லவில்லை. நீ எங்காவது சென்று அரசாட்சி ஏற்றுக் கொள் என்று இதனால்தான் சொல்லவில்லை. ஆனாலும் நீ இவ்வாறு செய்த சமயம் உனக்கு வாழ்த்துகள் சொன்னேன். இருந்தாலும் நேரிடையாக நீ அந்த வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

(ஓலைச்சுவடியினைக் கையில் எடுத்துக் குற்றம் சுமத்தும் நோக்கோடு அதைப் பார்க்கிறாள்)

நான் உன் வாழ்க்கையில் குறுக்கிடாவிட்டாலும் நீ என்னுடைய வாழ்க்கையின் அங்கமாக எப்பொழுதும் இருக்கிறாய். நான்

உன்னை, எப்பொழுதும் என்னைவிட்டு விலகிச் செல்ல அனுமதி அளித்ததில்லை. நீ காவ்யங்களைப் படைத்துக் கொண்டு இருந்தாய். அப்பொழுது நானும்... என் வாழ்க்கையும் பொருள் பொதிந்தது என்றும் எனது வாழ்க்கைக்கும் ஒரு இலக்கு உள்ளது என்றும் புரிந்துகொண்டேன்.

(ஓலைச்சுவடியினை முழங்கைகளின் மீது வைத்துக் கொண்டு)

ஆனால்... நீ இன்று என் வாழ்க்கையைப் பொருள் அற்றது என்று மாற்றி விடுவாயா?

(ஓலைச்சுவடியினை இருக்கையின் மீது வைத்து அமைதி இழந்த பார்வையால் அதைப் பார்க்கிறாள்)

நீ வாழ்க்கையில் நடுநிலைமை வகிக்கக்கூடும். ஆனால் நானோ வாழ்க்கையில் நடுநிலைமை வகிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். ஆனால் வாழ்க்கையை நீ என் பார்வை கொண்டு பார்க்க முடியுமா? என்னுடைய வாழ்க்கையில் இத்தனை வருடங்கள் எவ்வாறு சென்றன என்பதை அறிவாயா? நான் என்னென்ன பார்த்தேன். எந்த நிலையிலிருந்து எந்த நிலைக்குத் தள்ளப்பட்டேன் என்பதும் புரியுமா?

(எழுந்து உள் கதவைத் திறக்கிறாள். தொட்டிலை நோக்கி ஜாடை செய்து)

இந்த உயிரைத் தெரியுமா? புரிய இயலுமா? இவள்தான் மல்லிகா. இவள் மெதுவாக வளர்கிறாள். அம்மாவிற்குப் பதிலாக நான்தான் இவளை வளர்க்கிறேன்... இவள்தான் என்னுடைய குறைகளின் பிறப்பு.

உன்னிடம் என்ன உணர்வு இருந்ததோ அது மற்றவரிடம் காணப்படவில்லை. ஆனால் குறைகளின் ரூபத்தில் எத்தனை எத்தனை மனித உருவங்கள்? நான் எனது பெயரை இழந்து மற்றொரு அடைமொழியைச் சம்பாதித்திருக்கிறேன். மேலும் எனது நோக்கிலேயே பெயரற்ற அடைமொழியாக மட்டும் உள்ளேன் என்பது உனக்குப் புரிந்திருக்குமா?

(கதவை மூடிவிட்டு இருக்கையை நோக்கித் திரும்பி விடுகிறாள்)

உஜ்ஜையினியில் உன்னைப் பற்றி வீண் பழிச்சொற்கள் பேசப்படுகின்றன. அங்கு அதிக விலை மாதர்களுடன் உனக்கு... நெருங்கிய தொடர்புகள் உண்டு என்று மனிதர்கள் கூறினார்கள். ஆனால் இன்று விலைமாதின் இந்த உருவத்தைப் பார்த்தாயா?

பார்த்தால் நீ என்னை அறிந்து கொள்வாயா? நான் இன்று கூட முன்பைப் போலவே மலை முகட்டிற்குச் சென்று மேகக் கூட்டங்களை இரசிக்கின்றேன். முன்னைப் போலவே ருதுசம்ஹாரம், மேகதூதம் ஆகியவற்றைப் படிக்கிறேன். நான் ஒரு பொழுதுமே என்னுடைய உணர்வு அறையைக் காலியாக இருக்கச் செய்ததில்லை. ஆனால் குறைபாடுகள் நிறைந்த வாழ்க்கை வலியின், வலியினை... நீ உணர முடியுமா?

(முன் கைகளை இருக்கையின் மீது வைத்து அமர்ந்து விடுகிறாள். ஓலைச்சுவடியினைக் கையில் எடுத்துக் கொள்கிறாள்)

இல்லை. அந்த வலியின்... வலியினை நீ உணர முடியாது. நீ எழுதி இருக்கிறாய்... ஒரு குறை... நிறைகளின் குவியல்களில் நிலவின் நிலவொளிகளின் நடுவில் அதன் கருமை மறைவது போல மறைந்து விடுகிறது. ஆனால் தரித்திரம் மறையாது. நூற்றுக்கணக்கான நிறைகளின் மத்தியிலும் மறையாது. அது மறையாதது மட்டுமல்ல. நூற்றுக்கணக்கான நிறைகளின் மீது படர்ந்து ஒன்று ஒன்றாக அவற்றையே அழித்துவிடுகிறது.

(பேசியபடியே தன்னை மறந்து விடுகிறாள்)

ஆனால் இவை எல்லாவற்றையும் நான் பொறுத்துக் கொண்டேன். ஏன் தெரியுமா? நன் என்னையே அழித்துக் கொண்டு நீ இருப்பதை உணர்ந்து கொண்டிருந்தேன். ஏன்? நான் என்னில் என்னைப் பார்க்காமல் உன்னையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் உன்னைப் பற்றி இன்று நான் என்ன கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறேன்... நீ யாவற்றையும் துறந்து சன்னியாசம் வாங்கிக் கொண்டு விட்டாய் என்று. நீ நடுநிலை வகிக்கிறாயா? வெறுப்பு அடைந்துவிட்டாயா? நீ என்னுடைய அறிவின் சக்தியில் இவ்வாறு என்னிலிருந்து வஞ்சித்து விடுவாயா?

(மின்னல்கள் மின்னுகின்றன. மேகங்கள் கர்ஜிக்கின்றன)

அதே ஆடி மாத நாள். அவ்வாறே மேகங்கள் இடிக்கின்றன. அவ்வாறே பெருமழை பொழிகிறது. அவ்வாறே நானும் உள்ளேன். அதே வீட்டில்தான். ஆனால்....

(மறுபடியும் மின்னல்கள் மின்னுகின்றன. மேகங்களின் இடி முழக்கங்கள் கேட்கின்றன. வாயிலின் கதவுகள் மெதுவாகத் திறக்கின்றன. காளிதாஸ் அடிபட்ட மாதிரி கதவைத் திறந்து வாயிலிலேயே நின்று கொண்டு இருக்கின்றான். கதவு திறந்த ஒலி கேட்டு மல்லிகா அந்தப் பக்கம் பார்க்கிறாள். திடீரென்று

எழுந்து விடுகிறாள். காளிதாஸ் உள்ளே வருகிறான். மல்லிகா தன்னை மறந்த நிலையில் அவனைப் பார்த்தவாறே இருக்கிறாள்).

காளிதாஸ் : ஒருவேளை தன்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை போலும்.

(மல்லிகா அதே மாதிரி அவனைப் பார்த்தவாறே இருக்கிறாள். காளிதாஸ் அறையில் இங்கும் அங்கும் பார்க்கிறான். பின்பு மல்லிகாவைப் பாதாதி கேசம் வரை ஒரு பார்வை பார்த்துவிட்டு இருக்கையை நோக்கி வருகிறான்)

அடையாளம் கண்டுபிடிக்காமல் இருப்பதும் இயற்கைதான். ஏன் என்றால் நான், நீ முதலில் பார்த்து அடையாளம் கண்டுகொண்ட மனிதன் அல்ல. நான் மற்றொரு மனிதன்.

(கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு இருக்கையில் அமர்கிறான்)

உண்மையை உரைக்க வேண்டுமெனில் நான் என்னையே அடையாளம் கண்டு கொள்ளாத மனிதன். நீ இந்த மாதிரி மரத்துப் போய் ஏன் நிற்கிறாய். என்னைப் பார்த்து உனக்கு வியப்பாக உள்ளதா?

(மல்லிகா கதவை மூடிவிட்டுத் தன்னை இழந்த மாதிரி அவனை நோக்கி முன்னேறுகிறாள்)

மல்லிகா : வியப்பா? ... உண்மையில் நீ நீதானா. மேலும் உன்னைப் பார்க்கும் நான் நான்தானா? எனக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை.

காளிதாஸ் : இல்லை. இது கனவு இல்லை. உண்மையில் நான்தான் இங்கு இருக்கிறேன். ஒரு தடவை இங்கு உள்ள யதார்த்த நிலையைப் பார்ப்பதற்காகவே பல நாட்கள் பயணத்தின் காரணமாகக் களைத்து உடைந்து வந்துள்ளேன்.

மல்லிகா : மிகவும் நனைந்து வந்திருக்கிறாய். ஆனால் இங்கு உலர்ந்த ஆடைகள் இல்லை. ஆனால் நான்...

காளிதாஸ் : நான் நனைந்தது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. இந்த மாதிரி முழுமையாக நனைவதும் வாழ்க்கையில் ஒரு உயர்ந்த குறிக்கோளாகவும் இருக்கலாம் என்பதை அறிந்து இருக்கலாம். பல வருடங்களுக்குப் பிறகு இப்படி நனைந்து இருக்கிறேன். இப்பொழுது துடைத்துக்கொள்ள விரும்பவில்லை. நடந்து நடந்து மிகவும் களைத்து இருந்தேன். பல நாட்கள் வரை காய்ச்சல். ஆனால் இந்த மழையினால் எல்லாக் களைப்பும் நீங்கி விட்டது.

(மல்லிகா அவன் மிக பக்கமாக வருகிறாள்)

மல்லிகா : மிக்க களைத்து இருக்கிறாயா?

காளிதாஸ் : களைத்துதான் இருந்தேன். நான் களைத்த சமயங்களில் எல்லாம் மழை என் களைப்பை நீக்கி விட்டது.

மல்லிகா : உண்மையில் உன்னை அடையாளம் கண்டுகொள்ளவே முடியவில்லை.

(காளிதாஸ் ஒரு வினாடி நேரம் அவளைப் பார்த்தவாறே இருக்கிறான். பின்பு எழுந்து ஜன்னல் அருகில் செல்கிறான்)

காளிதாஸ் : மேலும் உன்னையும் எப்படி அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது. இந்த வீடும் எவ்வளவு மாறிவிட்டது! "இங்கு எல்லாமே எப்படி இருந்ததோ அப்படியே அந்த அந்த இடத்தில் இருக்கும் என்று நம்பி இருந்தேன். ஆனால் ஒன்று கூட அந்த அந்த இடத்தில் இல்லை."

(நான்குப்பக்கமும் பார்க்கிறான்)

மல்லிகா : நான் மட்டும் மாறவில்லை!

(காளிதாஸ் அவளைப் பார்த்துவிட்டு உலாவத் தொடங்குகிறான்)

காளிதாஸ் : இந்த வீடு கூட இவ்வாறு எனக்கு அறிமுகமற்று காணப்படும் என்று நான் நினைக்கவே இல்லை. முன்பு அந்த வீட்டின் ஒவ்வொரு பொருளின் அமைப்பும் அதன் இடமும் முறையாக இருந்தன. ஆனால் இன்று எல்லாமே அறிமுகமற்றுக் காணப்படுகின்றன. மேலும்....

(அவள் கண்களைப் பார்க்கிறான்)

நீயும்தான்! நீயும் அறிமுகமற்றுத்தான் காணப்படுகிறாய். ஆகையால்தான் எனது பார்வை எவ்வளவு மாறுதல் அடைந்துள்ளதோ அவ்வளவு இங்குள்ள நாட்கள் மாறுதல் அடையவில்லை என்று சொல்லுவதற்கும் இடம் உண்டு.

மல்லிகா : மிகவும் களைத்து இருக்கிறாய். உட்கார். உன் கண்களைப் பார்க்கையில் நீ இன்னும் முழுமையாகக் குணம் அடையவில்லை என்று தோன்றுகிறது.

காளிதாஸ் : வெகுநாட்கள் இங்கும் அங்கும் அலைந்து திரிந்து பிறகு இங்கு வந்துள்ளேன். காஷ்மீர் சென்ற சமயத்தில் எக்காரணமாக இங்கு வரவில்லையோ அக்காரணமாகத்தான் இன்று இங்கு வந்துள்ளேன்.

(வினாடி நேரம் இருவரின் கண்கள் இணைந்து போகின்றன)

மல்லிகா : நீ... நீங்கள் காஷ்மீரை விட்டுச் சென்ற செய்தி, இன்று தான் ஆர்ய மாதுல் மூலம் எனக்குக் கிடைத்தது.

காளிதாஸ் : ஆமாம். ஏன் என்றால், பணம், பதவி, பகட்டு ஆகியவைகளின் மோகம் விட்டுவிட்டது.

பல வருடங்களாக எந்த எந்த விஷயங்கள் என்னை இறுக்கியவாறு இருந்தனவோ என்றும் நன் அவற்றினால் கட்டப்பட்டுள்ளேன். நான் சன்னியாசம் பெற்றுக்கொண்டு விட்டேன் என்று காஷ்மீர் மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் நான் சன்னியாசம் பெற்றுக் கொள்ளவில்லை. நான் மாத்ருகுப்தன் என்ற உருவத்திலிருந்து மட்டும் விடுபட்டுள்ளேன். ஏன் என்றால், நான் மறுபடியும் காளிதாஸ என்ற உருவத்தில் வாழ விரும்புகிறேன். எந்தப் பந்தங்களை நான் அறுத்துவிட்டு இங்கிருந்து சென்றேனோ அதை நோக்கி ஒரு ஈர்ப்பு எப்பொழுதுமே என்னிடத்தில் இருந்தது. இங்குள்ள ஒவ்வொரு பொருட்களிடத்திலும் ஒரு தன்னுணர்வு காணப்பட்டது. ஆனால் இங்கிருந்து சென்றவுடன் அந்தத் தன்னுணர்வு எனக்கு மற்ற எந்த இடத்திலும் கிடைக்கப் பெறவில்லை. எனக்கு இங்குள்ள ஒவ்வொரு பொருட்களின் உருவம், நிலை ஆகியவை இன்றும் ஞாபகத்தில் உள்ளன.

(மறுபடி அறையின் நாலாபக்கமும் பார்க்கிறான்)

சால்கள், புலித்தோல், புல் கட்டுகள், விளக்குச் செம்மண் சின்னங்கள்.... உன் கண்கள். நான் இங்கிருந்து சென்ற தினம் உன் கண்களின் எந்த உருவத்தைப் பார்த்தேனோ அந்த உருவம் இன்று வரை என் ஞாபகத்தில் பதிந்துள்ளது. நான் எப்பொழுதாவது இங்குத் திரும்பி வந்தால் இங்குள்ள எல்லாப் பொருட்களையும் அதே நிலையில்தான் பார்ப்பேன் என எனக்கு நானே நம்பிக்கை ஊட்டி வந்துள்ளேன்.

(யாரோ ஒருவன் கதவினைத் தட்டுகிறான். மல்லிகா தடுமாறியபடியே அவனைப் பார்க்கிறாள். காளிதாஸ் கதவின் அருகில் செல்ல விரும்புகிறான். மல்லிகா அவனைத் தடுத்துவிடுகிறாள்.

மல்லிகா : கதவு மூடியவடியே இருக்கட்டும். நீ சொல்வதை நிறுத்தாதே.

காளிதாஸ் : யார்தான் என்று பாரேன்?

மல்லிகா : மழைக்காலம். யாரும் வரலாம். நீ சொல். அவன் தானாகச் சென்று விடுவான்.

(வெளிப்புறம் வந்தவன் குடிபோதையில் எரிச்சல் அடைந்து எப்ப பார்... கதவு மூடியே இருக்குது, கதவு முடியே இருக்குது என்று கூறிக்கொண்டே திரும்பி விடுகிறான்)

காளிதாஸ் : யார் அவன்?

மல்லிகா : சொன்னேன் இல்லையா? யாராவது இருக்கலாம். மழையில் யாருக்காவது தங்க வேண்டியது இருக்கலாம்.

காளிதாஸ் : ஆனால் இவன் குரல் மிகவும் விசித்திரமாகத் தோன்றுகிறது.

மல்லிகா : நீ இங்கு உனக்கு உள்ள தொடர்பு பற்றிப் பேசிக் கொண்டு இருந்தாய்.

காளிதாஸ் : அவன் குரல் எனக்கு அறிமுகமானது மாதிரியல்லவா தோன்றுகிறது. இங்கு உள்ள மற்ற எல்லாப் பொருட்களைப் போன்று இந்தத் தெரிந்த குரலும் மாறுபட்டு இருக்கலாம்.

மல்லிகா : நீ மிகவும் களைத்துள்ளாய். உடம்பு சுகம் இல்லை. அமர்ந்தபடியே பேசு.

(காளிதாஸ் பெருமூச்சு எரிந்து இருக்கையில் அமர்கிறான். மல்லிகா முழங்கால்களில் கைகளை வைத்துக்கொண்டு சிறிது தூரத்தில் கீழே அமர்கிறாள்)

காளிதாஸ் : நான் அனேக தடவை இங்குள்ள தொடர்பு பற்றி யோசித்துள்ளேன். மல்லிகா! ஒவ்வொரு தடவையும் அம்பிகாவின் கூற்று சரியானது என்ற முடிவுக்குத்தான் நான் வந்துள்ளேன்.

(கைகளைப் பின்பக்கம் வைத்துக்கொண்டு மேலே பார்க்கிறான்)

நான் இங்கிருந்து ஏன் போக விரும்பினேன் தெரியுமா? எனக்கு என் மீதே நம்பிக்கை இல்லை என்பதும் ஒரு காரணம். வறுமைக்கும் நிந்தனைக்கும் மத்தியில் வாழ்ந்த பிறகு பெருமையும், மரியாதையும் கலந்த வாழ்க்கை அனுபவமும் எப்படி இருக்கும் என்று நான் அறியவில்லை. அந்த வாழ்க்கை என்னை முற்றிலும் ஆட்கொண்டுவிடும்..... என் வாழ்க்கைப் பாதையே மாறி விடும் என்ற சந்தேகம் இருந்துகொண்டே இருந்தது.... இந்தச் சந்தேகத்திற்கும் காரணம் இருந்தது.

(கண்கள் மல்லிகாவை நோக்குகின்றன)

நான் காஷ்மீர் ஆட்சியை ஏற்பது கேட்டு உனக்கு வியப்பு ஏற்பட்டதா? இது உனக்குச் செயற்கையாகத் தோன்றியிருக்கும்.

எனக்கு அதில் எந்தச் செயற்கையும் தென்படவில்லை. இது வறுமை கலந்த வாழ்க்கையின் ஒரு எதிர்மறைச் செயலாக இருந்தது. எவர் எவர் என்னை நிந்தனை செய்தார்களோ, எவர் எவர் என்னைக் கேலி செய்தார்களோ அவர்களைப் பழிவாங்கும் உணர்வு அதில் இருந்தது.

(உதட்டினைக் கடித்துக் கொண்டு எழுந்து ஜன்னல் அருகில் செல்லுகிறான்)

ஆனால் "இந்த வாழ்க்கையில் நான் மகிழ்ச்சியாக இல்லை என்று நான் நன்கு அறிவேன். இந்த மகிழ்ச்சியின்மையின் காரணம் அந்த சூழ்நிலையில் இல்லை. என்னிடம் தான் உள்ளது என்று அடிக்கடி நான் எனக்கே நம்பிக்கை ஊட்டி வந்தேன்."

நான் என்னைச் சூழ்நிலைக்கேற்ப மாற்றி இருந்ததால், மகிழ்ச்சியாக இருந்து இருக்கலாம். ஆனால் அப்படி நடக்கவில்லை. நானும் மாறவில்லை. மகிழ்ச்சியும் கிட்டவில்லை. அதிகாரம் கிடைத்தது. மரியாதை கிடைத்தது. என் எல்லாப் படைப்புகளின் பிரதிகள் நாடு முழுவதும் சென்றடைந்தன. ஆனால் மகிழ்ச்சி மட்டும் கிட்டவில்லை. மற்றவர்களுக்கு அந்தச் சூழ்நிலை, அந்த வாழ்க்கை இயற்கையாக இருந்திருக்கலாம். ஆனால் எனக்கு இல்லை. ஒரு அரசாங்க அதிகாரியின் செயல், அரசுத்துறையின் செயல், என் துறையைவிட மாறுபட்டிருந்தது. எந்த விசாலமான சூழ்நிலையில் நான் இருக்கவேண்டுமோ அதைத் துறந்து ஆணவம் மற்றும் வசதிப்ன படைத்த வாழ்வின் மோகத்தில் கட்டுண்டு அரசாங்கத் துறையில் நுழைத்துவிட்டேன் என்று நான் அடிக்கடி உணரத் தொடங்கினேன். எப்பொழுதெல்லாம் என் பார்வை நீண்ட தூரம் பரவி இருக்கும்.... அந்த அடிவானத்தின் கோட்டை அடையும்பொழுது நான் அந்த விசாலமான சூழ்நிலையில் இருந்து விலகிவிட்டேன் என்ற உணர்வு என்னை முன்மாதிரி உறுத்திக் கொண்டே இருந்தது. இன்று இல்லாவிட்டாலும் நாளை ஒரு நாள் இந்த இரு சூழ்நிலைகளையும் தன்வசப்படுத்தி இந்த இரு துறைகளிலும் நான் என்னைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வேன் என்று தனக்குத்தானே நம்பிக்கையூட்டி வந்தேன். ஆனால் நான் அந்தச் சூழ்நிலைகளின் கைப்பாவையாக மாறிச் செயல்படத் தொடங்கினேன். எந்த 'நாளையை' நான் நோக்கி இருந்தேனோ அந்த நாளை வரவே இல்லை. நானும் மெதுவாகத் துண்டாக்கப்பட்டு வந்தேன். ஒரு நாள்... ஒரு நாள்... நான் முற்றிலும் துண்டாக்கப் பட்டுவிட்டேன்....

என்பதைப் புரிந்துகொண்டேன். இன்று நான் அந்த நீண்ட சூழ்நிலையோடு சம்பந்தப்பட்ட மனிதன் அல்ல.

(வினாடி நேரம் மௌனமாக இருந்து பிறகு உலாவத் தொடங்குகிறான்)

காஷ்மீர் செல்லும் சமயம் இந்த வழியாகச் செல்ல நான் விரும்பவில்லை. இந்தப் பிராந்தியம், இந்த மலைத் தொடர்கள், இந்த அடிவாரங்கள், எனக்கு முன்னால் ஒரு ஊமைக் கேள்வியாக மாறிவிடும் என்று எனக்குத் தோன்றியது. ஆனாலும் என் பேராசையை என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை. ஆனால் அந்தத் தடவை இங்கு வந்தபொழுது நான் மகிழ்ச்சியை உணரவில்லை. எனக்கு என் மீதே வெறுப்பு ஏற்பட்டது. எவர்எவர் என் வருகையை மகிழ்ச்சித் திருநாளாகக் கொண்டாடினார்களோ அவர்களிடமும் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. அச்சமயம்தான் முதல்முதலாக என் மனம் சுதந்திரப் பறவையாக மாறத் துடிக்க ஆரம்பித்தது. ஆனால் அச்சமயம் அங்கிருந்து விடுபடுவது நடக்காத காரியம்.

அப்பொழுது நான் உன்னைச் சந்திக்க வரவில்லை. ஏன் என்றால் என்னுடைய கண்கள் என் அலைபாயும் மனத்தை மேலும் அலைபாய வைத்துவிடும் என்ற பயம் தான். ஆகவே இதிலிருந்து தப்பிக்க விரும்பினேன். அதன் விளைவு எதுவாகவும் இருந்திருக் கலாம். உன்னிடம் இதன் பின்விளைவு என்னவாக இருக்கும்? மற்றவர்கள் உன்னிடம் என்ன கூறுவார்கள் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் உன் மனத்தில் அந்த மாதிரியான எந்த உணர்வுகளும் ஏற்படாது என்று கவலையற்று இருந்தேன். மேலும் அந்த 'நாளை' ஒரு நாள் கண்டிப்பாகவும் வரும். அப்பொழுது நான் உன்னிடம் இது பற்றி எல்லாம் கூறிவிடுவேன். உனக்கு என்னுடைய மனப்போராட்டம் பற்றி நம்பிக்கை ஏற்படுத்துவேன் என்று நம்பிக்கையோடு இங்கே வந்தேன்... இந்தப் போராட்டம் ஒரு மனிதன் வரை மட்டும் சுருங்கி இருக்காது என்று நான் நினைக்கவில்லை. மாறுதல் ஒரு திசை வரை மட்டும் ஏற்படாது. ஆகையால் இன்று இங்கு வந்தது வீண் என்றுதான் தோன்றுகிறது.

(பின்பு ஜன்னல் அருகில் சென்று விடுகிறான்)

நான் அந்த வாழ்க்கையில், அந்தச் சூழ்நிலையில் இருந்து அனேக படைப்புகள் படைத்தேன் என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் நான் அங்கு இருந்து எதுவும் படைக்கவில்லை என்று எனக்கு...

நன்றாகத் தேரியும். அங்கு எது படைத்தேனோ அது இந்த வாழ்க்கையில் சேமித்ததுதான். குமார சம்பவத்தின் பின்னணி இந்த இமயமலைதான். தப்ஸ்வினி உமா நீதான். மேகதூதத்தின் யக்ஷிணி நீதான். இருந்தாலும் நான் என்னை இந்தப் பிரதேசத்திலும் உன்னை நகரத்தில் இருப்பதாகக் கற்பனை செய்தேன். அபிஞான சாகுந்தலத்தில் சகுந்தலாவின் உருவத்தில் நீதான் என் முன்னால் இருந்தாய். நான் எப்பொழுதெல்லாம் எழுதத் தொடங்கினேனோ, அப்பொழுதெல்லாம் என்னுடைய.. உன்னுடைய... வாழ்க்கையை மறுபடியும் மறுபடியும் திருப்பத் தொடங்கினேன். இவை எல்லாவற்றையும் நீக்கி மறுபடியும் எழுத விரும்பியபோது அந்த, அந்தப் படைப்புகள் உயிரற்றுக் காணப் பட்டன. இரகுவம்சத்தில் அஜனின் ஓலம் என்னுடைய ஓலத்தின் வெளிப்பாடே. மேலும்...

(மல்லிகா இருகைகளினாலும் முகத்தை மூடிக்கொள்கிறாள். காளிதாஸ் திடீரென்று பேசுவதை நிறுத்திவிடுகிறான். ஒரு வினாடிவரை அவளை நோக்கிப் பார்த்தவாறே இருக்கிறான்)

அவற்றை எல்லாம் நீ படிக்கவேண்டும் என்று விரும்பினேன். ஆனால் இந்தச் சம்பந்தம் இவ்வாறு அறுந்துவிட்டது....

(மல்லிகா முகத்திலிருந்து கைகளை எடுத்து இதை மறுக்கும் விதத்தில் தலையை அசைக்கிறாள்)

மல்லிகா : இந்தச் சம்பந்தம் ஒருபொழுதும் முறிந்ததில்லை.

(எழுந்து துணியினால் மூடப்பட்ட ஓலை நறுக்குகளை மூலையில் இருந்து எடுத்து வந்து காளிதாஸின் கைகளில் கொடுக்கிறாள். காளிதாஸ் அந்த ஓலை நறுக்குகளை ஒன்றொன்றாக எடுத்துப் பார்க்கிறான்)

காளிதாஸ் : மேகதூதமா! உனக்கு மேகதூதத்தின் பிரதி எப்படி கிடைத்தது?

மல்லிகா : என்னிடம் உன் எல்லாப் படைப்புகளும் இருக்கின்றன. இரகுவம்சம், சாகுந்தலம் ஆகியவற்றின் பிரதிகள் சில மாதங்களுக்கு முன்பே எனக்குக் கிடைத்துவிட்டன.

காளிதாஸ் : உன்னிடம் எல்லாப் படைப்புகளும் உள்ளனவா? ஆனால் இவை உனக்கு எப்படி கிடைத்தன? என்ன? ஆச்சர்யம்...!

மல்லிகா : உஜ்ஜையினி வழியாக வரும் மனிதர்கள் எப்பொழுதாவது இந்தப் பக்கமும் வந்து செல்வார்கள்.

காளிதாஸ் : அவர்களிடம் இந்தப் பிரதிகள் கிடைக்கின்றனவா?

மல்லிகா : நான் அவர்களிடம் சொல்லி வரவழைத்தேன். ஓரிரு வருடங்களில் எப்பொழுதாவது ஒரு பிரதி மட்டும் கிடைத்துவிடும்.

காளிதாஸ் : இவற்றை வாங்கப் பணம்?

மல்லிகா : ஓர் இரு வருடங்களில் ஒரு பிரதிதான் கிடைக்கும். ஆகவே அதனை வாங்கப் பணம் சேர்ப்பது கஷ்டமான காரியம் இல்லை.

(காளிதாஸ் தலைகுனிந்து கொண்டு இருக்கையில் அமர்கிறான்)

காளிதாஸ் : பல வருடங்களாக என்னை வாட்டி வந்த குறைபாடுகள்... இன்று மிகவும் பெரிதாகி... என்னை வதைக்கின்றன. மல்லிகா! நான் பல வருடங்களுக்கு முன்னாலேயே இங்கு வந்து இருக்க வேண்டும். அப்பொழுது நான் மழையில் நனைந்து... நனைந்து, இலக்கியத்தைப் படைத்திருப்பேன். இந்த ஆடி மாத மேகங்களைப் போல் பல வருடங்களாக எனது மனத்தில் இருக்கும் உணர்வு களுக்கு இழைத்துக்கொண்டு இதுவரை என்னால் வரிவடிவம் கொடுக்க முடியவில்லை.

(பெருமூச்செறிந்து இருக்கையில் இருக்கும் சுவடியை எடுத்துப் பக்கங்களை புரட்டிப் பார்க்கிறான்).

இடிக்கும் மேகம் இன்னும் பொழியவில்லை. ஏனெனில் இதற்கு இன்னும் பருவம் கிடைக்கப்பெறவில்லை. சாதகமான காற்றும் வீசவில்லை... அது என்ன படைப்பு... "இன்னும் எழுதாத நறுக்குகளாகக் காணப்படுகின்றதே?"

மல்லிகா : இந்த நறுக்குகளை நான் என்கையினால் கோர்த்துச் சுவடியாக்கி உள்ளேன். நீ தலைநகரிலிருந்து இங்கு வரும் சமயம் உனக்கு அன்பளிப்பாக அளிக்கலாம் என்று நினைத்தேன். இந்த நறுக்குகளில் மிகப் பெரிய மகா காவியத்தைப் படைக்கும்படி கூற இருந்தேன். ஆனால் அந்தத்தடவை, நீ இங்கு வந்தும் இந்த இடத்திற்கு வரவில்லை. ஆகையால் இந்த அன்பளிப்பு இங்கேயே கிடந்துவிட்டது. அப்பொழுதே இந்த நறுக்குகள் பொடிப் பொடியாகத் தொடங்கிவிட்டன. ஆகவே இதில் உன் படைப்பினை எழுது என்று சொல்லத் தயக்கமாக உள்ளது.

(காளிதாஸ் ஓலை நறுக்குகளைப் புரட்டத் துடங்குகிறான்)

காளிதாஸ் : நான் இதில் ஒரு மகாகாவியம் படைக்க வேண்டும் என்பதற்காக இந்த நறுக்குகளைத் தயாரித்தாயா?

(நறுக்குகளைப் புரட்டும் சமயம் ஒரு இடத்தில் கை நின்று விடுகிறது)

அங்கங்கு இவற்றில் கண்ணீர்த் துளிகள் விழுந்துள்ளன. இவை கண்டிப்பாக மழைத்துளிகள் அல்ல. நீ உன் கண்ணீர் துளிகளினால் இந்த எழுதாத நறுக்குகளில் அதிகமாகவே எழுதியுள்ளாய் என்று எனக்குத் தோன்றுகிறது. கண்ணீர்த் துளிகள் மட்டும் அல்ல. அங்கங்கே வியர்வைத் துளிகளினால் நறுக்குகள் கருத்துக் காணப்படுகின்றன. அங்கங்கே மலர்களின் காய்ந்த இதழ்கள் தங்களின் நிறத்தை இந்த நறுக்களில் பதித்துள்ளன. அனேக இடங்களில் உன் நகக்கீரல்கள் காணப்படுகின்றன. உன் பற்களின் தடயங்களும் இதில் காணப்படுகின்றன. இது மட்டுமின்றிக் கோடைக்காலத்து வெய்யிலின் மெல்லிய அடர்ந்த நிறங்கள், ஹேமத்துக் காலத்து இலைத்துளிகள், இது தவிர இந்த வீட்டின் கறையான்... ஆகவே இந்த நறுக்குகளின் இந்தப் பக்கங்களில் ஒரு பெரிய மகாகாவியமே படைக்கப்பட்டுவிட்டது. எண்ண முடியாத அத்தியாயங்கள் கொண்ட ஒரு மகா காவியம்.

(அந்தச் சுவடியை வைத்துவிடுகிறான்)

இந்தச் சுவடியின் பக்கங்களில் புதிதாக என்ன எழுத முடியும்?

(எழுந்து ஜன்னல் அருகில் செல்கிறான். சில வினாடிகள் வெளிப்புறம் பார்த்த பிறகு பார்வை மல்லிகாவின் பக்கம் திரும்புகிறது.)

ஆனால் இதற்கு அப்பாலும் வாழ்க்கை பாக்கி உள்ளது. நாம் மறுபடியும் புதிய பொருளோடு வாழ்க்கையைத் தொடங்கலாம்.

(உள்பக்கமிருந்து பெண் குழந்தையின் முனகலும், அழும் ஒலியும் கேட்கிறது. மல்லிகா எழுந்து அமைதி இழந்த உணர்வோடு அந்தப் பக்கம் சென்று விடுகிறாள். காளிதாஸ் களை இழந்த மாதிரி அவள் போவதைப் பார்க்கிறான்)

காளிதாஸ் : மல்லிகா

(மல்லிகா சற்று நின்று அவனைப் பார்க்கிறாள்)

யாருடைய அழுகை ஒலி இது?

மல்லிகா : இது என் நிகழ்காலம்.

(உள்ளே சென்று விடுகிறாள். காளிதாஸ் திகைத்தவாறு அறையின் மையப்பகுதிக்கு வருகிறான்).

காளிதாஸ் : உன்னுடைய நிகழ்காலமா?

(யாரோ கதவைத் தட்டுகிறார்கள். உதைத்ததின் காரணமாகக் கதவு தனக்குத்தானே திறந்து கொள்கிறது. வாசல் படியில் விலோம் கதவைத் தட்டியவாறு நிற்கிறான். ஆடை முழுவதும் சேறு படிந்துள்ளது. அவன் தள்ளாடிக் கொண்டே உள்ளே வருகிறான்.)

விலோம் : மழைக்காலத்தில் வழுக்கித்தான் விழுந்தாய். ஆனால் குழியிலே விழுந்தாய். எத்தனை தடவைகூட கூறினேன்.... அண்ணாச்சி விலோம்.. மேலே மேலே ஏறாதே. ஆனால் அண்ணாச்சி விலோம் ஏற்றுக்கொண்டால்தானே? முதல் தடவை வந்தாய்... கதவு மூடியிருந்தது. திரும்பிச் சென்றாய். வழுக்கி விழுந்தாய். மறுபடியும் வந்தால் கதவு மூடியபடி.... திரும்பிச் சென்றால்தான் என்ன?.... இன்றைய நாளே இப்படித்தான்...

(காளிதாஸைப் பார்த்து அவன் பேச்சு நின்று விடுகிறது. அவனுடைய பார்வை ஏதோ ஒன்றை மிகக் கூர்ந்து பார்த்து அலசுவதாகத் தோன்றுகிறது)

என் கண்களுக்கு என்னவாயிற்று. தெரியாத முகங்கள் மிகவும் தெரிந்தனவாகக் காணப்படுகின்றன. பார்த்த முகங்கள் அறிமுகமில்லாத முகங்களாகத் தோன்றுகின்றன. இந்த... இந்த முகம் மிகவும் தெரிந்த முகமாகத் தோன்றுகின்றது. ஆனால் அறிந்து கொள்ள முடியவில்லையே. முகம் பார்த்த மாதிரி தோன்றுகின்றது. ஆனால் மனிதன் புதியவனாகத் தோன்றுகின்றான். என்னப்பா நண்பரே. என்னைத் தெரிகிறதா?

(மல்லிகா உள்ளே இருந்து வருகிறாள். விலோமைப் பார்த்து வாசல் அருகிலேயே மரத்து நிற்கிறாள்)

காளிதாஸ் : முகம் மிகவும் மாறிவிட்டது. ஆனால் மனிதன் அதே பழைய மனிதன்தான்.

விலோம் : பேச்சும் குரலும் அறிமுகமானதாகத் தான் தோன்றுகிறது.

(கண்களை நிறுத்திப் பார்க்க முயற்சிக்கிறான். பிறகு சட்டென்று சிரித்துவிடுகிறான்.)

ஓ... நீயா... நீயா...? ....விழுந்து காயப்பட்டதில் எல்லா வலியும் பறந்துவிட்டது... எத்தனை நாட்களாக உன்னைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை மனத்தில் இருந்தது. வா....

(அவனை நோக்கிக் கைகளை விரிக்கிறான். காளிதாஸ் அவன் முன்னால் இருந்து விலகிக் கொள்கிறான்.)

அணைத்துக் கொள்ளமாட்டாயா? என் உடம்பு அழுக்காக உள்ளது. ஆகையால்தானே! அல்லது என்னிடம் ஏதேனும் வெறுப்பா? ஆனால் இவ்வாறு நம் இருவரின் தொடர்பு அறுந்துவிடாது. நாம் இருவரும் மிக்க அருகில் இருக்கிறோம் என்று நீதானே சொன்னாய். சொல்லவில்லையா?

இத்தனை வருடங்களாக நம்முடைய இந்தத் தொடர்பில் எந்த மாற்றமும் வர இடம் கொடுக்கவில்லை. இப்பொழுது நாம் இருவரும் மிக்க அருகில் வந்துவிட்டோம் என்றுதான் நான் நினைக்கிறேன்.

(மல்லிகாவை நோக்கித் திரும்புகிறான்)

ஏன்... மல்லிகா நான் சொல்வது சரிதானே? நீ ஏன் அங்கேயே திகைத்து நின்றுவிட்டாய்? விலோம் இப்பொழுது இந்த வீட்டில் அழையா விருந்தாளி அல்ல. இப்பொழுது அவன் மிக்க உரிமையுடன் வரமுடியும். இல்லையா? இப்பொழுது அவன் இந்த வீட்டில் காளிதாஸை வரவேற்று உபசரிக்க முடியும். அப்படித்தானே?

(காளிதாஸை நோக்கித் திரும்புகிறான்)

அப்பொழுதும் இந்த வீட்டில்தான் என்னைச் சந்தித்தாய்?... இப்பொழுதும் இந்த வீட்டில்தான் சந்திக்கிறாய். இது ஒரு எதிர்பாராத செயல். ஆனால் என்னவென்றால் இது ஒரு எதிர்பாராத செயல் அன்று. நீ எப்பொழுது வந்தாலும் நம்முடைய சந்திப்பு இங்குக் கட்டாயம் நடக்கும்.

(மல்லிகாவை நோக்கித் திரும்புகிறான்)

நீ ஏன் இப்பொழுது வரை காளிதாஸை உபசரிக்க எந்த ஏற்பாடும் செய்யவில்லை? பல வருடங்களுக்குப் பிறகு ஒரு விருந்தாளி நம் வீட்டிற்கு வந்துள்ளார். அவரை உபசரிக்க வேண்டாமா? உனக்குத் தெரியுமா?.... காளிதாஸுக்கு இந்தப் பிராந்தியத்தின் மான் குட்டிகள் மீது எவ்வளவு மோகம் என்று....

(காளிதாஸை நோக்கித் திரும்புகிறான்)

ஒரு மான் குட்டி இந்த வீட்டிலும் உள்ளது.... நீ இதுவரை மல்லிகாவின் பெண் குழந்தையைப் பார்த்ததில்லையே? அப் பெண் குழந்தையின் கண்கள் அந்த மான்குட்டியின் கண்களையும் விட அழகில் குறைந்தது அன்று. இதை அஷ்டாவக்ரர் எப்படி வர்ணித்துள்ளார் என்று உனக்குத் தெரியுமா? அவர்...

(மல்லிகா திடீரென்று முன்னேறுகிறாள்)

மல்லிகா : ஆர்ய விலோம்!

(விலோம் சிரிக்கிறான்)

விலோம் : அஷ்டாவக்ரர் கூறுவதைக் காளிதாஸன் அறிந்துகொள்வதை நீ விரும்பவில்லை. ஆனால் எனக்கு அவர் கூறுவதில் நம்பிக்கை இல்லை. காளிதாஸனே பார்த்துவிட்டு அஷ்டாவக்ரரின் கூற்று எவ்வளவு தூரம் உண்மை என்று புரிந்துகொள்ளட்டும் என்பதற்காகவே நான் இதை சொல்கிறேன். குழந்தையின் சாயல் உண்மையிலேயே விலோம் மாதிரியுள்ளதா அல்லது....!

(மல்லிகா கைகளில் முகத்தை மூடிக்கொண்டு இருக்கையில் அமர்ந்துவிடுகிறாள். விலோம் காளிதாஸின் அருகில் செல்கிறான்)

வா.... பார்க்கிறாயா?

காளிதாஸ் : விலோம்.... இங்கிருந்து சென்றுவிடு.

விலோம் : சென்று விடட்டுமா?

(சிரிக்கிறான்)

இந்த வீட்டை விட்டா அல்லது இந்தக் கிராமப் பிரதேசத்தை விட்டா– அரசுக்கு வலிமை அதிகம் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன். அவ்வாறே செல்வாக்கிலும் திறமை அதிகம்.

காளிதாஸ் : இச்சமயம் இங்கிருந்து சென்று விடு. நான் சொல்கிறேன்.

விலோம் : ஏனென்றால் நீ இங்குத் திரும்பி வந்துள்ளாய்...?

ஏனென்றால் வருடக்கணக்காக நீ விட்டுச் சென்ற பூமி ஒன்று மறுபடியும் உனக்குத் தனதாகத் தோன்றுகிறது? ஏனென்றால் உன்னுடைய அதிகாரங்கள் நிலையானவை?

(சிரிக்கிறான்)

நீ இல்லாவிட்டால் வாழ்க்கையின் ஓட்டம் இல்லை... ஓட்டம் உன்னால்தான். மற்றவர்களினால் அல்ல... ஆனால் காலம் இரக்க மற்றது அன்று. அது மற்றவர்களுக்கும் அதிகாரம் அளித்துள்ளது. உரிமை அளித்துள்ளது. அது தூப தீப நிவேதனத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வீட்டு வாயிலில் நிற்கவில்லை. அது மற்றவருக்கும் வாய்ப்பு அளித்துள்ளது. படைத்துள்ளது. உனக்கு அந்தப் படைப்பைப் பார்க்க வெறுப்பாக உள்ளதா? ஏனென்றால் நீ எங்குத் தன்னைப் பார்க்க விரும்பினாயோ அதைப் பார்க்க இயலவில்லை.

(சில வினாடி அவனைப் பார்த்துவிட்டுச் சிரிக்கிறான்)

இப்பொழுது நான் இங்கிருந்து செல்லவேண்டும் என்று நீ விரும்புகிறாய். நான் செல்லுகிறேன். ஆனால் உன் ஆணைப்படி யல்ல. ஆனால் நீ இங்கு இன்று ஒரு விருந்தினன். ஆகவே விருந்தாளியின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

(வாசல் வரை சென்று மல்லிகாவைப் பார்க்கிறான்)

மல்லிகா... "உபசரிப்பதில் எந்தக் குறைவும் இருக்க வேண்டாம்." விருந்தாளி பல வருடங்களுக்குப் பிறகு வந்துள்ளார் மறுபடியும் வருவாரோ இல்லையோ என்று தெரியாது.

(பொருள் பொதிந்த பார்வையோடு இருவரையும் நோக்கிவிட்டுச் சென்று விடுகிறான். மல்லிகா முகத்தை மூடிய கைகளை எடுத்துக் காளிதாஸை நோக்குகிறாள். சில விநாடிகள் இருவரும் அமைதியாக இருக்கின்றனர்)

மல்லிகா : நீ என்ன நினைவில் ஆழ்ந்துவிட்டாய்?

காளிதாஸ் : அதே ஆடி மாதத்தில் அதே மாதிரியான ஒரு நாள். அதே மாதிரியாகவே பள்ளத்தாக்கு முழுமையிலும் மேகக் கூட்டங்கள். நேரமற்ற நேரத்திலேயே இருட்டு சூழ்ந்து கொண்டிருந்தது. நான் அடிபட்ட ஒரு மான்குட்டியைப் பார்த்து அதை இங்கு எடுத்து வந்தேன். நீ அதற்குத் தேவையான சிகிச்சையும் அளித்தாய் என்பதை இப்பொழுது நினைக்கிறேன்.

(மல்லிகா எழுந்து அவன் அருகில் செல்கிறாள்)

மல்லிகா : மேலும் ஏதாவது நினைத்துக் கொண்டிருப்பாய் அல்லவா?

காளிதாஸ் : ஆம்... அதே பரந்த மலை. அடிவாரம் மலை முகட்டை நோக்கிச் செல்லும் அதே வழி. காற்றிலும் அதே ஈரத்தன்மை. அதே சூழ்நிலை. அதில் ஒலிக்கும் அதே ஒலிகள்.

மல்லிகா : மேலும்...? அதாவது நடுக்கத்தை ஏற்படுத்தும் அதே உணர்வுகள். ஆவேசத்தை எழுப்பக்கூடிய அதே மனது. ஆனால்...

(மல்லிகா பேச்சற்று அவனை நோக்குகிறாள். காளிதாஸ் அங்கிருந்து நகர்ந்து இருக்கையின் அருகில் வருகிறான். அங்கிருந்து ஓலைச் சுவடியைக் கையில் எடுத்துக் கொள்கிறான்)

காளிதாஸ் : ஆனால்... இந்த வெறுமையான ஓலை நறுக்குகளில் அப்பொழுது மகாகாவியம் எழுதப்பட்டிருக்கவில்லை.

மல்லிகா : ஆனால் புதிய பொருளோடு எழுத ஆரம்பிக்க விரும்புவதாக நீ கூறிக் கொண்டிருந்தாயே.

(காளிதாஸ் பெருமூச்சு விடுகிறான்)

காளிதாஸ் : ஆம்.... சொன்னேன்... புதிய பொருளிலிருந்து ஆரம்பிக்க விரும்புகிறேன் என்று. ஆனால்.... அது ஆவல் நிறைந்த காலத்தோடு போராட்டமும் நிறைந்திருந்த காலம். ஆனால் இன்று நான் காலம் கடந்திருப்பதைக் காண்கின்றேன். ஏனென்றால்...

மல்லிகா : ஏனென்றால்...

(உள் பகுதியிலிருந்து பெண் குழந்தை அழும் குரல் கேட்கிறது. மல்லிகா வேகமாக உள்ளே செல்கிறாள். காளிதாஸ் ஓலைச் சுவடியினை இருக்கையின் மீது வைத்துத் தனக்குத்தானே பதில் கூறிக்கொள்கிறான்)

காளிதாஸ் : ஏனென்றால்... "காலம் யாரையும் எதிர்பார்த்துக் காத்திருக்காது".

(மின்னல்கள் மின்னுகின்றன. மேகங்கள் இடிக்கின்றன. காளிதாஸ் ஒரு தடவை நாலாபக்கமும் நோக்குகிறான். பின்னர் ஜன்னலுக்கு அருகில் செல்கிறான். மழை பொழியத் தொடங்குகிறது. அவன் மறுபடியும் இருக்கைக்கு அருகில் வந்து ஓலைச் சுவடியினைக் கையில் எடுத்துப் பார்த்து மறுபடியும் அங்கேயே வைத்து விடுகிறான். உள்பக்கம் ஒரு தடவை நோக்கிவிட்டு வாயிலுக்கு வந்துவிடுகிறான். விநாடி நேரம் யோசித்தவாறு நின்று மறுபடியும் வெளிப்பக்கத்திலிருந்து இரு கதவுகளையும் மூடி விடுகிறான். மழையும் இடியும் வலுக்கின்றன. சிறு விநாடிகளுக்குப் பிறகு பெண் குழந்தையை மார்போடு அணைத்து மல்லிகா அங்கிருந்து வருகிறாள். காளிதாஸ் அங்குக் காணப்படாததால் ஜன்னல் அருகில் ஓடிச் செல்கிறாள்)

மல்லிகா : காளிதாஸ்...!

(அதே மாதிரியாகவே ஜன்னலைவிட்டுச் சென்று வாயிற் கதவுகளைத் திறக்கிறாள்)

காளிதாஸ்....!

(கால்கள் வெளிப்புறம் முன்னேறுகின்றன. ஆனால் பெண் குழந்தையைக் கையில் பார்த்துவிட்டு அங்கேயே நின்று விடுகிறாள். பின்பு உடைந்து இருக்கும் இருக்கையில் அமர்ந்து குழந்தையை மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டு அழுதவாறே முத்தமிடுகிறாள். அடிக்கடி மின்னல்கள் மின்னுகின்றன மேகங்கள் இடிக்கின்றன).

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர்உரை நூற்பா எண்–53, 1970.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை நூற்பா எண்–53, 1985.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, மெய்ப்பாட்டியல், நூற்பா எண்–3, 1985.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர்உரை, செய்யுளியல், நூற்பா எண்–505, 1974.
5. மேற்கோள்:சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை, ப.70, 1944.
6. மேற்கோள் : சேரன். மு. இந்திய நாடகம் ஒரு கூர்ந்த கண்ணோட்டம், ப.241, 1996.
7. மேலது, ப. 241.
8. மேலது, ப. 241.
9. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணை இயல் நூற்பா–36, 1970.
10. பெரும்பாணாற்றுப்படை பாடல் வரி–55.
11. ஜான் ஆசிர்வாதம், தமிழர் கூத்துக்கள், பக்.11–17, 1985.
12. Sivathamby, K., Drama in Ancient Tamil Society, pp.251-267, 1981.
13. Ibid, p. 258.
14. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, ப.79, 1944.
15. விசாலாட்சி, ச., சிலப்பதிகாரத்தில் நாடகக் கூறுகள் – வெளியிடப் படாத முனைவர் பட்ட ஆய்வேடு, ப.10, 1995.
16. சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை, ப.79, 1944.
17. சேரன், மு. இந்தியநாடகம் ஒரு கூர்ந்த கண்ணோட்டம், ப.242, 1996.
18. Dr. T.P. Meenakshisundaram, 61th Birthday Commemorative Collected papers, Volume I, p.66, 1961.
19. 'There is no drama in that age. There are the actors porunars and the dancers and the Cankam poems speak of puranic on mythological scenes painted on the walls. This folk dramas however have not developed any literary form. Dramatic movements and verses do not add upto drama. This is why there is not a single drama coming from Cankam poet. It may be that their theory of poetry stood in this way of handling the folk drama in a poetic way'. - Sivathamby, K., Drama in Ancient Tamil Society, p. 90, 1981.
20. சூர்ய நாராயண சாஸ்திரியார், வி.கோ. நாடகவியல், ப.7, 1934.
21. சக்தி பெருமாள், தமிழ் நாடக வரலாறு, 1979.
22. ராமசாமி, மு. தமிழ் நாடகம் நேற்று இன்று நாளை, ப.18, 1990.
23. பெருமாள், ஏ.என். 20ம் நூற்றாண்டு தமிழ், நாடகம், ப.28, 1988.
24. ராமசாமி, மு. தமிழ் நாடகம் நேற்று இன்று நாளை, ப.18, 1990.
25. ராமசாமி, மு. தெருக் கூத்து நடிப்பு, ப.1., 1998.
26. ராமசாமி, மு. தமிழ் நாடகம் நேற்று இன்று நாளை, ப.18, 1990.
27. ராமானுஜம், சே. இந்திய நாடகக் கலை–வாழ்வியல் களஞ்சியம், ப. 459, 1991.

28. பிரபு சாவ்லா, ப.ஆ., இந்தியா டுடே இலக்கிய மலர்–2000– தலையங்கம்.
29. அறந்தை நாராயணன், சினிமாவின் கதை, 1981.
30. கிருஷ்ணமூர்த்தி, கு.சு. தமிழ் நாடக வரலாறு, 1979, ப.11.
31. பழனி, கோ. தெருக்கூத்து பனுவலும் நிகழ்த்துதலும், வெளியிடப் படாத பிஎச்.டி. ஆய்வேடு, ப.1,1996.
32. ராமானுஜம், சே., இந்திய நாடகக் கலை – வாழ்வியல் களஞ்சியம், ப.459, 1991.
33. வெளி ரங்கராஜன், தமிழ் நாடகச் சூழல் ஒரு பார்வை, ப.152, 2000.
34. **Suresh Awasthi, Encyclopaedia of World Theatre, p.26, 1985.**
35. **Ibid. p.27.**
36. சந்திரகுப்த வித்யாலங்கார், தொ. ஆ., ஹிந்தி ஓரங்க நாடகங்கள் (முன்னுரையிலிருந்து) தமிழில் : எம்.வி. வெங்கட்ராமன், ப. 5, 1978.
37. மேலது, ப.6.
38. **Suresh Awasthi, Encyclopaedia of World Theatre, p.38, 1985.**
39. அஸ்வகோஷ், அரங்க ஆட்டம், ப.210, 1998.
40. மேலது, ப.210.
41. **Suresh Awasthi, Encyclopaedia of World Theatre, p.38. 1985.**
42. அஸ்வகோஷ், அரங்க ஆட்டம், ப. 211, 1998.
43. மேலது, ப.212.
44. சந்திரகுப்த வித்யாலங்கார், தொ.ஆ., இந்தி ஓரங்க நாடகங்கள் முன்னுரையிலிருந்து - தமிழில் எம்.வி. வெங்கட்ராமன், ப.10, 1978.
45. **Suresh Awasthi, Encyclopaedia of World Theatre, p.39, 1985.**
46. பிரதிபா அகர்வால், இந்திய இலக்கியச் சிற்பிகள் – மோஹன் ராகேஷ், தமிழில் : அகிலா சிவராமன், ப.50, 1999.
47. மேலது, ப.51.
48. மேலது, ப.102.
49. மேலது, ப.74.
50. மோஹன் ராகேஷ், பரிவேஷ்–கட்டுரைத் தொகுப்பு, ப.7, 1967.
51. மேலது, ப.13.
52. மேலது, ப.14.
53. மேலது, ப.22.
54. கமலேஷ்வர், மேரா ஹம்தம் மேரா தோஸ்த், ப.8, 1975.
55. மோஹன் ராகேஷ், மோஹன் ராகேஷ் கி டயரி, நாட்குறிப்பு–28.7.1957, 1985.
56. அனிதா ராகேஷ், சந்த் சத்ரேன் ஒளர், ப.98, 1975.
57. மேலது, ப.101.
58. மேலது, பக்.95–96.
59. பிரதிபா அகர்வால், இந்திய இலக்கியச் சிற்பிகள்–மோஹன் ராகேஷ், தமிழில் : அகிலா சிவராமன், ப.49, 1999.
60. மோஹன் ராகேஷ், பகல் மகுத் (கட்டுரை), ப.112, 1974.
61. பிரதிபா அகர்வால், இந்திய இலக்கியச் சிற்பிகள்–மோஹன் ராகேஷ் தமிழில் : அகிலா சிவராமன், ப.81, 1999.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	280.00
மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள்	40.00
தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை	250.00
தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி	225.00
அரங்கேற்று காதை ஆராய்ச்சி	140.00
பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள்	45.00
இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம்	60.00
பழந்தமிழ் அறிவியல்	45.00
நீறணி பவளக்குன்றம்	35.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1	100.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2	100.00
நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
குளோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம்	60.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி	30.00
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	30.00
சிறுபஞ்மூலம்-ஒருசமூகவியல் பார்வை	30.00

---

644 இந்தி நாடகப் பனுவல் (ஆடி மாதத்தில் ஒரு நாள்) **50.00**